
கல்கி
KALKI
18.4.2004
ரூ.6.00
தெலுங்கு தேச
முள்!
உள்ளே...
இளைக்கலாம் அழகாக!
மினி கல்கி


KPN
Travels India Ltd.
K.P.N



கல்கி

18.4.2004

ஊருக்கு உழைக்கும் சொல்தாக்கள்!





சமீபத்தில் பாண்டிச்சேரிக்குச் சென்ற நம்மை 'கைது' செய்து ஒரு மணி நேரம் 'பிலு, பிலு' என்று பிடித்து விட்டார்கள் சொல்தாக்கள் (சோல்தாக்கள் அல்ல). சொல்தாக்களின் கோபத்துக்குக் காரணம், "பிரான்ஸ் நாட்டிலிருந்து அனுப்பப்படும் ஓய்வூதியத்தில் இந்த சொல்தாக்கள் 'சொகுசு' வாழ்க்கை வாழ்கிறார்கள்; சொன்ன விலையில் எந்தப் பொருளையும் வாங்கி விடுவதால், பாண்டியில் விலைவாசி ஏற்றத்துக்கு இவர்கள் காரணமாகி விடுகிறார்கள்" என்று பொதுவாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டை, 'கல்கி'யில் சில மாதங்களுக்கு முன் எழுதியதுதான்.

"பல போர் முனைகளைச் சந்தித்து, பல இன்னல்களைச் சமாளித்து, கிடைக்கும் ஓய்வூதியத்தில் ஓரளவு சந்தோஷமாக வாழ்ந்து வருகிறோம். புதுவையில் விலை உயர்வுக்கு நாங்கள் காரணமல்ல. சொல்தாக்கள் காலத்தை விரயமாக்காமல், வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். பொதுப்பணியிலும் பங்கு கொள்கிறார்கள்" என்கிறார் சொல்தா பிஷா பலராமன். அதற்குள் இடை புகுந்த மற்றொரு சொல்தா ஆதிகேசவலு, "ஸார் நாங்கள் ராணுவத்தில் இருந்ததால், குடிப்பழக்கம் உண்டு என்பதை ஒப்புக்

கொள்கிறோம். எங்களில் பலர் இயல்பான வகையில் அந்தப் பழக்கத்துக்கு ஆளாகி இருக்கிறோமே தவிர, மற்ற பிரிவினரைப் போல பணத்தைத் தண்ணீராகச் செலவழித்து, போதைக்காகக் குடிப்பதில்லை. நான் ராணுவ அதிகாரியாக இருந்தவன். ஆனால் எனக்கு குடிப்பழக்கமே கிடையாது" என்றார்.

சொல்தாக்கள் அனைவரும் சேர்ந்து 'கருணைக் கடல்' என்ற நற்பணி அமைப்பை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். "அன்ன தானம், ஆடைகள் வழங்குதல், பாடப் புத்தகங்கள் தருதல் என்று தொண்டு செய்து வருகிறோம்!" என்றார் செவாலியே துபாய் குழந்தை. "தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம், கோயில் திருவிழாக்களுக்கு நன்கொடை என்று தாராளமாகவே வழங்குகிறோம்" என்றார் சண்முகம் கோபாலகிருஷ்ணன்.

ஜான் குப்புசாமி என்ற சொல்தா தமது சொந்தச் செலவில், உழவர்கரையில் 'அன்பரசி மாதர் சங்க சிறுவர் இல்லம்' என்ற அமைப்பை நடத்தி வருகிறார். ஆதரவற்ற ஐம்பது பெண் குழந்தைகள் இந்த இல்லத்தில் வளர்கிறார்கள். யாருடைய உதவியும் எதிர்பாராமல் இந்த சொல்தா செய்து வரும் சமூகப் பணி, நெகிழ வைக்கிறது.



"நாங்கள் சோம்பல் முறித்து எழ பத்து மணி ஆகிவிடும் என்று எழுதியிருக்கிறீர்கள். காலை வேளையில் கடற்கரைக்கு வாருங்கள். அங்கு உடற்பயிற்சி செய்பவர்களில் எழுபது சதம் சொல்தாக்கள் என்பது புரியும். பல நல்ல பணிகளைச் செய்யும் நாங்கள், விளம்பரப்படுத்திக் கொள்வதில்லை" என்றார் சொல்தா முருகன் நாகமுத்து.

"நீங்கள் ஊருக்கு உழைக்கும் சொல்தாக்கள் தாம். பிடியுங்கள் பாராட்டுகளை" என்று சொல்லி, ராணுவப் பிடியிலிருந்து எஸ்கேப் ஆனோம்.

- ஸ்ரீநிவாசன்

படம் : ராஜன்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited.
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

தமது பிரசாரத்தை திருநெல்வேலியில் திடீரென்று நிறுத்தி விட்டார் ஜெயலலிதா. 2001 சட்டமன்றத் தேர்தல் சமயம் அது! சுற்றுப் பயணத்தை அப்போது ஏற்பாடு செய்த ஓ.எஸ். மணியனுக்கும், புலவர் சங்கரலிங்கத்துக்கும் ஒன்றும் புரியவில்லை. தனியாகச் சென்று அம்மாவைப் பார்த்தார்கள். "போகிற பாதை, பேச ஏற்பாடு செய்திருக்கும் இடங்கள், கூடும் கூட்டம் ஆகியவை கொஞ்சங்கூடத் திருப்தியாக இல்லை. உடனே செங்கோட்டையனைக் கூப்பிடுங்கள்" என உத்தரவிட்டு விட்டார் அம்மா. அந்தச் சமயத்தில் அவரது அருட்பார்வையில் இருந்து விலக்கப்பட்டு இருந்தார் செங்கோட்டையன். அழைப்பு வந்ததும் பறந்து சென்று சுற்றுப்பயணத்தை அமைத்து, அவரது மனம் கோணாத அளவுக்குப் பிரசாரக் கூட்டத்தை வெற்றிகரமாக முடித்துக் கொடுத்தார் செங்கோட்டையன். அது மட்டுமா? இப்போது ஜெ. செய்து கொண்டிருக்கிற தேர்தல் பயணத்தை ஏற்பாடு செய்து நடத்தி வருபவரும் அவர்தான். ஆனால் தேர்தல் அறிவிப்பு வருவதற்கு முன்னர், அவரை தலைமை நிலையச் செயலாளர் பொறுப்பிலிருந்து நீக்கியிருந்தார் ஜெ. செயற்குழுவுக்கும் அழைப்பு இல்லை. கொளப்பாக்கம் நேர்காணலுக்கு ஒருநாள் கூட செங்கோட்டையன் செல்லவில்லை. இருந்தும் தேர்தல் சுற்றுப்பயணம் என்றதும் அழைக்கப்பட்டு விட்டார்.

தேர்தலின் நாயகனேச்ச்ச்!



• ரொம்ப பிஸி!

கட்சியில் தமது நிலை என்னவாக இருந்தாலும், அம்மா கட்டளையிட்டதும் ஓடோடி வந்து களத்தில் குதித்து உதவுபவர் செங்கோட்டையன். 1996, 1998, 1999ம் வருடங்களில் நடந்த தேர்தல்களிலும் ஜெ. பிரசாரத்தைத் திட்டமிட்டு நடத்திக் கொடுத்தவர் செங்கோட்டையன்தான். ஆளுங்கட்சியாக இருக்கும் போது போலீஸ் பாதி வேலைகளைச் செய்து விடும் என்றாலும், ஆளுங்கட்சியாக இல்லாத சமயங்களிலும் அம்மா எந்த வசதிக் குறைவுக்கும் ஆளாகாமல் பார்த்துக் கொள்பவர் செங்கோட்டையன்தான். இவரைத் தேர்தல் நாயகன் என்றும் பைலட் கவுண்டர் என்றும் செல்லமாகக் கட்சி வட்டாரத்தில் அழைக்கிறார்கள். தமிழ் நாடு முழுவதும் சாலைப் போக்குவரத்துப் பாதைகளை விரல் நுனியில் வைத்திருப்பவர்.

ஜெயலலிதா சுற்றுப் பயணத்தை ஏற்பாடு செய்வது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. ஒருநாளைக்கு நாற்பது கி.மீ. பயணம், ஆறு அல்லது எட்டு பாயிண்டுகளில் பேசுவது, இரண்டு பொதுக் கூட்டங்கள் என்ற அளவில் ஏற்பாடு செய்ய வேண்டும். பத்து நாட்கள் முன்னரே சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சென்று, பாதை, மற்றும் பேச வேண்டிய பாயிண்டுகளைத் தீர்மானித்து வருகிறார் செங்கோட்டையன். அது பற்றி காவல் துறைக்குச் சொல்லி விடுகிறார். அதன் பிறகு பாதுகாப்பு அம்சங்களை





காவல் துறை அதிகாரி மனோகர் பொறுப்பெடுத்துக் கொள்கிறார். மாவட்டச் செயலாளருடனும் தொகுதி பொறுப்பாளரான அமைச்சருடனும் கலந்து பேசி, பொதுக் கூட்ட இடங்கள் முடிவு செய்யப்படுகின்றன. பாதையை மாற்றும் முழு அதிகாரமும் செங்கோட்டையனுக்கு உண்டு. இது தவிர, தங்கும் இடங்களைத் தீர்மானித்து அங்கு ஜெனரேட்டர், லிஃப்ட் போன்ற வசதிகள் இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ள வேண்டும். போயஸ் தோட்டத்து சமையல்காரர்கள் இருவர் கூடவே வருகிறார்கள்.

முதல் நாள் இரவு பிரசாரம் எத்தனை மணிக்கு முடிந்தாலும், மறுநாள் ஜெ. சுற்றுப்பயணம் செய்ய விருக்கும் பாதையை இரவே சென்று பார்க்கிறார் செங்கோட்டையன். அம்மா தங்கியிருக்கும் இடத்துக்கு காலை பதினொரு மணிவாக்கில் செல்கிறார். ரூட், கட்சிப் பிரமுகர்களைப் பற்றிய விவரங்கள், அந்தப் பகுதியின் லோக்கல் பிரச்னைகள் ஆகியவற்றைப் பற்றி அம்மா கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்கிறார். அம்மா பேச வேண்டிய பாயின்டுக்கு ஐந்து நிமிடம் முன்னதாகவே வந்து விடுகிறார். கட்சிக்காரர்களை ஒழுங்குபடுத்தி நிற்க வைக்கிறார். முக்கியஸ்தர்களை அழைத்து கடைசி நேர உத்தரவுகளைப் போடுகிறார். செங்கோட்டையனின் அன்பு கலந்த கண்டிப்புக்கு, அமைச்சர்கள் கூடத் தப்புவதில்லை. தமிழ்நாடு முழுவதும் புதிய, பழைய கட்சிக்காரர்கள் எல்லோரையும் செங்கோட்டையனுக்குத் தெரியும். எந்த நிலையிலும் கட்சியை விட்டுக் கொடுக்காதவர். 1996 – 97ல் தி.மு.க.வில் இவரைச் சேர்க்க பெருமுயற்சி நடந்தது. ஆனால், "நான் இறந்தால் என் மீது அண்ணா படம் போட்ட கழகக் கொடிதான் போர்த்த வேண்டும்'' என்று மறுத்தவர் இவர்.

போலீஸ் போடும் பாதுகாப்பு வளையத்தைக் கொஞ்சம் தளர்த்தி, அம்மாவைச் சூழ்ந்து மக்கள் நிற்கும்படி ஏற்பாடு செய்ய இவருக்கு முழு உரிமை உண்டு. அதே போல் இரவு பத்து மணிக்குள் குறிப்பிட்ட இடத்தை அடைய வேண்டும் என்றால், பேச வேண்டிய பாயின்டுகளைத் தவிர்க்கும் அதிகாரமும் இவருக்கு உண்டு. கான்வாய் பயணத்தில் இருக்கும் போது, சசிகலா, அம்மாவின் உதவியாளர் வெங்கடாசலம், தலைமை நிலையப் பொறுப்பாளர் மகாலிங்கம் ஆகியோர் மூலம்

முதல் வண்டியில் இருக்கும் செங்கோட்டையனுடன் செல்போனில் தகவல்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. ஆளுங்கட்சியாக இருக்கும் சமயத்தில் சில சமயங்களில், செங்கோட்டையனின் அம்பாஸிடர் காரில் அம்மாவின் சிறப்புப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த அதிகாரிகளும் பயணம் செய்வதுண்டு. அதனால் போலீஸ் மைக்கில் பல செய்திகளும், வழிகாட்டுதலும் வரும்.

அம்மாவின் வசதிகளைக் கவனித்துக் கொள்வது மட்டுமல்லாமல், கான்வாயில் போகிற இருபது, முப்பது வண்டிகளில் உள்ளவர்களின் தேவைகளையும் கவனித்துக் கொள்வது செங்கோட்டையனின் பொறுப்புதான். இதற்காக இவரைப் போலவே மின்னல் வேகத்தில் செயல்பட உதவியாளர்கள் இருக்கிறார்கள். சமீபத்தில் சென்னை பிரசாரத்தின் இரண்டு நாட்களில் ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் இனிப்பு, காரம், பாட்டில் தண்ணீர் எல்லாவற்றையும் கனகச்சிதமாக கான்வாய் வண்டிக்குள் போட்ட உதவியாளர்களின் சுறுசுறுப்பைப் பார்க்க முடிந்தது. பத்திரிகையாளர்கள் தங்க வேண்டிய இடங்கள், அவர்களுக்குத் தேவையான வசதிகளையும் செங்கோட்டையன்தான் கவனித்துக் கொள்கிறார்.

அம்மா டூர் இப்போது ஹைடெக்காகி விட்டது. தலைமை நிலைய புகைப்படக்காரர் ரூபன் எடுக்கும் படங்கள், கான்வாயில் வரும் மென்பொருள் பொறியாளர் அருணிடம் கொடுக்கப்பட்டு விடுகின்றன. அவர் செல்போன், லேப்டாப், ஸ்கேனர் உதவியுடன், படங்களை உடனுக்குடன் போயஸ் தோட்டத்துக்கும், 'நமது எம்.ஜி.ஆர்.' அலுவலகத்துக்கும் அனுப்பி விடுகிறார். இப்போதெல்லாம் கம்ப்யூட்டருக்குத் தேவையான பொருள்களைச் சாதாரண சிறு நகரங்களிலும் தேடிப் பிடித்து வாங்கித் தரும் பொறுப்பும் இவருடையதுதான்.

செங்கோட்டையன் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு கான்வாயில் வேகமாக ஓடுவதைப் பார்க்கும் போது, மிடுக்கான இருபது வயது வாலிபன்தான் நினைவுக்கு வருவான்.

"அவர் செய்யும் வேலையை யாரும் செய்ய முடியாது" என்று அ.இ.அ.தி.மு.க. பிரமுகர்களே ஒப்புக் கொள்கிறார்கள்.

— ப்ரியன்

படங்கள் : மீடியா ராமு

சங்கீத சீனர்!



சம்ஸ்கிருதத்தில் தீட்சிதர் கிருதி (ஸ்ரீகுருகுஹ), கேதாரத்தில் தியாகராஜரின் ராமா நீ பய், கமாஸ் ராகத்தில் சுஜன ஜீவன, ராகமாலிகையாக பாரதியாரின் தீராத விளையாட்டுப் பிள்ளை, கடைசியில் சாந்தி நிலவ வேண்டும் - என்று பாடவும் சிரமமில்லாமல் பாடினார் சென். இதிலென்ன சிறப்பு என்கிறீர்களா...? சென் சிறப்பாகப் பாடினார் என்பது சிறப்பு. அவர் ஒரு சீன இளைஞர் என்பது அதை விடச் சிறப்பு! சோங் ஷ்யூ சென்!

ஸ்ரீராம்குமார் வயலின் வாசிக்க, மனோஜ் சிவா மிருதங்கம் வாசிக்க, சுமார் ஒன்றரை மணி நேரத்துக்குக் கர்நாடக இசை பொழிந்தார்.

டி.கே. பட்டம்மாளிடம் மூன்று மாத இடைவிடாத இசைப் பயிற்சி. அதற்கு முன்பே சிங்கப்பூரில் ஒரு கர்நாடக இசைக் கலைஞரிடம் ஆரம்ப காலப் பயிற்சிகள்.

பாட முடியும் என்ற நம்பிக்கை தந்தவர் டி.கே. பட்டம்மாள்தானாம். மேடை கொடுத்து ஊக்குவித்தவர் 'நாத இன்பம்' எஸ்.வி. கிருஷ்ணன்.

"சென்னின் சகோதரி கர்நாடக இசையில் வயலின் கற்றுக் கொள்கிறார், தெரியுமோ?" என்கிறார் ஸ்ரீராம்குமார். ஜார்ஜ் ஃபெர்னாண்டஸ் காதுகளுக்குத் தேனான செய்தி!

- சித்தார்த்

புகைப்படம் : ஏ.எல்.ஏ.ஆர். நாராயணன்

வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்ள வாருங்கள்!

வாருங்கள். தாரண தமிழ்ப் புத்தாண்டில், சிறப்பான வாழ்க்கை நிலைக்கு உயர்ந்து, உங்கள் குடும்பத்தில் சந்தோஷமும், செழிப்பும் நிறைய வழி கோலுங்கள்.

ஸ்ரீராம் சீட்டுத் திட்டம்: மாதந்தோறும் சேமித்து, அதிலிருந்தே கடன் பெறவும் வகை செய்யும் இருவழி சேமிப்பு முதலீட்டுத் திட்டம். சீட்டு ஏல உச்ச வரம்பு 40% ஆனதால் கசறுத் தொகை (Dividend) உயர்ந்து வருகிறது.


இன்றே ஸ்ரீராம் சிட்ஸ் கிளைக்கு வாருங்கள். சிறுகச் சேமித்து செல்வச் செழிப்பு பெறும் கலையையும், குறைந்த வட்டியில் கடன் பெறும் நுட்பத்தையும் அறிந்து கொள்ளுங்கள்.



3-13 ஏப்ரல் '04

ஸ்ரீராம் சிட்ஸ் சிறப்புகள்: ♦ 30 ஆண்டுகளாக பல லட்சம் குடும்பங்களின் முன்னேற்றத்திற்கு வழி காட்டி ♦ ரூ.12,000 கோடிக்கு மேல் சீட்டுத் தொகை பட்டுவாடா ♦ பலருக்கு வேலை வாய்ப்பு ♦ தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா மாநிலங்களில் 465க்கும் மேற்பட்ட கிளைகள்.

தாரண சித்திரை விழாவிற்கு தன்னிகரற்ற பரிசுகள்!



பிரெஸ்டிஜ் ஹீரோ மிக்ஸி (ரூ.5,00,000 சீட்டு)


செல்லோ எக்ஸிகியூட்டிவ் லஞ்ச்செட் (ரூ.3,00,000 சீட்டு)


செல்லோ பிரேக்ஃபாஸ்ட் செட் (ரூ.2,00,000 & ரூ.1,50,000 சீட்டு)


காஸி எஸ்.எஸ். குக்பேன் (ரூ.1,00,000 சீட்டு)


எஸ்.எஸ். டப் கன்டெய்னர் (ரூ.75,000 சீட்டு)


பிரைம் ஸ்டோர்வெல் (ரூ.50,000 சீட்டு)


செல்லோ யுனிவர்சல் செட் (4) (ரூ.30,000 & ரூ.25,000 சீட்டு)


எஸ்.எஸ். மீல்ஸ் பிளேட் (ரூ.20,000 & ரூ.15,000 சீட்டு)

சீட்டு மதிப்பு	சந்தாதாரர் பரிசுகள்
ரூ.15,000	எஸ்.எஸ். மீல்ஸ் பிளேட்
ரூ.20,000	எஸ்.எஸ். மீல்ஸ் பிளேட்
ரூ.25,000	செல்லோ யுனிவர்சல் செட் (4)
ரூ.30,000	செல்லோ யுனிவர்சல் செட் (4)
ரூ.50,000	பிரைம் ஸ்டோர்வெல்
ரூ.75,000	எஸ்.எஸ். டப் கன்டெய்னர்
ரூ.1,00,000	காஸி எஸ்.எஸ். குக்பேன்
ரூ.1,50,000	செல்லோ பிரேக்ஃபாஸ்ட் செட்
ரூ.2,00,000	செல்லோ பிரேக்ஃபாஸ்ட் செட்
ரூ.3,00,000	செல்லோ எக்ஸிகியூட்டிவ் லஞ்ச்செட்
ரூ.5,00,000	பிரெஸ்டிஜ் ஹீரோ மிக்ஸி

♦ நுழைவுக் கட்டணம் தனி ♦ முன் அனுமதி பெறப்பட்டது
♦ தொடர்பான சீட்டில் சேருவோருக்கும் சந்தாதாரர் பரிசு உண்டு

ரூ.1.5 லட்சம் இன்சூரன்ஸ் இலவசம்!*

ரூ.1 லட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட சீட்டுகளில் சேரும் சந்தாதாரர்களுக்கு திருட்டு, தீ விபத்து, தனி நபர் விபத்து ஆகியவற்றுக்கு, 1 ஆண்டுக்கு, தலா ரூ.50,000 காப்பீடு அளிக்கும் ரிலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனியின் ரூ.1.5 லட்சம் மதிப்புள்ள இன்சூரன்ஸ் பாலிசி இலவசம்.

*நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டது

துப்பாக்கி முழங்க முதல் அடி!



தமிழக எல்லையை ஒட்டியுள்ள ஆந்திர மாநிலச் சிற்றூரான நகரி, ரொம்ப சாதுவான ஊர்தான். ஊரின் சந்து பொந்துகளையும், சுற்றுப் பத்து கிராமங்களையும் சுற்றி வந்தால் விசைத்தறி ஓடும் சத்தத்தைத் தவிர வேறு எதுவும் கேட்காது. தங்கள் ஊர், தினசரிப் பத்திரிகையில் எட்டுக் காலத்தில் இடம் பெறும் என்ற அந்த மக்கள் சிறிதும் எதிர் பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் அது நடந்துவிட்டது. கல்வீச்சு, கார் கண்ணாடிகள் உடைப்பு, குண்டாந்தடி தாக்குதல், துப்பாக்கிச் சூடு என்று நகரி அமர்க்களப்பட்டுவிட்டது. இதற்கு ஒரு வகையில் காரணமாகிவிட்டார் நடிகை ரோஜா! துப்பாக்கிச் சூடு சத்தத்தோடு அரசியலில் முதலடி எடுத்து தேர்தலில் போட்டியிட மனு தாக்கல் செய்தார் அவர்.

ரோஜா பாராளுமன்றத்துக்குப் போட்டியிடுவார் என்று வதந்தி அடிபட்டுக் கொண்டிருந்த நிலையில், அவரை நகரி தொகுதி சட்டமன்ற வேட்பாளராக அறிவித்துவிட்டது தெலுங்கு தேசம். அங்கே தான் சிக்கல். நகரி தொகுதியில், தெலுங்கு தேச முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், திரைப்பட தயாரிப்பாளர் துரைசாமி ராஜு, ஒரு முக்கியப் பிரமுகர். அவருக்குத்தான் அந்த ஸீட் என்று உறுதியளிக்கப் பட்டிருந்தது. எனவே ராஜு தைரியமாகச் சென்று மனு தாக்கல் செய்தார். செய்துவிட்டு ஆதரவாளர்களோடு வெளியே வந்தவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ரோஜாவை வேட்பாளராகப் போட்டிருப்பதாக ஹைதராபாத்திலிருந்து. தகவல். கொந்தளித்துப் போய்விட்டார்கள் ஆதரவாளர்கள். சாலை மறியல், கொடும்பாவி எரிப்பு என்று நகரியைக் கலக்கிவிட்டார்கள்.

பதினொரு மணிக்கு நகரிக்கு வந்து சேர்ந்தார் ரோஜா. அவர் அங்கு தங்கிய வீடு ராதாகிருஷ்ணன் என்பவரது வீடு. இந்த ராதாகிருஷ்ணன், ஹைதராபாத்தில் தெலுங்கு தேச தலைமையகத்தில் செயலாளராக இருக்கிறார்.

ரோஜா தங்கியிருந்த இடத்திலிருந்து சரியாக இரண்டு கி.மீ. தூரத்தில் திருப்பதி சாலையில் இருக்கிறது மண்டல வருவாய்த் துறை அதிகாரி அலுவலகம். அங்கே தான் மனு தாக்கல் செய்ய வேண்டும். அலுவலகத்தின் எதிரில் ஷாமியானா போட்டு, நடு ரோட்டிலேயே தமது ஆதரவாளர்களோடு பேசிக் கொண்டிருந்தார் துரைசாமி ராஜு. கூட்டம் சந்திரபாபு நாயுடுவைக் கண்டித்தது. "வரட்டும்... ரோஜா" என்று கையில் கற்களுடனும், கடுப்புடனும் காத்துக் கொண்டிருந்தது. அவர்களை நன்றாக முறுக்கேற்றிவிட்டுக் கிளம்பிவிட்டார் துரைசாமி ராஜு.

தங்கியிருந்த இடத்திலிருந்து சரியாக இரண்டே கால் மணிக்குப் புறப்பட்டார் ரோஜா. அவரது காரைத் தொடர்ந்து நான்கு கார்கள். அலுவலகத்தை நெருங்க நெருங்க, காரில் இருந்தவர்களுக்கு பயமும், பரபரப்பும் கூடிவிட்டது. தூரத்திலிருந்தே கார்களின் அணி வகுப்பை பார்த்துவிட்ட கூட்டம். "திரும்பிப் போ" என்று கோபாவேசத்துடன்



• ஆர்.கே. செல்வமணி

கனல் பறந்த கலவரம்



* தேவராஜ்

கற்களை வீசியது. லோக்கல் போலீஸ் குண்டாந்தடியை வீசி கூட்டத்தைக் கலைக்க, தேர்தல் டூட்டிக்கு வந்திருந்த எல்லைப் பாதுகாப்பு படை வானத்தை நோக்கி மூன்று முறை துப்பாக்கியால் சுட, அலுவலகத்தின் உள்ளே கார்கள் நுழைய வழி உண்டாக்கப்பட்டது. அதற்குள் கார்க் கண்ணாடிகள் உடைக்கப்பட்டு விட்டன. இறுகிய முகத்துடன் உள்ளே நுழைந்து மனுவைக் கொடுத்தார் ரோஜா. கொஞ்சம் தாமதமாக வந்த செல்வமணியின் இரண்டு நண்பர்களில், பாலாஜி (இருவர் பெயரும் ஒன்றுதான்) கூட்டத்தால் தாக்கப்பட, தலையிலும், மூக்கிலும் ரத்தம். வெளியே கூட்டம் போலீஸுக்கு கண்ணாமூச்சி காட்டிக் கொண்டு, அபாய ஆட்டம் ஆடிக் கொண்டிருந்தது. அவ்வப்போது தூறலாக விழும் கற்கள். மனு தாக்கல் படலம் இருபது நிமிடங்கள்தான். அதன் பிறகு ரோஜாவை பாதுகாப்பாக எப்படி அனுப்புவது என்ற கவலை போலீஸுக்கு வந்துவிட்டது. "உங்களுக்கு இவ்வளவு எதிர்ப்பு இருக்குதே?" என்று ரோஜாவிடம் கேட்டோம். "எல்லோரும் கட்சிக்காரர்கள்தாம். கூடிய விரைவில் சரியாகும். நானே துரைசாமி ராஜுவின் படத்தில் நடித்திருக்கிறேன். அவரைச் சந்தித்து அவரது ஆதரவைக் கோருவேன்'' என்றார் ரோஜா.



* கணேஷ்



* ஆறுமுகம்

வேறொரு காரில் ரோஜாவை ஏற்றி உள்ளே அமர வைத்ததும், கார் .ர்ரென்று கிளம்பியது. கூட்டம் ஆவேசத்தோடு ஓடிவர, மறுபடி காவல் துறை தடியைச் சுழற்ற, எல்லைப் பாதுகாப்பு படை மீண்டும் ஒரு முறை வானத்தில் சுட்டது. சிதறி ஓடிய கூட்டத்தின் நடுவே, வெட்டிப் பாய்ந்தது ரோஜாவின் கார். "எங்ககிட்ட தானே வந்து வோட்டு கேட்கணும். அப்போ பார்த்துக்கிறோம்" என்றார்கள் துரைசாமி ஆதரவாளர்கள். "ஒரு பெண்ணை எதிர்த்து வீரம் காண்பிக்கிறார்கள். எல்லாம் இரண்டு நாளில் சரியாகப் போகும். ரோஜா மேல் வெறுப்பு இருக்கலாம். ஆனால் எங்கள் சின்னம் சைக்கிள், எங்கள் தலைவர் நாயுடு" என்றார் நகரியைச் சேர்ந்த கார்த்திக். "ரோஜாவுக்கு வோட்டு போட்டு ஜெயிக்க வைக்கிறோம். ஆனால் எங்களுக்கு ஒரு பிரச்னை என வரும்போது அவரை எங்கே



* கார்த்திக்

தேடுவது. சென்னையிலா, ஹைதராபாத்திலா?" என்கிறார்கள் சிந்தலப்பட்டடை கிராமத்து தேவராஜூம், கணேசனும்.

"பள்ளிக்கூடம், கான்க்ரீட் சாலை, என மக்களுக்கு நல்லது செய்திருக்கும் நடருக்கு மாற்றாக ரோஜாவா?" என்கிறார் லோக்கல் தெலுங்கு தேச பிரமுகர் ஆறுமுகம்.

அதிர்ச்சி குன்றாத நிலையில் ரோஜா பேட்டியளித்தார் :

"சந்திர பாபு நாயுடு சிறப்பாக ஆட்சி நடத்துகிறார். ஆந்திர மக்களுக்கு சுய கௌரவத்தை மீட்டுக் கொடுத்திருக்கிறார். பெண்களுக்கு அவரது கட்சியில் தான் எல்லா உரிமைகளும் கிடைத்திருக்கின்றன. எனவேதான் தெலுங்கு தேசக் கட்சியில் சேர்ந்து, அதை பலப்படுத்தும் பணியில் ஈடுபட ஆர்வம் தெரிவித்தேன். தேர்தல் பிரசாரம் செய்வதுதான் என் நோக்கம். இங்கே நகரியில் சில நாட்கள் பிரசாரம் செய்துவிட்டு, ஆந்திரா முழுவதும் செய்யப் போகிறேன்" என்றார் ரோஜா.

இங்கிருக்கும் எதிர்ப்பில் வெற்றி பெற முடியுமா?

"நான் மனுதாக்கல் செய்த பின்னர் முதல்வர் நாயுடு என்னுடன் பேசினார். 'எல்லாம் சரியாகிவிடும். மக்களையும் கட்சிக்காரர்களையும் சமாளிக்க வேண்டியது என் பொறுப்பு. நீங்க முதலில் மனுதாக்கல் செய்யுங்க' என்று தைரியம் சொன்னார். எனவே கவலையில்லை. இன்று நடந்த கலாட்டாக்களுக்கு, காங்கிரஸ்காரர்களும் காரணம் என்று கேள்விப்பட்டேன். அவர்களும் ஊடுருவி இருக்கிறார்கள்."

ஜெயித்தால் தொகுதிக்கு என்ன செய்வதாக உத்தேசம்?

"குடிநீர்ப் பிரச்னையைத் தீர்ப்பேன். இங்கே விசைத்தறி தொழில் நசியும் ஆபத்து இருக்கிறது. அதற்குக் காரணம் சமீபத்தில் போடப்பட்ட சுங்க வரிதான். அதை நீக்க பாடுபடுவேன்."

இது துவக்கம்தான். ரோஜா தீவிர அரசியலில் குதித்தால், இன்னமும் பல அரசியல் முட்களைச் சந்திக்க வேண்டி வரும்.

- **ப்ரியன்**

படங்கள் : **மீடியா ராமு**

காமராஜரைத் தோற்கடித்தது யார்?

விழாவின் கதாநாயகர் சன் டீ.வி. அரசியல் விமர்சகர், வீரபாண்டியன். ஆனால் திமுக தலைவர் கருணாநிதியும், கம்யூனிஸ்ட் தோழர் தா. பாண்டியனும் இரட்டைக் கதாநாயகர்கள் போல, புத்தக வெளியீட்டு விழாவை அனல் பறக்கும் அரசியல் களமாக்கி, பார்வையாளர்களைப் பரவசப்படுத்தினார்கள்.




• வெளியீட்டு விழாவில்...

சுதந்திரப் போராட்டத் தியாகியான திருத்துறைப்பூண்டி திருநாவுக்கரசின் மகன்தான், சன் டீ.வி. வீரபாண்டியன். காமராஜருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தாராம் இவரது தந்தையார். இதனால், சிறு வயது முதலே காமராஜர் மீது வீரபாண்டியனுக்குக் காதல். தமது ஊடகப் பணிகளுக்கு இடையே, காமராஜரோடு பணியாற்றியவர்கள், பழகியவர்கள், அவரது அரசியல் எதிரிகள் என, பல வாழும் சாட்சிகளிடம் காமராஜரைப் பற்றி, கடந்த இருபது ஆண்டுகளாகப் பதிவு செய்த ஒலி நாடாக்களை ஆதாரமாக வைத்து, 'ஆகட்டும் பார்க்கலாம்' என்ற தலைப்பில், காமராஜரின் வாழ்க்கை நிகழ்வுகளாக வீரபாண்டியன் தொகுத்த புத்தகத்தைத்தான், கலைஞர் வெளியிட வந்திருந்தார். புத்தகத்தைப் பெற்றுக் கொண்டவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் ஜிகே. வாசன்.

தேர்தல் நேரம் என்பதால், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் பிரசாரப் பொதுக்கூட்டம் போல, தா. பாண்டியன், தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகத் தலைவர் ஜபாருல்லா, வணிகப் பேரவைத் தலைவர் த. வெள்ளையன் என்று களை கட்டிய மேடையில், வைரமுத்து, அப்துல் ரகுமான் இருவரும் கலைஞருக்கு இணக்கமாக அருகிலேயே அமர்ந்திருந்தனர். இப்படியொரு மனிதர் இரத்தம், சதையோடு நம்மிடையே வாழ்ந்தாரா என்பதைப் படிக்கும்போது, நெஞ்சு நெகிழ்கிறது என்று புத்தகத்திலிருந்து ஆளுக்கொரு சம்பவத்தை உதாரணம் காட்டிப் பேசிவிட்டு, கிட்டத்தட்ட எல்லோருமே பி.ஜே.பி.யை வெளுத்து வாங்கினார்கள்.

விவகாரம் வெடித்தது தா. பாண்டியன் பேச்சில்தான், "காமராஜரை விருதுநகரில் தோற்கடித்தது திமுக, காங்கிரஸ் கூட்டணிதான்" என்றார். விடுவாரா கலைஞர்? "அடுத்து வந்த நாகர்கோவில் நாடாளுமன்றத் தேர்தலில் காமராஜரை திமுக ஆதரித்தது. ஆனால் குடியாத்தம் இடைத்தேர்தலில் அவரைத் தோற்கடித்தது கம்யூனிஸ்டுகள்தான்" என்றதும், அரங்கத்தில் ஏகோபித்த கரவொலி. ஒரே கூட்டணிக்குள் இருந்து கொண்டு, ஒரே மேடையில், ஆரோக்கியமாக விமர்சனம் செய்து கொண்டது, பார்வையாளர்களைப் புல்லரிக்க வைத்தது. புத்தகத்தின் முதல் பத்துப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டவர்கள் அளித்த பதினாறாயிரம் ரூபாய், காமராஜர் பாலமந்திர் மாணவர் இல்லத்துக்கு, மேடையிலேயே நன்கொடையாக வழங்கப்பட்டது முத்தாய்ப்பு என்றால், காமராஜரின் வாழ்க்கை நிகழ்வுகள் புத்தகம், அவரது நினைவைப் போற்றும் காமராஜர் அரங்கில் வெளியிடப்பட்டது, கூடுதல் சிறப்பு.

- ஜெய்



நன்னடத்தையா?... கிலோ என்ன விலை?

“தனிப்பட்ட முறையிலான தாக்குதல்கள் என்றால் என்ன...? அதை முதலில் நிர்ணயம் செய்யுங்கள்” என்று எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் தேர்தல் கமிஷனிடம் கேட்டிருக்கிறார்கள். தேர்தல் நன்னடத்தை விதிகளில் இது குறித்துத் தெளிவான விளக்கம் இல்லையாம். தெளிவாக நிர்ணயம் செய்த பிறகுதான், அத்தகைய தாக்குதல்களுக் கான தடையைக் கொண்டு வர முடியுமாம்!

நன்னடத்தை விதிகளில் குறிப்பிட்டுள்ள மற்ற அம்சங் களையெல்லாம் அப்படியே இம்மி பிசகாமல் இவர்கள் கடைப் பிடித்துக் கிழித்து விட்டார்கள் அல்லவா...? அதனால்தான் இப்போது இந்த விதியை மட்டும் தெளிவு படுத்தச் சொல்லிக் கேட்கிறார்கள்!

தனிப்பட்ட முறையிலான தாக்குதல் என்றால் என்ன என் பது, அனைத்து அரசியல்வாதிகளுக்கும் வெகு நன்றாகத் தெரியும். அது மட்டுமல்ல, இவையிவை தனிப்பட்ட முறை யிலான தாக்குதல்கள் என்று நிர்ணயித்தால், அந்த நிர்ண யத்துக்கு அப்பாற்பட்ட வகையில் தனிப்பட்ட முறையிலான தாக்குதல்களை கன ஜோராக நடத்தவும் நமது அரசியல் வாதிகளுக்கு மிக மிக நன்றாகவே தெரியும்.

“சோனியா அன்னிய நாட்டவர்; அதனால் நமது நாட்டின் பிரதமராக அவரை ஏற்பது கடினம்” என்று கூறுவது சர்வ நிச்சயமாக தனிப்பட்ட முறையிலான தாக்குதல் அல்ல; ஆனால்




கல்கி



2004 ஏப்ரல் 18
தாரண சித்திரை 6
மலர் : 62
இதழ் : 38


தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



அது தனிநபர் விமர்சனம்தான்.

ஆனால், ''சோனியாவுக்கு தேசபக்திதான் இல்லையென்றால் பதிபக்தியாவது இருக்க வேண்டாமா?'' என்பது தனிநபர் விமர்சனம் மட்டுமல்ல; தனிப்பட்ட முறையிலான, கீழ்த்தரமான தாக்குதலும்கூட - (சோனியா, ராகுல் பற்றி மோடி பேசியதும் இதே ரகத்தில்தான் சேரும்). பேசியவர்களுக்கும் சரி, விமர்சிக்கப்பட்டவர்களுக்கும் சரி, இது நன்றாகவே தெரியும். ஆனால், இத்தகைய பேச்சுகளால் என்ன ஆகிறது...? பதிலடி கொடுக்கிறேன் பேர்வழி என்று ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், ஜெயலலிதா குறித்து தகாத வார்த்தைகளைப் பேசுகிறார். கொஞ்சம் சிந்திக்கக்கூடிய மக்கள், இந்த நரகலையெல்லாம் வடிகட்டிவிட்டு, கட்சிகளின் கொள்கைகளை எடை போட்டு, வாக்களிக்க முடிவெடுக்கிறார்கள். சிந்திக்கத் தெரியாத பாமர மக்கள், எடை போட அறியாதவர்கள், தனிப்பட்ட முறையிலான தாக்குதல்களால் கவரப்படுகிறார்கள்; அவற்றின் அடிப்படையில் முடிவு எடுக்கவும் செய்கிறார்கள்.

இவ்வாறு நிகழாமல் இருக்க வேண்டுமானால் என்ன செய்வது...? நன்னடத்தை விதி முறைகள் மூலமாக, அரசியல்வாதிகளின் விஷத் தாக்குதல்களுக்கு வாய்ப்பூட்டு போடுவது இயலாத காரியம். தேர்தல் கமிஷன் தடுக்கில் புகுந்தால், அவர்கள் கோலத்தில் புகுவார்கள்! மேலும், தனிப்பட்ட முறையிலான ஒரு விமர்சனத்தைச் செய்துவிட்டு, அது தனிப்பட்ட விமர்சனமே அல்ல என்று வாதாட, போதுமான சட்ட வல்லுனர்களும், வழக்குரைஞர்களும் இன்று அனைத்துக்கட்சிகளிலும் உண்டு. தவிரவும், இந்த விஷயத்தைச் சட்டமாக்காமல் நன்னடத்தை நெறியாக மட்டுமே வகுத்ததன் காரணம் என்ன என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். பொது வாழ்வில், அரசியலில் பங்கேற்போருக்குச் சில அடிப்படையான நற்பண்புகள் இருக்கும், இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்தகைய பண்புகளைப் பாதுகாக்க, நன்னடத்தை நெறிமுறைகள் இருந்தால் போதும்; சட்டம் தேவையில்லை. மாறாக, தனிப்பட்ட முறையிலான விமர்சனங்களைச் சட்டபூர்வமாகத் தடை செய்வதன் மூலம், நியாயமான விமர்சனங்களுக்கும் விவாதங்



களுக்கும்கூட வாய்ப்பூட்டு போடப்பட்டு விடும். உதாரணமாக, 'சோனியா அன்னிய நாட்டவர் என்பதால், அவர் பிரதமராவது நாட்டின் கௌரவத்துக்கு ஒத்து வராது' என்ற விமர்சனமே கூட சட்டவிரோதமாகிவிடும். 'சோனியா சட்டப் படி இந்தியப் பிரஜை; ஆகவே இந்த விமர்சனம் குற்றம்' என்று சட்டம் பேச இடமளித்து விடும்.

இதைவிட அபாயகரமானது என்னவெனில், ஒரு சமூகக் குற்றவாளியோ, கிரிமினல் குற்றவாளியோ தேர்தலில் நின்று வோட்டுக் கேட்டால், அதைச் சுட்டிக் காட்டிப் பேசவே வகையில்லாது சட்டம் செய்துவிடும். இது ஜனநாயக விரோதம் என்பதால்தான், பிரசார உரிமைகளைச் சட்டத்தால் கட்டுப்படுத்தாமல் நன்னடத்தை விதிகளால் நெறிப்படுத்த முயன்றனர். "நன்னடத்தையா? கிலோ என்ன விலை?" என்று கேட்கும் காலமாக இது மாறி விட்டது. அதற்காக, நன்னடத்தை விதிகளை மேலும் கடுமையாக்கி, பிரசார உரிமைகளைக் கட்டுப்படுத்த முயற்சி செய்வது, ஜனநாயகத்துக்குச் சாவுமணிதான் அடிக்கும்! அயோக்கியர்கள் சட்டத்தையும் வளைப்பார்கள்; சிறைக் கம்பிகளையும் வளைத்து வெளியேறி விடுவார்கள். விதிமுறைகளையோ மதிக்கவே மாட்டார்கள். யோக்கியர்களின் குரல்வளைதான் நெரிக்கப்படும். கடுமையான விதிமுறைகள் அவர்களது கருத்துச் சுதந்திரத்துக்கு விலங்காகிவிடும்.

இந்திய ஜனநாயகத்துக்கு 56 வயதுதான் ஆகிறது. இந்திய அரசியல் சட்டங்கள் அமலாகி 54 ஆண்டுகளே ஆகின்றன. ஆனால், இந்தியப் பண்பாடு ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகத் திரண்டு வளர்ந்துள்ள செல்வம். பொதுவாழ்வில் பண்பாடு காக்க, நம் தலைவர்கள் உறுதி எடுத்துக் கொண்டு வழி காட்டினாலே போதும். அரசியல் களம் இந்த அருவருப்பான போக்கிலிருந்து விடுபடும். தங்கள் சகாக்களோ, கட்சிக்காரர்களோ, கூட்டணியினரோ, பண்பாடின்றிப் பேசினாலோ, நடந்து கொண்டாலோ, தலைவர்கள் அவர்களுக்காகப் பரிந்துகொண்டு வராமல், அவர்களைத் தார்மிகக் கோபத்துடன் கண்டிக்கட்டும்... அப்போது அரசியல் மைதானத்தில் ஆரோக்கிய விவாதங்கள், போட்டிகள் மட்டுமே நடைபெறும். ○



வாசல்படிகள்

விஜய ராஜு

தலையும் வேஷமுமாக முன்னால் வந்து நின்ற கோலம், "போடி வெளியே" என்று துரத்த முடியவில்லை. ராஜி அவசரமாகப் பாத்திரத்தை ஒழித்துப் போட்டு, வாய் கொடுக்காமல் சமையலில் இறங்குகிறாள்.

"கசுமாலம், குடிச்சுட்டு வந்து ராத்திரி வீட்டை இரண்டு பண்ணிச்சு. துடைப்பத்தாலே நாலு அடி போட்டேன். தாங்காம மயங்கி விழுந்துடுச்சு. ஆஸ்பத்திரில சேத்துட்டு ஓடியாந்தேன். லேட்டாயிடுச்சு தாயி."

ராஜி ஓசைப்படாமல் படுக்கை அறையைத் திறக்கிறாள். அவன் இன்னும் கனேபரமாகத் தூங்கிக் கொண்டிருக்கிறான். பெரிய கம்பெனிக்கு சி.இ.ஓ.

ராத்திரி பாட்டிலுக்காக அவன் அடித்த லூட்டியில் வெள்ளிக் கூஜாவை விற்ற ரசீது அவளைப் பார்த்துச் சிரித்தது.

ஒவ்வொரு நாளும் கைகளால் தயாரிக்கப்பட்ட இரண்டு மில்லியன் அப்பளங்கள் பிரிட்டனில் உண்ணப்படுகிறதாம். அதிலும் 80% ஆங்கிலேய மக்களால் என்றால் நம்ப முடிகிறதா? (கூறுவது news.mantraonline.com) எல்லாம் தமிழ்நாட்டில் உள்ள நான்கு சிறிய தொழிற்சாலைகளில் (லான்சன் குரூப்) தயாரிக்கப்படுகின்றன. அங்கே காக்டெயில் பார்ட்டிகளிலும், அரசு விருந்துகளிலும் அப்பளங்கள் அடித்து நொறுக்கப்படுகின்றன. இருநூறு வித சுவைகளில் தயாரிக்கப்படும் இவை, சிக்கன் டிக்கா போன்ற அசைவ சுவைகளிலும் தயாரிக்கப்பட்டு 'பப்படம்' என்ற பெயரில் விற்பனையாகின்றன. இவர்களின் அடுத்த குறி அமெரிக்கா!

(திருநெல்வேலியின் பாரம்பரிய கைப்பக்குவமே எங்களின் வெற்றிக்குக் காரணமென்கிறது லான்சன்!)



திருநெல்வேலி அப்பளம்டா!

தகவல் தொழில் நுட்பத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியை Opera ப்ரௌசர் - IBM வாய்ஸ் டெக்னாலஜி மூலம் கொண்டு வந்துள்ளது. இந்த Opera டெஸ்க்டாப் ப்ரௌசரை கீபோர்டு, மௌஸ் மூலம் இயக்கத் தேவையில்லை. பேசினால் போதும். பேஷாக இயங்கும்! கார் ஓட்டியபடியே அதிலுள்ள கம்ப்யூட்டரை - உங்கள் கரகர குரலால் இயக்கும் வசதியும் வந்துவிட்டது என்கிறது www.opera.com. இந்த ப்ரௌசரை இருபது மொழிகளில் (தமிழ் இல்லை) இலவசமாக டௌன்லோட் செய்து கொள்ளலாம்.



(இனிமே கம்ப்யூட்டர் முன்னால உட்கார்ந்து வெட்டிப்பேச்சு பேசினா - அது பாட்டுக்கு ஏதாவது ஏடாகூடம் பண்ணிடும்... ஜாக்கிரதை!)

"பாலிவுட்டை விட கோலிவுட் திறமை வாய்ந்தது. இருந்தும் நல்ல ரோல் கிடைக்காததால் இதுவரை நான் தமிழ்ப் படங்களில் நடிக்கவில்லை. கமலுடனோ, ரஜினியுடனோ ஒரு சிறிய பாத்திரம் கிடைத்தால்கூட நடிக்கக் காத்திருக்கிறேன்." என ஏங்கியிருப்பது பாலிவுட் பிக் பி, அமிதாப். விருது மழை பொழிந்து கொண்டிருக்கிறது அவர் காட்டில்! லேட்டஸ்ட் விருது FICCIன் Living Legend விருது. அபிஷேக் (அ) ஹிர்த்திக்கை வைத்து ஆட்டோகிராப்பை ஹிந்தியில் பண்ணுகிற உரிமையை சேரனிடம் (பல லகரம் கொடுத்து) வாங்கியுள்ளார் அமிதாப் என்கிறது hindi.galatta.com.

(அமிதாப் ஜி, நெப்போலியன் கூட நடிக்க உயரமா ஒரு ஆள் தேவைப்படுதாம் - ரெடியா?)

ஜாலி எஸ்.எம்.எஸ்

பேராசிரியர் என்பவர் பிறர் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற நாகரிகம் கூட இன்றி, தொடர்ந்து பாடம் நடத்துபவர்.

- முகில்



நேர்கோடுகள் - மா. நயினார்

விஷயத்தின் பாதிப்பு, சொல்கிற முறையில்தான் இருக்கிறது. சொல்கிற முறையென்பது சொக்க வைக்கும் கவிதையாகவும் இருக்கலாம், கடச் கட அள்ளிக் கொட்டிவிட்டும் போகலாம். இந்த நாஞ்சில் நாட்டுக் 'கதைத்தலில்' பல, நெஞ்சைத் தொட்டுவிட்டும், சில சுட்டுவிட்டும் செல்கின்றன. அப்படிச் சொல்கிற பாணியில் புதுமைப்பித்தனை நினைவூட்டும் எழுத்தில், சற்று வேறுபட்ட கருத்தில் கோத்த சிறுகதைகளின் தொகுப்பு.

பாரதி நேஷனல் ஃபாரம், TC 20/ 2816, கோகுலம், கரமனை, திருவனந்தபுரம், 695 002, விலை ரூ. 60/-

வெற்றிப்பாதை - அகிலன் கண்ணன்

வள்ளுவன், தட்டிப் பார்க்காத வாசல்களோ, தொட்டுக்காட்டாத தத்துவங்களோ, இட்டுச் செல்லாத பாதைகளோ இல்லை. கற்றுத் தெளிந்து நின்றாலும், சுற்றிச் சுற்றி அலைந்தாலும், வெற்றிக்கு வழி தெரியாமல் விழிப்பவர் பல பேர். அந்தப் பல பேருக்கு வழி சொல்லி, வள்ளுவனின் வாக்குக்குப் பொருள் சொல்லி, 'வழி வழியே வரும் எழுத்தில்' வாழக் கற்றுத் தரும் வழி காட்டி நூல்.

தாகம், பிளாட் ஜி3/8, மாசிலாமணி தெரு, தி.நகர், சென்னை - 600 017, விலை ரூ.55/-

நெல்லை தந்த இசைமணிகள் - டாக்டர் பிரமிளா குருமூர்த்தி

முல்லைக்கு வாசம், முளைக்கும் போதே தோன்றியது என்றால், நெல்லைக்குத் தமிழ் நேசம் படைக்கும்போதே தோன்றியிருக்க வேண்டும். ஈசன் படைப்புக்குத் தேர்ந்த இடம் என்பதால், பல படைப்பாளிகளைப் படைத்தது அந்த மண். ஆயகலைகளிலும், தூய நெறிகளிலும், தேர்ந்த நேயமிக்க நல்லோரையும் வல்லோரையும், ஆன்றவிந்த ஆன்மிகவாதிகளையும் தந்தது போதாதென்று, அடர்மழையாய்த் தொடர்கவி பொழியும் மகாகவியையும் ஈந்தது அந்த பூமி. அந்த நெல்லை பூமி தமிழுக்குத்தந்த கொடைகளின் கல்வெட்டு, இந்த நூல்.


நாரத கான சபா அறக்கட்டளை, 314, டிடிகே சாலை, சென்னை - 18

நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே... - (தொகுப்பு) வைகைச் செல்வி

தூசையும், மாசையும், ஆசையாய் வளர்க்கும் நகரங்கள், ஓஸோன் போர்வையைக் கிழிக்கின்றன. இயற்கையை, அழகை ஆராதிக்கும் கவிஞர் வரிசை, காதலைப் பாடுவது போல, சூழலையும் பாடுகிறது. பாடுவது என்ன, கதறியே அழுகிறது. சுற்றுச் சூழலைப் பற்றிய தாக்கத்தை ஏற்படுத்தி, ஆக்கத்திற்கும் சிந்தனைக்கும் அடிகோலும் கவிதைகளின் தொகுப்பு.

அரும்பு பதிப்பகம், 49. டெய்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை - 10, விலை ரூ. 35/-

- விஷ்வக்



என் குழந்தைகள் படிக்கிற ஸ்கூலில் பேரண்ட்ஸ் மீட்டிங் நடக்கும் போது, டீச்சர்களிடம் இங்கிலீஷில் பேச ஆசை.

குழந்தைகள் பாடத்தில் சந்தேகம் கேட்டால், 'உங்க அப்பாகிட்ட போய் கேளுங்க'ன்னு சொல்லாம நானே இங்கிலீஷில் அவங்க டவுட்டை கிளியர் பண்ணணும்னு ஆசை.

போன்ல யாராவது இங்கிலீஷ்ல பேசினால், நானும் கம்பீரமா இங்கிலீஷில் பதில் சொல்லணும்னு ஆசை.

என் கணவரோட பார்ட்டிக்குப் போனால், அங்க வர்றவங்களுக்கு சமமா இங்கிலீஷில் பேசி அசத்தணும்னு ஆசை.

எங்க லேடீஸ் கிளப் மெம்பர்கள் மத்தியில் இங்கிலீஷில் பேசி எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தணும்னு ஆசை.



என் ஆசையெல்லாம் நிறைவேற சரளமா இங்கிலீஷ் பேசத் தெரியலையேன்னு நெனைச்சா வருத்தமாத்தான் இருக்கு. அதுக்கு என்ன பண்றது?

இது ஒரு பிரச்சனையே இல்லை.

ஒரு போஸ்ட் கார்டில், 'நான் ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸில் சேர விரும்புகிறேன்' என்று எழுதி, உங்கள் விலாசத்தை தெளிவாகக் குறிப்பிட்டு, விவேகானந்தா இன்ஸ்டிட்யூட், *P.B.No. R 4986,* 9 மேட்லி ரோடு, தி.நகர், சென்னை—600 017 என்ற முகவரிக்கு இன்றே அனுப்புங்கள்.

இல்லேன்னா (044) 24347034 என்ற நம்பருக்குப் போன் பண்ணுங்க. ஸ்போக்கன் இங்கிலீஷ் டிரெயினிங் கோர்ஸை *VPP* மூலம் அனுப்பி வைக்கிறோம். ரூ.575/– செலுத்தி பாடங்களை வாங்கி தினமும் அரை மணி நேரம் சீரியல் பார்க்க காட்ற அதே ஆர்வத்துடன் பயிற்சியை ஆரம்பியுங்கள். உங்கள் ஆசை நிச்சயம் நிறைவேறும்.

அப்புறமென்ன... நீங்களும் அசத்தலாய் இங்கிலீஷ் பேசி ஜமாய்க்கலாம்! ●

ஆசை நிறைவேறுமா?

சும்மா பட்டியல் போடாதீங்க!



ஒரு கிராமத்தில் ஒரு ஞானி ஆலமரத் தடியிலமர்ந்து, தம் சீடர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். அப் போது அங்கே வந்த ஒரு மனிதன், "ஐயா! நான் கஷ்டப்பட்டு உழைக் கிறேன். என்னிடம் எந் தக் கெட்டப் பழக்கமும் கிடையாது. அறிவுமிக்க குழந்தை, அன்பான மனைவி - இவ்வளவு இருந்தும் என் வறுமை தீர்ந்தபாடில்லை. என் கஷ்டங்கள் தீர ஒரு வழி சொல்லுங் கள்'' என்றான். குரு சொன்னார். "அப்பனே, கஷ்டப்பட்டு உழைத்தால் மட்டும் போதாது. புத்திசாலித்தனமாகவும் உழைக்க வேண்டும். அப்போதுதான் உன் துன்பங்கள் தீரும்." சீடர்களுள் ஒருவன் குருவிடம் கேட்டான். "குருவே! இரண் டுக்கும் என்ன வித்தியாசம்?'' கேள்வி கேட்ட சீடனிடம், குரு சாப்பாட்டுத் தட்டைக் கொண்டு வரச் சொன்னார். தட்டு வந்ததும், ஆலமரத்தடியில் ஊர்ந்து கொண்டிருந்த மரவட்டைகளை எடுத்து ஒவ்வொன்றாக, ஒன்றன்பின் ஒன்றாக, ஒன்றை ஒன்று தொட்டுக் கொண்டிருக்

மார்க் வாங்கலாம் வாங்க! 14



கும்படி, தட்டின் விளிம்பில் வைத்தார். தட்டின் நடுவே மர வட்டைகள் விரும்பி உண்ணக் கூடிய புழுக்கள் வைக்கப் பட்டன. ஒன்றன்பின் ஒன்றாக ஒரு வட்டப் பாதையில் சுற்றி வர ஆரம் பித்தன. குருவும் "நாளை சந்திப்போம்" என்று சொல்லிச் சென்றார்.

மறுநாள் கிராமத்தான் சரியான நேரத்திற்கு வந்தான். சீடர்களும், குருவும் அவனுடன் அரச மரத்தடிக்குச் சென்று பார்த்தனர். அங்கே தட்டின் விளிம்பில், மர வட்டைகள் அனைத்தும் மூச்சுவிட மறந்து இறந்து போயிருந்தன. தட்டின் நடுவில் வைக்கப்பட்டிருந்த புழுக்களோ, சிந்துவாரின்றி அப்படியே இருந்தன. குரு எல்லோரையும் பார்த்துச் சொன்னார், "ஏதாவது ஒரு மரவட்டையாவது சற்றே தன் கண்களைத் திருப்பிப் பார்த்திருந் தால் 'உணவு' இருப்பதைக் கண்டிருக்கும். ஆனால் இந்த அசட்டு மரவட்டைகள், ஒரே பாதையில் சுற்றிச் சுற்றி வந்து உயிரை விட்டன. கடின உழைப்பினால் அவர்களுக்குக் கிடைத்தது மரணம்தான்."

பாடங்களைப் படிக்கும்போது 'கஷ்டப்பட்டு' படித்தால் மட்டும் போதாது. புத்திசாலித்தனமாகவும் படிக்க வேண்டும். இதுவரை நாம் பார்த்த எல்லா டெக்னிக்குகளும் பாடங்களைப் புத்தி சாலித்தனமாக படிக்க உங்களுக்கு உதவு பவைதான். இந்த வரிசையில், இன்னு மொரு டெக்னிக், குறிப்புகள் எடுத்தல்.

ஒரு பாடத்தைப் படிக்கும்போது வரிக்கு வரி, சொல்லுக்குச் சொல் மனப் பாடம் செய்ய வேண்டிய அவசிய மில்லை. (மனப் பாடப் பகுதிகளைத் தவிர்த்து). அந்தப் பாடத்தின் முக்கியப் பகுதிகளை குறிப்புகளாக எடுத்து வைத் துக் கொள்வதே புத்திசாலித்தனமான வழி. சாதாரணமாக, பாடங்களில் முக்கிய மான பகுதிகள் எந்த வரிசையில் சொல் லப்பட்டிருக்கிறதோ, அதே வரிசையில் குறிப்புகள் எழுதப்படுவது வழக்கம். ஒன்றன்பின் ஒன்றாக இப்படிக் குறிப்புகள் எழுதுவதை, பட்டியல் வகைக் குறிப் பெடுத்தல் என்று சொல்வார்கள்.

உதாரணமாக, பூச்சிகள் பற்றிய ஒரு பாடத்துக்கு இவ்வாறு குறிப்பு எழு தலாம் :

பூச்சிகள் - குறிப்புகள் :

1. நன்மை தருபவை
2. தீமை விளைவிப்பவை
3. அழகானவை

1. நன்மை தருபவை :

பூச்சி	நன்மை
பட்டுப் பூச்சி	பட்டு
தேனீ	தேன்

2. தீங்கு விளைவிப்பவை :

பூச்சி	தீமை
கொசு	டிங்கு, மலேரியா
வெட்டுக்கிளி, வண்டு	பயிர்கள் அழிவு

பேராசிரியர் ப.இராம்கோபால்

3. அழகானவை :

பூச்சி	பயன்
வண்ணத்துப்பூச்சி	மனமகிழ்ச்சி

இவ்வாறு பட்டியல் முறையில் குறிப்பெடுப்பதில் சில குறைபாடுகள் இருக்கின்றன.

இந்த முறையில் ஒன்றுக்குப்பின் ஒன்றாக (மளிகைச் சாமான் பட்டியல்போல்) தகவல்களை 'அடுக்கு'கிறோம். அதாவது, நமது சிந்தனை ஒரு தகவல், அப்புறம் இன்னொரு தகவல், அப்புறம் இன்னொரு தகவல்... இப்படி அடிமேல் அடியாக மெல்ல மெல்ல நகர்கிறது. இது மூளையின் இயற்கையான சிந்தனை முறைக்கு முற்றிலும் முரண்பாடானது. இயற்கையில் எந்த ஒரு நிகழ்வும் இப்படி 'லீனியர்' முறையில் நடைபெறுவதில்லை. உதாரணமாக, ஒரு செடியின் இலை / மலர் இவற்றின் வளர்ச்சி எப்படி நடைபெறுகிறது என்று யோசியுங்கள். காம்பு முழுமையாக வளர்ந்த பின்பு, இலை வளர ஆரம்பிப்பதில்லை. இலையின் அடிப்பாகம் முழுவதுமாக வளர்ந்த பின்பு, அதன் நுனிப்பாகம் வளர்வதில்லை. எல்லாமே ஒரே சமயத்தில் - சிறிய காம்பு, சின்னஞ்சிறு இலை - கொஞ்சம் பெரிய காம்பு, பெரிய இலை - இன்னும் பெரிய காம்பு, பெரிய இலை என இப்படித்தான் இலைகளும், மலர்களும், செடிகளும் வளர்கின்றன. நம் உடல் கூட இப்படித்தான் வளர்கிறது. கண்டு விரல் முழுவதுமாக வளர்ந்த பின்பு, மோதிர விரல் வளர்வதில்லை. எல்லா விரல்களும், ஏன், உடலின் எல்லா உறுப்புகளுமே ஒரே சமயத்தில், சிறிது சிறிதாக வளர ஆரம்பிக்கின்றன.

ஆகவே, இயற்கையில் எந்த ஒரு பொருளின் வளர்ச்சியும் இயக்கமும் 'லீனியர்' முறையில் இல்லை என்பது தெளிவாகிறது.

இதே போல் தான் மூளையின் வளர்ச்சியும், செயல் பாடும் அமைந்திருக்கின்றன. மூளை, விஷயங்களை / தகவல்களை ஒன்றன்பின் ஒன்றாகச் சிந்திப்பதில்லை. ஒரே சமயத்தில் அது பல்வேறு விஷயங்களையும், அவற்றிற்கு இடையேயுள்ள தொடர்புகள் பற்றியும் சிந்திக்க வல்லது. மேலும் ஒரு விஷயத்தைப் பல கோணங்களிலிருந்தும் அது பார்க்க வல்லது.

நமது மூளையின் இந்த பல கோண சிந்தனைத்திறன், 'பட்டியல் முறை குறிப்பெடுத்தலில் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதில்லை.

மூளையின் இடது பக்கம் மட்டுமே பயன் படுத்தப்படுகிறது. வலது பக்க மூளையின் வேலைகளான உருவம் வரைதல், வண்ணம் தீட்டுதல், தொடர்பு படுத்துதல், ஒருங்கிணைத்தல், கற்பனை செய்தல், பறவைப் பார்வை ஆகிய 'கிரியேடிவ் செயல்களுக்கு' இந்த முறையில் சிறிதும் இடமில்லை. இதனால் எடுக்கப்படும் குறிப்புகள் உயிரற்று, 'கவர்ச்சி' யற்றுப் போகின்றன.

சரி. இந்தக் குறை இல்லாத குறிப்பெடுத்தல் முறை ஏதாவது இருக்கிறதா?

அடுத்த வாரம் ஓர் உண்மைக் கதையுடன் சொல்கிறேன்.

(தொடரும்)



"கட்சியே முன் நின்று ஊர்வலத்தை நடத்தும்னு சொல்றாங்களே? அப்படின்னா என்ன அர்த்தம்?"

"காண்ட்ராக்ட்ல விடாம அவங்களே நடத்திப் பார்க்கப் போறாங்களாம்!"

- பர்வதவர்த்தினி


இளசைசுந்தரம்

மொட்டை மேலே சந்தனம்!

"மின்சார விளக்குகள் வந்த பிறகு, குத்து விளக்குகள் மறைந்துவிடவில்லை. அதற்கு நாம் நிரந்தர இடம் கொடுத்திருக்கிறோம். காரணம், அது குருவைப் போன்றது. ஒரு மின்சார பல்பிலிருந்து இன்னொரு பல்பை ஏற்ற முடியாது. ஆனால் ஒரு குத்துவிளக்கிலிருந்து, ஆயிரமாயிரம் சுடர்களை ஏற்றிக் கொண்டேயிருக்கலாம், ஒரு குருவிடமிருந்து சீடர்கள் வந்து கொண்டேயிருப்பது போல. குருவின் ஞானம் மாணவனிடத்தில் அறிவுச் சுடரை ஏற்றி வைக்க வேண்டும். இன்றைய மாணவர்களில் பலரது அறிவுத் திறன், ஆசிரியர்களையே தடுமாற வைக்கிறது.

ஒரு மாணவன் நவக்கிரகத்தை இடது பக்கமாகச் சுற்றிக் கொண்டிருந்தான். அங்கே வந்த அவனது ஆசிரியர் அதிர்ந்து போய், ''தம்பி, வலதுபுறமாக சுற்று! அதுதான் சம்பிரதாயம்'' என்றார்.

"எனக்குத் தெரியும் சார்!" என்றான்.

"அப்புறம் ஏன் இந்த அபத்தம்?" என்று ஆசிரியர் கேட்க,

மாணவன் சொன்னான், ''அம்மா நவக்கிரகத்தை ஒன்பது முறை சுற்றிவிட்டு வா என்றாள். நானோ பன்னிரண்டு முறை சுற்றிவிட்டேன். கூடுதலானச் சுற்றுகளை இப்போது கழித்து விட்டுக் கொண்டிருக்கிறேன்!''

மாணவனாவது பரவாயில்லை. இன்று மேம்பட்ட சமுதாயத்தை உருவாக்க வேண்டிய ஆசிரியர்களில் பலரும், அறிவும், ஞானமும் என்ன விலை என்று கேட்கிறார்கள்.

ஆசிரியர் ஒருவர் தமது மகன்களோடு பழனிக்கு வழிபடச் சென்றார். பிள்ளைகள் எல்லோருக்கும் மொட்டை போட்டு, முடி காணிக்கை செலுத்தப்பட்டது. திடீரென்று கூட்டத்தில் ஆசிரியரின் மகன் தொலைந்து போனான். பதறிய ஆசிரியர் காவல் நிலையத்துக்குப் போய் மகனைக் காணவில்லை என்று புகார் கொடுத்தார். அங்கேயிருந்த போலீஸ்காரர் ''பையனுக்கு என்ன அடையாளம்?'' என்றார். "மொட்டை அடித்திருப்பான்'' என்று அப்பாவித்தனமாக அடையாளம் சொன்னார் ஆசிரியர். பழனியில் சொல்கிற அடையாளமா இது? போலீஸ்காரர் விடவில்லை. ''இந்த அடையாளம் போதாது. அதற்கு மேல் ஏதாவது சொல்லுங்கள்" என்றார். அசரவில்லை நம்மவர், ''தலையில் சந்தனம் தடவியிருக்கும்'' என்றாரே பார்க்கலாம்! இப்படித்தான் ஆசிரியரும், மாணவரும் தங்களுக்கான அடையாளங்களை வளர்த்துக் கொள்ளாமல் இருக்கிறார்கள்" - இப்படி ஆன்மிக ஜோக் மழையில் நனைய வைத்தவர், நகைச்சுவை மாமன்னர் இளசைசுந்தரம். பொழிந்த இடம்: திண்டுக்கல் பி.எஸ்.என்.ஏ. கல்லூரிப் பட்டிமன்றம்!

- ஜெய்



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி–

படைப்பாளிகளே, வாசக எழுத்தாளர்களே!
நீங்கள் அனைவரும் ஆவலோடு
எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்
சிறுகதைப் போட்டி வந்தே விட்டது!

முதல் பரிசு	–	**ரூ. 10,000**
இரண்டாம் பரிசு	–	**ரூ. 7,500**
மூன்றாம் பரிசு	–	**ரூ. 5,000**

தவிர, பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு கதையும் ரூ. 500 சன்மானம் பெறும்.

எழுதுபவர்கள் முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவராகவோ அல்லது அறிமுக எழுத்தாளராகவோ இருந்தால் சிறப்புப் பரிசு உண்டு. மற்ற நிபந்தனைகள் வழக்கமானவை.

விதிமுறைகள்:

- கல்கியில் 4 பக்கங்களுக்கு மிகாமல் இருப்பது நல்லது.



- சொந்தக் கற்பனைதான் என்பதற்கு உறுதிமொழிக் கடிதம் வேண்டும். அது இல்லாத கதைகள் பரிசீலிக்கப்படமாட்டா.
- அறிமுக எழுத்தாளர் எனில், இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லையென்றும் போட்டி முடிவு வெளியாகும் வரை எழுதுவதில்லை என்றும் உறுதி மொழி தர வேண்டும்.
- படைப்பாளி முப்பத்தைந்து வயதுக்



குட்பட்டவர்தான் என்பதற்கான ஏதாவதொரு அத்தாட்சி (பத்தாம் வகுப்பு டி.சி. ஜெராக்ஸ் போன்ற) கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.

- முழு வெள்ளைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
- தேர்வாகாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகள் ஒட்டிய அஞ்சல் உறை இணைக்கப்பட வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- பரிசுக்குரிய கதைகளை நடுவர் குழு பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கும். சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.
- முடிவு வெளியாகும் வரை, எவ்வித கடிதப் போக்குவரத்தோ, தொலைபேசி விசாரிப்புகளோ கூடாது.
- **'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி – 2004'** என்று உறையின் மேல் தவறாமல் குறிப்பிட்டு, அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், கல்கி,
கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

- கதைகள் வந்து சேரக் கடைசித் தேதி : **ஜூன் 15**
- போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் ஆகஸ்ட் 1 ஆண்டு மலரில் வெளியாகும்.

படைப்பாளிகள், வாசக எழுத்தாளர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம்.

– ஆசிரியர்



✉ நடிகர், நடிகைகளைக் கட்சியில் சேர்க்கும் பணியில் அக்கறை காட்டுவதை போல, நதிகளைச் சேர்க்கும் (இணைக்கும்) பணியில் அக்கறை காட்டினால், இந்தியா ஒளிரும்!
குமாரபாளையம்,
'காசி'. சக்திவேலன்.



பிசியோ தெரபி தலையங்கம்!

...டையே வந்துவிட்டது! பிறகு சமாதானமடைந்து, இருவருமே சேர்ந்து படித்து மகிழ்ந்தோம்.
வேலூர் - 6,
வே.ந. கதிர்வேலு.

✉ மனித வள மேம்பாட்டிற்கும், விவசாயத்துக்கும் முக்கியத்துவம் தந்துள்ள காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில் ஒரு சில அம்சங்களை ஒதுக்கி விட்டுப் பார்த்தால், புதிய கதவுகளை மட்டுமல்ல, நாட்டின் கண்களைத் திறக்கும் அறிக்கையும்கூட.
பெருமாள்தேவன்பட்டி,
எஸ். அசாதி.

✉ அரசியல் குறள் படித்தல் நன்று. படித்தபின் கல்கியைப் பாராட்டுதல் மிக நன்று!
(அரசியல் குறளைப் பாராட்டி ஒரு கடிதக் குறள்.)
அயன்புரம்,
த. சத்தியநாராயணன்.

✉ ராகுல் காந்தி முளைத்து மூணு இலை விடவில்லை. உங்களின் கார்ட்டூன் படியே இப்போதுதான் முட்டையிலிருந்து வெளி வரப் பார்க்கிறார். அதற்குள் அவருடைய தகுதிகளைக் கணித்து எப்படிங்க மார்க் போடுவது?
சென்னை - 91,
வி.என். கோபால்.

✉ மணவாழ்க்கை பலப்பட, 'மினி கல்கி' வழங்கிய டிப்ஸ்களை, யார் முதலில் படிப்பது? என்ற போட்டாபோட்டியில் எனக்கும், எனது மனைவிக்கும் பெரிய சண்...

✉ தங்கள் கார்ட்டூன் படு ஜோர்! ஜூன் மாதத்தில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பள்ளியில் விட்டுச் செல்லும் காட்சி நினைவுக்கு வருகிறது. சில குழந்தைகள் சிரிப்புடன் வரும். சில மிரண்டு போய் வரும். சில அழுது ஆர்ப்பாட்டம் செய்யும். (சீருடை செலக்ஷன் கன கச்சிதம்) தேர்தல் களத்தில், குதித்துள்ள இந்த வாரிசுக் குழந்தைகள் சில விழிப்பதும், சில மிரள்வதும், சிரிப்பதும் பார்த்தால் பாவமாக உள்ளது.
திண்டுக்கல்,
எச். ஷாஜாதி.

✉ 'கதவு சார்த்தல்' கவிதை குறித்து மேலும் சாற்றுவது:

காய்ந்த வயிற்றுக்குக் கஞ்சி இரப்போர்முன்
பாய்ந்து அடையும் கதவிடுக்கில் சிக்கியதோர்
தேய்ந்த மனத்தோடு செத்திங்கே போன(து) ஈரம்
காய்ந்த மனிதமும்தான்.

கோவை 5,
கே.பி. பத்மநாபன்.

ரூ.100/- பரிசு பெறும் சிறப்புக் கடிதம்

✉ பி.பி இல்லாமல், ஷுகர் கன்ட்ரோலில் இருந்தால், ஸ்ட்ரோக் வராது. ஸ்ட்ரோக் வந்த பிறகு, பிசியோதெரபி குறைஞ்ச பலன்தான் தரும். காங்கிரஸ் உட்கட்சி அடிதடி, வெளி நாட்டவர் தலைமை என்று பக்கவாதம் வந்த நிலையில் இருக்கிறது. உங்கள் தலையங்க யோசனைகள் பிசியோதெரபிதான். பலனும் அந்த அளவுதான் இருக்கும்.
திருச்சி - 2,
என். பாலசுப்ரமண்யன்.

ஒரு ரஷ்யத் திருமணம்!

திருமணம் என்பது ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் முக்கியமான நிகழ்ச்சி. நம்முடைய திரைப்படங்களைப் பாருங்கள். கிட்டத்தட்ட எல்லாக் கதைகளுமே திருமணத்தை அடிப்படையாகக் கொண்டவைதான். திருமணத்துக்குப் பிறகு எல்லோரும் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள் என்றுதான் எல்லோரும்



நினைக்கிறார்கள். ஆனால், உண்மையில், திருமணத்துக்குப் பிறகே சவால் தொடங்குகிறது. இரண்டு வெவ்வேறு சூழ்நிலைகளில் வளர்க்கப்பட்ட, இரண்டு குடும்பங்களிலிருந்து வருகிற ஆணும் பெண்ணும், பரஸ்பர நம்பிக்கையுடனும், விட்டுக் கொடுக்கும் மனோபாவத்துடனும், திறந்த மனத்தோடும் வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதுதான், திருமணம் என்ற புனிதச் சடங்குக்கே அர்த்தம்.

இந்திய சரித்திரத்தைப் பார்த்தால், ஒரு திருமணத்துக்காகப் போர்களே நடத்தப்பட்டிருக்கின்றன. கல்யாணத்துக்காக மக்கள் நிறையப் பணமும் நேரமும் செலவிட்டு வந்திருக்கிறார்கள். அந்தக் காலத்தில் எல்லாம் திருமணம் என்றால், ஒரு வாரத்துக்குக் கொண்டாடுவார்கள். பிறகு மூன்று நாளாகக் குறைந்தது. அதுவே இரண்டு நாளாகி, இப்போது ஒரே ஒரு நாளாக ஆகிவிட்டது. இதற்காகச் செலவழிக்கிற பணம், ஒருவரின் ஆயுட்காலச் சேமிப்பாக இருக்கும். சில வேளைகளில், சிலர் இதற்காகப் பெருந்தொகை கடன் வாங்கிவிட்டு, தங்கள் வாழ்நாள் பூராவும் அதை அடைத்துக் கொண்டிருப்பார்கள். என்னுடைய அனுபவத்தில், நான் கொத்தடிமைத் தொழிலாளர்களைச் சந்தித்துப் பேசிய போதெல்லாம், திருமணச் செலவுக்குக் கடன் வாங்கியே தாங்கள் இந்த நிலைமைக்கு வந்ததாக, அவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

ஒரு திருமணத்தில் பையனுக்குப் பெண்ணின் அழகு முக்கியமாக இருக்கிறது. பையனின் அம்மாவுக்கோ, வரதட்சிணை மீது கண். பையனின் அப்பாவுக்கு ஸ்டேடஸ் முக்கியம். உங்களையும் என்னையும் போன்றவர்களுக்கோ, கல்யாணச் சாப்பாடுதான் கவலை! இளைஞர்கள் பலர் யுவதிகள் சிலரைப் பார்க்கவும், வயதானவர்கள் தங்கள் நோய்களைப் பற்றிப் பேசவும், பெண்கள் தங்கள் ஆடை ஆபரணங்களை வெளிக்காட்டுவதற்கும், திருமணம் ஒரு நிகழ்வாக இருக்கிறது.

சமீபத்தில் நான் மாஸ்கோவுக்குப் போயிருந்தேன். மாஸ்கோவில் நிறைய போர் நினைவுச் சின்னங்கள் இருக்கின்றன. ருஷ்யா மூன்று மிகப் பெரிய யுத்தங்களில் வென்றிருப்பதால், அவர்களுக்குப் பெருமை. போர் நினைவுச் சின்னங்களைக் கட்டி, அதில் வெற்றி பெறக் காரணமாக இருந்த ஜெனரல்



சுதா மூர்த்தி

களின் சிலைகளை நிறுவியிருக்கிறார்கள். முதலாம் போர், ஸ்வீடனுடன் பீட்டர் சக்ரவர்த்தி நடத்தியது. இரண்டாவது, ஜார் அலெக்சாண்டர் பிரான்சுடன் நெப்போலியனை எதிர்த்துப் போரிட்டது. மூன்றாவதுதான் 1945ல் இரண்டாவது உலகப் போர் எனப்பட்ட, ஹிட்லருடன் நடத்திய யுத்தம்.

மாஸ்கோ நகரின் மையத்தில் அமைதிப்பூங்கா என்று மிகப் பெரிதாகக் கட்டியிருக்கிறார்கள். இதன் நடுவே ஒரு பிரம்மாண்ட மண்டபம். அதற்குள் ஒரு தூண். தூணில் ருஷ்யா போரிட்ட தேதிகளையும், இடங்களையும் குறித்திருக்கிறார்கள். பூங்காவில் அழகான நீரூற்றுகள் இருக்கின்றன. கோடையில் பல வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும். பார்க்கவே கண்களுக்கு விருந்தாக இருக்கும். இரவில் ஒளிவிளக்குகள் வானத்தில் கோலமிட்டது போல் காணப்படும். ஒவ்வொரு ரஷ்யனுக்கும் இந்தப் பூங்கா பெருமை தரும். இதைக் காணாத சுற்றுலாப் பயணிகளே இருக்க மாட்டார்கள் என்பேன்.



நான் போனது ஒரு ஞாயிற்றுக் கிழமை. கோடையாக இருந்தாலும், மழைத் தூறலோடு குளிரும் இருந்தது. ஒரு குடையைப் பிடித்துக்கொண்டு நின்றபடி, பூங்காவின் அழகை ரசித்துக் கொண்டிருந்தேன். அப்போது என் பார்வை ஓர் இளம் தம்பதி மீது விழுந்தது. அவர்கள் சமீபத்தில்தான் திருமணம் செய்து கொண்டிருக்க வேண்டும். பெண்ணுக்கு 24-25 வயது இருக்கலாம். மெலிதாக, செம்பட்டை முடியுடன், நீல விழிகளுடன் வெகு அழகாக இருந்தாள். பையனுக்கும் அதே வயது இருக்கலாம்.

அவனும் அழகாக இருந்தான். ராணுவ உடை தரித்திருந்தான். பெண், வெள்ளை சாட்டின் துணியிலான ஆடை அணிந்திருந்தாள். முத்துக்களும், லேஸ்களும் வைத்துத் தைத்த அழகான ஆடை. அதன் நீளம் அதிகமாக இருக்கவே, பின்னால் இரண்டு இளம் பெண்கள், அதன் பின் பகுதி அழுக்காகி விடாமல் இருக்க, கைகளில் பிடித்துக் கொண்டிருந்தார்கள்! ஓர் இளைஞன், அவர்கள் மழைத் தூறலில் நனைந்து விடாமல் இருக்க, குடை பிடித்துக் கொண்டு நின்றிருந்தான். பெண்ணின் கையில் ஒரு மலர்க்கொத்து இருந்தது. நின்றபடியே அவர்கள் தங்கள் கைகளை இணைத்துக் கொண்டிருந்தார்கள்.

பார்க்க அழகான காட்சி. அவர்கள் அப்போதுதான்

திருமணம் செய்து கொண்டிருக்க வேண்டும். இந்த மழையில், ஏன் இந்தப் பூங்காவுக்கு இவர்கள் உடனே வர வேண்டும் என்று எனக்குள் தோன்றியது. இவர்கள் வேறு ஏதாவது ஒரு கோலாகல மான இடத்துக்குப் போயிருந்திருக் கலாமே...? அவர்கள் மெதுவாக நடந்து, உயரமாக மேடை போல் இருந்த இடத்தை அடைந்து, நினைவுச் சின்ன மான தூணின் கீழே அந்த மலர்க் கொத்தை வைத்து வணங்கினார்கள். பிறகு அமைதியாகத் திரும்பி நடக்கத் தொடங்கினார்கள்.

இதென்ன என்று அறிந்து கொள்ள எனக்கு ஆவலாக இருந்தது. அந்தத் தம் பதியையே கேட்டுத் தெரிந்து கொள்ள முடியாது; ஏனென்றால் அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது. எனக்கு ரஷ்ய மொழி தெரியாது. இப்போது அவர்கள ருகே வந்த ஒரு பெரியவர் என்னையும், என் புடைவையையும் பார்த்துவிட்டு, "நீங்கள் இந்தியரா?" என்று கேட்டார்.

"ஆமாம். இந்தியாவிலிருந்து வரு கிறேன்" என்றேன்.

"நான் ராஜ்கபூரின் திரைப்படங் களைப் பார்த்திருக்கிறேன். அவை எல் லாம் பிரமாதம். ராஜ்கபூர் ரஷ்யாவுக்கு வந்திருக்கிறார். எனக்கு ஒரு ஹிந்திப் பாடல் தெரியும் - 'ஆவாரா ஹூம்...' மாஸ்கோ நகரில் மூன்று மிகப் பெரிய இந்தியத் தலைவர்களுக்குச் சிலைகள் இருப்பது உங்களுக்குத் தெரியுமா?"

"யார் யாருக்கு?"

"ஜவாஹர்லால் நேரு, மகாத்மா காந்தி, இந்திராகாந்தி."

சகஜமாக அவருடன் பேசத் தொடங் கிய பிறகு, அவரிடமே சில கேள்வி களைக் கேட்க முற்பட்டேன்.

"உங்களுக்கு எப்படி ஆங்கிலம் தெரியும்?"

"ஓ, நான் வெளிநாடுகளில் வேலை பார்த்தேன்."

"இந்த இளம் தம்பதி ஏன் திருமண நாளன்று, போர் நினைவுச் சின்னத்துக்கு வந்து வணங்கினார்கள் என்று சொல்லு வீர்களா?"


"அது ருஷ்ய வழக்கம். சாதாரண மாகத் திருமணம் சனிக்கிழமையோ, ஞாயிற்றுக்கிழமையோதான் நடக்கும். மழைக் காலமோ, கோடைக் காலமோ, திருமணப் பதிவு அலுவலகத்தில் கையெ ழுத்திட்டுவிட்டு, தம்பதிகள் எல்லா தேசிய நினைவுச் சின்னங்களுக்கும் விஜயம் செய்ய வேண்டும். எல்லா இளைஞர்களும், இந்த நாட்டில் குறைந்த பட்சம் இரண்டு வருடங்களாவது, இராணுவத்தில் பணி புரிந்தாக வேண் டும். அவனுடைய பதவி என்னவாக இருந்தாலும், திருமணத்தின்போது இராணுவ உடை அணிந்தாக வேண்டும்."

"அது ஏன்?"

"நன்றியைத் தெரிவித்துக் கொள்ளத் தான். ரஷ்யா நடத்திய போர்களில், எங்கள் முன்னோர் பங்கு கொண்டு உயிரைத் தியாகம் செய்திருக்கிறார்கள். சில போர்களில் வென்றிருக்கிறோம். சிலவற்றில் தோற்றிருக்கிறோம். ஆனால் அவர்களின் தியாகம் நாட்டுக்காகவே, தங்கள் மூதாதையர் செய்த தியாகத்தின் காரணமாகவே, தாங்கள் இன்று அமைதி யான ருஷ்ய நாட்டில் வாழ முடிகிறது, என்பதைப் புதிதாகத் திருமணமான தம்பதிகள் உணர வேண்டும். அவர்



• மாலன்



• அத்வானி

ரத யாத்திரை புகழ், அத்வானிஜிக்கு மார்க் போடச் சொல்லி 'சன் நியூஸ்' மாலனைக் கேட்டபோது, 'பளிச்' என்று ஃபோனிலேயே மதிப்பெண் வாசித்து விட்டார். மாலன் போட்ட அதே 53 மதிப்பெண்ணை ஐந்து வாசகர்கள் சரியாகக் கணித்துப் போட்டிருந்தார்கள். குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர் :

பி. புவனேஷ், 1091, சிவராயர் தோட்டம், முதல் தெரு, மா.சாவடி, தஞ்சாவூர் - 613 001.

களின் ஆசிகளை அவர்கள் கோர வேண்டும். திருமணக் கோலாகலத்தை விட, நாட்டுப் பற்று மேலானதாக இருக்க வேண்டும். மாஸ்கோவோ, செயின்ட் பீட்டர்ஸ்பர்கோ, இல்லை ருஷ்யாவின் எந்தப் பகுதியாக இருந்தாலும், இந்தப் பாரம்பரியம் கடைப்பிடிக்கப்பட வேண் டும் என்று முதியவர்களான நாங்கள் வலியுறுத்துகிறோம். திருமண தினத் தன்று, தம்பதிகள் தம் அருகிலுள்ள போர் நினைவுச் சின்னங்களுக்குப் போய் வணங்கியே ஆக வேண்டும்."

நாம் நமது குழந்தைகளுக்கு என்ன கற்பிக்கிறோம் என்று எண்ண வைத்தது, இந் நிகழ்ச்சி. 1857ல் நடந்த முதல் சுதந் தரப் போரில் நடந்த உயிர்த் தியாகங்கள் பற்றி, நாம் சொல்லிக் கொடுத்திருக் கிறோமா? 1942ல் நடந்த 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் பற்றிக் கூறி இருக் கிறோமா? அல்லது புது மணத் தம்பதி கள், தியாகிகளைத் தனிமைக் கொட்டடி யில் சிறை வைத்த அந்தமான் சிறை களைப் பார்வையிடச் சொல்லுகிறோமா? குறைந்தபட்சம் பகத்சிங், சந்திரசேகர் ஆசாத், சிவாஜி, ராணாபிரதாப், ஜான்சி ராணி, லக்ஷ்மிபாய் போன்ற, நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த வீரர்களையாவது அன்று நினைவுபடுத்திக் கொள்ளு கிறோமா?

இவர்கள் யாருமே சுதந்திர இந்தியா வைப் பார்க்கக் கொடுத்து வைக்க வில்லை. நம்முடைய வாழ்க்கையின் முக்கியமான தினத்தன்று, இவர்களை நன்றியோடு நினைத்துப் பார்க்க வேண் டும் என்ற சிந்தனையாவது நமக்கு இருக் கிறதா? புடைவைகள், நகைகள் வாங்கக் கடைகளுக்குப் போகிறோம். பிரம் மாண்ட விருந்துக்கு ஏற்பாடு செய் கிறோம். கொண்டாட்டங்களில் மூழ்கிப் போகிறோமே தவிர....

அன்று மாஸ்கோ பூங்காவில், அந்த மழை நாளில் அளிக்கப்பட்ட விளக்கத் தைக் கேட்டு, என் கண்கள் குளமாகி விட்டன.

(தொடரும்)

மாண்புமிகு டாப் டென் - 9 போட்டி முடிவு

பரிசு பெற்ற வாசகருக்கு நான்கு பேருக்கான சினிமா டிக்கெட்டுக்காக ரூ.250 அனுப்பி வைக்கப்படும்.

அத்வானி பெற்ற மார்க் **53/100**

மாலன் போட்ட மார்க்

	தகுதி	முழு மதிப்பெண்	அத்வானி பெற்றது
1.	தலைமைப் பண்பு (லீடர்ஷிப் குவாலிடி, வசீகரம்)	10	5
2.	முடிவெடுக்கும் திறன்	10	5
3.	கறைபடாத கரங்கள்	10	5
4.	அரசியல் சாணக்கியம்	10	6
5.	மனித நேயம்	10	5
6.	தொண்டர்களோடு தோழமை	10	6
7.	மேடைப் பேச்சு	10	6
8.	மாற்றுக் கட்சியினரை மதிக்கும் போக்கு	10	4
9.	தனிமனித ஒழுக்கம்	10	4
10.	நிர்வாகத் திறமை	10	7
	மொத்தம்	100	53



ஜன்னலுக்கு உள்ளே...

மத்யானத் தூக்கம்
உடம்பை ஊதி
பெருத்த பலூனாக்கும்
தூங்காதே...
செல்லமாய்
உத்தரவு பிறப்பிப்பாய்.

சில மி.மீட்டர்
நிழலாய்
கண்ணில் கருவளையம்
எட்டிப் பார்த்தாலும்

''க்ரீம் ஏதாச்சும் தடவேன்''
என்பாய்.

எப்போதும்
ஷாம்பு குடித்த
என் கூந்தல்
அலைபாய வேண்டும்
உனக்கு.

புதுசு புதுசாய்
வாங்கி வந்து
காதில்
கழுத்தில்
தொங்கவிட்டு
அழகு ருசிப்பாய்

இறுக்கமான உடை
வயதை
அமுக்கிப் பிடிக்கும்
என்பாய்
ஃபேஷன் டிஸைனரைப் போல.

எனக்குத் தெரியாமல்கூட
என் தூங்கும் விரல்களை
நகப்பூச்சால்
பளபளக்க வைத்திருக்கிறாய்

ஒவ்வொரு கணத்திலும்
வாலிபத் தென்றலாகவே
உனக்கு நான்
தெரிய வேண்டும்...
மனசில்
மையம் கொண்ட
காற்றழுத்த
மண்டலத்தை
மறைத்துக்கொண்டு....

- செல்வ குமாரி

கோவைக்குள் நோ என்ட்ரி!



சினிமா புகழைப் பயன்படுத்தி அரசியலில் குதிப்பவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். 'குத்து' பட நாயகி ரம்யாவோ, அரசியல் குடும்பத்திலிருந்து சினிமாவுக்கு வந்திருக்கிறார். ஜூனியர் ஜெயப்பிரதா தோற்றத்திலிருக்கும் இவர், கர்நாடக முதலமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவின் பேத்தி. ''இப்படி பாதுகாப்பில்லாமல் அலைகிறீர்களே. 'வீரப்பன் கடத்தல்' பயம் இல்லையா?'' என்றால், ''கோவைப் பக்கம் எக்காரணம் கொண்டும் (படப்பிடிப்பு என்றால்கூட) போகக் கூடாது'' என்று உத்தரவு போட்டிருக்கிறாராம் அவரது தாத்தா.





"என்னோட தாத்தா பெயரைப் பயன்படுத்தி நான் சினிமா வாய்ப்பு கேட்கிறதில்லை. எனக்கு பரதம், குச்சுப்புடி, சினிமா டான்ஸ் அத்துபடி. மலையாளம் தவிர, தமிழும், தெலுங்கும் சூப்பரா பேசுவேன். ஜெயிக்க இது போதாதா?" என்று கேட்கும் இவர், தாத்தாவுக்காக முதல் கட்ட தேர்தல் பிரசாரம் செய்துவிட்டு வந்திருக்கிறார்.

புனித் ராஜ்குமாருடன் ரம்யா அறிமுகமான 'அபி' கன்னடத்தில் ஹிட். இரண்டாவது படமான 'எக்ஸ்கியூஸ் மீ' சில்வர் ஜூப்லி. இது போதாதா பிரசாரத்தில் கலக்க?

- ஸ்ரீ



அகராதி பிடிச்ச அகராதி!

தேர்தல் : பொதுநல வேடமிட்டு கொண்டாடப்படும் சுயநலப் பண்டிகை.

வாக்கு இயந்திரம் : கள்ளவோட்டு பற்றித் தெரியாத ஹை-டெக் ஏமாளி!

வேட்பாளர்கள் : தொலைந்து போய், ஐந்து வருஷத்துக்கொருமுறை தாமே கிடைப்பவர்கள்.

வாக்காளர்கள் : அனுதாப அலையை நம்பும் அனுதாபத்திற்குரியவர்கள்.

கறுப்பு மை : எளிதில் அழிக்கப்படக்கூடிய ஆதாரம்.

கூட்டணி : தேர்தல் மழைக்கு முந்தி முளைக்கும் காளான்!

வாக்குறுதிகள் : கானல் நீரில் (இப்போது காவிரி நீரில்).


வாரிசு : எளிதில் தலைவராக ஒரே வழி!

கள்ளவோட்டு : மருந்து கண்டுபிடிக்க முடியாத தேர்தல் நோய்.

தொண்டன் : ஒரு நாள் ராஜா.

- முகில்

வசந்தம் வந்ததே!



'குளிர்காலம் வந்தால் என்ன, வசந்தம் வராமலா போகும்?' என்ற ஆங்கிலக் கவி ஷெல்லியின் கவிதை வரியில், வசந்தத்தைப் பற்றிய எதிர்பார்ப்பைவிட, குளிர் காலத்தின் சோர்வே அதிகம் என்று தோன்றுகிறது.

பல மாதங்களுக்கு எலும்பை ஊடுருவும் நடுக்கும் குளிரை அனுபவித்தவர்களுக்குத்தான் ஷெல்லியின் ஏக்கம் புரியும். மார்ச் மாத ஆரம்பத்திலேயே அதீத குளிர்ப் பிரதேச மக்கள் அமெரிக்காவில் வெயிலை எதிர் நோக்கிக் காத்திருக்க, குளிரோ விடாப்பிடியாகத் தொடர்ந்தது. பாலைவனப் பிரதேசமான பீனிக்ஸில்கூட ஸ்வெட்டர் போடும் படியாகக் குளிர்ந்தது. மார்ச் இருபது தாண்டியதும் திடீரென்று தரணி சிலிர்த்து விழித்துக் கொண்டது போல, பனியில் உறைந்திருந்த பல இடங்கள் போர்வையை உதறி நிமிர்ந்தன. முந்தா நாள் வரை மலடாக நின்ற பீனிக்ஸின் கள்ளிச் செடிகள், சூலுராமலே பெற்றது போன்ற கர்வத்துடன் வானுயர்ந்த மலர்களை ஏந்தி நிற்கின்றன. க்ராண்ட் ஐலெண்டின் தென்மேற்கில், மத்திய நெப்ராஸ்கா புல் வெளிகளில் அமெரிக்காவின் தொலைதூரக் குளிர் பாகங்களிலிருந்து வந்திருந்த டூரிஸ்டுகள், ப்ளாட்டே நதியின் கரையில் ஆயிரமாயிரம் இளம் சிவப்பு நாரைகளின் இறக்கைகளில் அமர்ந்து வசந்தம் பறந்து வருவதைக் கண்டார்கள். வாஷிங்டனில் செர்ரி ப்ளாஸம் பூத்து வெடிப்பதும், அரிஜோனாவின் கள்ளிச் செடிகள் மலர்ந்து சிரிப்பதும், நெப்ராஸ்காவுக்கு நாரைகள் வருவதும் வசந்தம் வந்துவிட்டதற்கான அடையாளங்கள். கள்ளிச் செடிகள் பூத்திருந்த (அதுவும் எத்தனை பிரம்மாண்டம்!) அதிசயத்தைக் கண்டு நான் மாய்ந்து போனேன்.



யாரும் அன்னியம் இல்லை

நியூயார்க் எப்படி இருக்கிறது என்று இரவு சவும்யாவுக்கு டெலிஃபோன் செய்தால், ஆன்ஸரிங் மெஷின் பதில் சொல்லியது. பீனிக்ஸுக்கும் நியூயார்க்குக்கும் இரண்டு மணி நேர வித்தியாசம். பீனிக்ஸில் ஏழு மணி என்றால், அவளுக்கு ஒன்பது மணி. நியூயார்க்கிலும் வசந்தம் வந்திருக்கும் என்று நான் நினைத்தேன். எட்டு மணிக்கு (அங்கு பத்து) சவும்யா போன் செய்தாள். அப்போதுதான்

அமெரிக்க டயரிக் குறிப்பு 6



• ப்ளாட்டே நதிக்கரை நாரைகள்

• கணவருடன் வாஸந்தி...

வீட்டுக்கு வந்தாளாம். அங்கு "பல்லைக் கிட்டும் குளிர்" என்றாள். "சென்ற வாரம்கூட பனிச் சூறாவளி அடித்தது" என்றாள். "இத்தனைக் குளிரில், இத்தனை நேரமா வேலை" என்றேன். "தினமும் வீட்டிற்கு வேலையிலிருந்து திரும்ப எட்டரை மணி ஆகும், இன்று லின்கன் ஸெண்டரில் ஒரு நிகழ்ச்சி, பார்க்கப் போயிருந்தேன்" என்றாள்.

"தனியாக அவ்வளவு நேரம் கழித்து வருவதில் ஆபத்து ஒன்றும் இல்லையா?" என்று கேட்டபோதுதான், இந்தியாவில் தில்லியில் இருந்ததைவிட, நியூயார்க்கில் பாதுகாப்பாக உணர்வதாக, சவும்யா சொன்னாள்.

"அமெரிக்காவில் இரண்டாம் பட்ச பிரஜையாக உணரவில்லையா?" என்றால், நிச்சயமாக இல்லை என்றாள் சவும்யா. "இங்கு யாரும் அன்னியம் இல்லை. திறமை இருந்தால் வேலை. அதற்கு மட்டுமே மதிப்பு. பொதுவாழ்வில் எந்த பேதமும் இல்லை. அமெரிக்கா எல்லாருக்கும் இடமளிக்கும், வந்தாரை வாழ வைக்கும் 'வசுதேவ

வாஸந்தி

குடும்பகம்'' என்றாள். நிற வெறி பிடித்த அமெரிக்கச் சரித்திரத்தின் ஏடுகள், என் மனத்தளவில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்திலிருந்தும், இப்பவும் உயர்பதவியில் ஆணுக்கு இணையான ஊதியம் பெண்ணுக்குக் கொடுக்கப்படுவதில்லை என்கிற அமெரிக்கப் பெண்ணிய கோஷங்களின் நினைவிலிருந்தும் விடுபடுவது, எனக்குச் சிரமமாக இருக்கிறது.

எது சொந்த நாடு?

பெங்களூரிலிருந்து 1960தில் அமெரிக்காவுக்கு வந்து குடியேறிய ஜெயராம் - கமலா தம்பதியரையும், பீனிக்ஸில் தற்போது இருக்கும் அவர்களது மகள் சித்ராவையும் சந்தித்தபோது சற்று வெளிச்சம் ஏற்பட்டது. "அமெரிக்காவுக்கு வந்தபோது எனக்கு எட்டு வயது. இங்கு அட்ஜஸ்ட் ஆக ரொம்பக் கஷ்டப்பட்டேன்'' என்றாள் சித்ரா நல்ல தமிழில். (தமிழில்தான் வீட்டில் பேச வேண்டும் என்ற கண்டிப்புடன் கமலா வளர்த்ததன் பலன்!). ''இந்தியாவை எனது தேசமாகச் சொந்தம் கொண்டாட முடியவில்லை. I felt I was neither here nor there. என்னைக் கண்டு, என் பெற்றோரைக் கண்டு, மகா வெறுப்பு ஏற்படும். நிறைய முரண்டு பிடித்திருக்கிறோம் நானும் என் அக்காவும். இந்தியனையே கல்யாணம் செய்து கொள்ளக்கூடாது என்று நினைத்தேன். ஆனால், கடைசியில் இங்கே படிக்க வந்த, அதே இனத்து வாலிபனைச் சந்தித்து, காதல் கொண்டேன்'' என்று சித்ரா சிரித்தாள்.

''இவர் தான் எங்க கட்சியின் ஸ்டண்ட் மாஸ்டர்.''
''அப்படீன்னா?''
''கோஷ்டிச் சண்டை போடுவது எப்படின்னு சொல்லித் தருவார்.''
- பம்மல் நாகராஜன்




இந்திய வம்சாவளிகள்

அமெரிக்காவுக்கு வந்து சேர்ந்த இந்தியர்கள் எல்லாம், சராசரிக்கு மேற்பட்ட அறிவு உள்ளவர்கள். படிப்பில் நாட்டமுள்ளவர்கள். சாதிப்பவர்கள். அமெரிக்க இந்தியர்களில் சாதனை புரிந்தவர், கொழுத்த பணக்காரர் ஆகியோரின் பட்டியல், அதிகரித்த வண்ணம் இருக்கிறது. இந்தியர்கள் புத்திசாலிகள் என்று பரவலாகக் கருதப்படுகிறது. அந்த பிம்பத்துக்கு பங்கம் வந்து விடக் கூடாது என்கிற கவலை, பொதுவாகப் பெற்றோருக்கு இருப்பது இயற்கை. இந்திய வம்சாவளியினர் அவர்களது பெற்றோரை விட அதி புத்திசாலிகளாக இருப்பதற்கு படித்த பெற்றோர் பின்னணி இருப்பது ஒரு காரணம். பல துறைகளில் பிரகாசிப்பதற்கு அதிக வாய்ப்புகள் இருப்பது, அவர்களுக்கு அனுகூலம் என்பதில் சந்தேகமில்லை. பல தமிழர்கள் இப்போது ஆங்கில நாளேடுகளில் ரிப்போர்ட்டர்களாக, பிரபல டீ.வி சானல்களில் செய்தி வாசிப்பவர்களாக, சினிமாத் தொழிலில் இருப்பவர்களாக, பல்வேறு துறைகளில் தடம் பதித்து விட்டார்கள். இப்போது யாருமே இந்தியக் குடியேறிகளின் பிரச்னையைப் பற்றிப் பேசுவதில்லை.

மண்ணின் மைந்தர்கள்

அமெரிக்கக் கரையைத் தொட்டவர்கள் எல்லாம் அமெரிக்கப் பிரஜைகளாக மாறி வரும் வேகத்தில், இங்கு வெள்ளையர் வருவதற்கு முன்பு இருந்த பழங்குடி மக்கள் கொலம்பஸ்ஸினால் தவறுதலாக இந்தியர்கள் என்று அழைக்கப்பட்ட சிவப்பிந்தியர்கள் என்பது, கிட்டத்தட்ட நமக்கு மறந்தே போகும். ஆனால் அரிஜோனாவில் எங்கு சென்றாலும் அவர்களைப் பற்றிய விவரங்கள் கொண்ட மியூஸியங்களும், அவர்களது கைவினைப் பொருள்களின் கடைகளும் இருக்கின்றன. பீனிக்ஸிலும் 'ஸ்காட்ஸ்டேல்' என்னும் இடத்திலும், மிக அழகான கடைத்தெருக்கள் பிரத்யேகமாக இருக்கின்றன. அமெரிக்க இந்தியர்களின் கலைத் திறமையும் கற்பனை வளமும், பிரமிப்பூட்டுபவை. இவர்களை ஒடுக்கிய வெள்ளையர் எப்படிப்பட்ட காட்டுமிராண்டிகள் என்று புரிகிறது.

(தொடரும்)





சவாலே சமாளி!

“நான் எம்.ஏ. படிச்சிருக்கேன் ஸார். முதல் வகுப்பிலே பாஸ் பண்ணியிருக்கேன். ஆனா நல்ல வேலை கிடைக்கலை. அஞ்சு வருஷமா தேடிக்கிட்டிருக்கேன்'' என்று புலம்புபவர்களைப் பார்த்து, நம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்து ஆடுவதாகக் கற்பனை செய்து கொள்கிறோம். ஆனால் உண்மை அது அல்ல'' என்கிறார் சென்னை, தம்புச் செட்டித் தெருவில் உள்ள ஏ.பி.எஸ்.ஈ பயிற்சி நிறுவனத் தலைவர் ராம சுப்ரமண்யம்.

ஏ.பி.எஸ்.ஈ பற்றித் தெரிந்து கொள்ளும் முன் சின்ன விளக்கம். நம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தை விட வேலைக்கு உகந்த கல்வியோ, பயிற்சியோ இல்லாததுதான் பெரிய குறை. அதாவது அன் எம்ப்ளாய்மெண்ட் Vs அன் எம்ப்ளாயபிலிடி. ஒரு மாணவன், குறிப்பிட்டப் படிப்பில் பட்டதாரி ஆகி, வேலை தேடி அலையும் போது, வேலை கொடுக்கும் நிறுவனத்தின் எதிர்பார்ப்பும், இந்தப் பட்டதாரியின் தகுதிகளும் பொருந்துவதில்லை. அதனால்தான் வேலை கிடைப்பதில்லை. உதாரணத்துக்கு, பன்னாட்டு மருந்துக் கம்பெனிகளும், உள்நாட்டு பிரபல மருந்து நிறுவனங்களும் புதுப்புது மருந்துகளுடன் வியாபாரத்தைப் பெருக்கிக் கொண்டேயிருக்கின்றன. இந்நிலையில் ஏராளமான மருத்துவப் பிரதிநிதிகள் தேவைப்படுகின்றனர். கவர்ச்சியான சம்பளம், இதரச் சலுகைகள் என ஏரானம் உண்டு. இந்த வேலைக்கு, பட்டப் படிப்பு மட்டுமே போதும். ஆனால் நேர்முகத் தேர்வு மிகக் கடுமையாக இருக்கும். அதனால் பலர் தேர்வடைவதில்லை. இளைஞர்களை அந்தத் தேர்வுக்குத் தயார் செய்யும் வகையில், குறுகிய காலப் பயிற்சியாக, பத்து நாட்கள் மட்டுமே ஏ.பி.எஸ்.ஈ வகுப்பு நடத்துகிறார்கள். இந்தப் பயிற்சி முடிந்தவுடன், ஏ.பி.எஸ்.ஈ நிறுவனமே, வேலைக்கும் ஏற்பாடு செய்து கொடுக்கிறது.

''வெறும் டிகிரி தாளை மட்டுமே நம்பியிராமல், தங்களைச் சிறந்த வேலைக்குத் தகுதியுடையவராக மாற்றிக் கொள்வதுதான் இளைஞர்களின் நிஜமான சவாலே!'' என்கிறார் ராமசுப்ரமண்யம்.

— டாலி

சோ எழுதிய மஹாபாரதம் பேசுகிறது

– இரண்டு பாகங்கள்

ரூ. 500/–

'சோ'வின் பிற நூல்கள்

1.	உண்மையே உன் விலை என்ன	37.00
2.	கூவம் நதிக் கரையினிலே - பாகம் - 2	45.00
3.	கூவம் நதிக் கரையினிலே பாகம் - 3	27.00
4.	துக்ளக் படமெடுக்கிறார்	30.00
5.	சம்பவாமி யுகே! யுகே!	30.00
6.	சாதல் இல்லையேல் காதல்	41.00
7.	வெறுக்கத்தக்கதா பிராமணீயம்	30.00
8.	எங்கே பிராமணன்?	85.00
9.	துக்ளக் கேள்வி - பதில் - I	24.00
10.	துக்ளக் கேள்வி - பதில் - II	45.00
11.	சாத்திரம் சொன்னதில்லை	30.00
12.	அதிகப்பிரசங்கம்	32.00
13.	துக்ளக் தலையங்கங்கள்	25.00
14.	யாருக்கும் வெட்கமில்லை	28.00
15.	இன்பக் கனா ஒன்று கண்டேன்	14.00
16.	இந்தியா எங்கே போகிறது?	12.00
17.	மனம் ஒரு குரங்கு	30.00
18.	இந்து தர்மம்	50.00
19.	காமராஜை சந்தித்தேன்	33.00

கவிஞர் வாலி இயற்றிய

புலனடக்கத்தின் பொன்விழா

ஜயேந்திரரின் ஜன்ம சரிதம் - ஜனனம் முதல் ஜகத்குரு வரை

விசிஷ்டாத்வைதியின் பார்வையில்

அத்வைத மகான்

(ஜெயகாந்தன் முன்னுரையுடன் மிக மிக உயர்தரமான தயாரிப்பு)

ரூ.100/- மட்டும்

உலக இலக்கிய வரிசை

தமிழில்: சிவன்

1.	சித்தார்த்தன்	ஹெர்மன் ஹெஸ்	35.00
2.	ஏழை படும் பாடு	விக்டர் ஹியூகோ	40.00
3.	ராபின் ஹூட்	மேத்யூ ஹூக்	45.00
4.	காரமசோவ் சகோதரர்கள்	தாஸ்தயெவ்ஸ்கி	35.00
5.	ராபின்ஸன் குடும்பம்	யோஹன் டேவிட் வைஸ்	32.00
6.	இலியட்	ஹோமர்	45.00
7.	ஒடிஸி	ஹோமர்	30.00
8.	பிரபு மாண்டி கிறிஸ்டோ	அலெக்ஸாண்டர் டூமாஸ்	37.00
9.	டாம்சாயர்	மார்க் ட்வைன்	37.00
10.	அதிசய உலகில் ஆலிஸ்	கரோல் லூயிஸ்	45.00
11.	ராபின்ஸன் குருசோ	டேனியல் டிஃபோ	48.00
12.	மோபிடிக்	ஹெர்மன் மெல்வில்	45.00
13.	கலிவரின் பயணங்கள்	ஜோனாதன் ஸ்விஃப்ட்	40.00
14.	அன்னகரேனினா	லியோ டால்ஸ்டாய்	35.00
15.	போரும் அமைதியும்	லியோ டால்ஸ்டாய்	32.00
16.	புதையல் தீவு	ஆர்.எல். ஸ்டீவென்ஸன்	42.00
17.	இழந்த உலகம்	ஆர்த்தர் கானன்டாயல்	32.00
18.	பிராங்கென்ஸ்டைன்	மேரி ஷெல்லி	40.00
19.	ஹெய்டி	ஜோஹன்னா ஸ்பைரி	30.00

பி. ஸ்ரீ. ஆச்சார்யா எழுதிய

1. ஆழ்வார்கள் வரலாறு (8 தொகுதிகள்) ரூ. 306.00
2. அறுபடை வீடுகள் (6 தொகுதிகள்) ரூ. 210.00
3. திவ்யப் பிரபந்த ஸாரம் ரூ. 60.00

மற்றும்

4.	அருணகிரிநாதரின் வாழ்க்கை வரலாறு	ரூ. 30.00
5.	கந்த புராணக் கதைகள்	ரூ. 40.00
6.	நாரதர் கதை	ரூ. 25.00
7.	நவராத்திரியின் கதைகள்	ரூ. 23.00
8.	ராஜரிஷி விசுவாமித்திரர்	ரூ. 30.00
9.	தசாவதாரக் கதைகள்	ரூ. 32.00

1. மஹரிஷிகள் வரலாறு – A.V. சுகவனேசுவரன் – 65.00
2. வேதம் வணங்கும் தெய்வங்கள் – 62.00
3. இந்துமத நன்னெறிகளும் சம்பிரதாயங்களும் – கிருஷ்ணசாமி – 50.00

அன்றாட வாழ்வில் பகவத் கீதையின் பயன்பாட்டை விளக்குவது

கண்ணன் சொற்படி வாழ்வதெப்படி? ரூ. 50/–

பேராசிரியர் 'பிலானி' வி. கிருஷ்ணமூர்த்தி

அல்லயன்ஸ் கம்பெனி

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மயிலாப்பூர்

சென்னை – 600 004. ✆: 24941314

ஏப்ரல் .18 - 2004

மினி கல்கி



கௌரவ ஆலோசகர்கள்...

ஓவியர் மருது

டாக்டர் கே. ஸ்ரீஸ்ரீதர்

டாக்டர் எஸ். மகாதேவன்

சவேரா ஹோட்டல்ஸ் நீனா ரெட்டி

வழக்கறிஞர் கே. சுமதி

டாக்டர் இரா. அன்புமணி

பேராசிரியர் கு. ஞானசம்பந்தம்

டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன்

இளைக்கலாம் அழகாக!

-டாக்டர் எஸ். அஷோக்



* டாக்டர் எஸ். அஷோக்

'நீங்க குண்டா? உங்க அம்மா, அப்பா, ஆத்தா, தாத்தா, தொத்தா, மாமா எல்லாருமே குண்டர் லிஸ்டில் போட வேண்டியவங்க தானா? உங்க குழந்தைங்க எப்படி? 'கஷ்க் முஷ்க்'னு முக்குறுணிக் கொழுக்கட்டை மாதிரி இருப்பாங்களா? அடிச்சீங்க லக்கி பிரைஸ்! உடனே கை வேலையை விட்டுட்டு, அட... மெகா சீரியல் பார்க்கிறதைக் கூட, விட்டுட்டு, டாக்டர்... ரைத் தொடர்பு கொள்ளவும். கவர்ச்சிகரமான சன்மானம் உண்டு. நூற்று இருபது கிலோவுக்கு மேலே எடை போட்டு விஸ்தாரமாக இருப்பவர்களுக்கு முன்னுரிமை உண்டு.'

இது போன்ற 'தேவை' விளம்பரங்கள் அமெரிக்காவில் அதிகரித்துவிட்டன. அதுவும் சமீப காலமாக மிக அதிகமாக... காரணம், அங்கிருக்கும் படா மருத்துவர்கள் தீவிரமாகச் செய்து கொண்டிருக்கும் ஒபிஸிடி அண்ட் ஃபேட் ஜீன் ஸ்ட்ரக்சர் ஆராய்ச்சிதான்!

அமெரிக்க ஆரோக்கியக் கழகங்களும், மருத்துவமனைகளும், மருந்துக்கம்பெனிகளும், 'சாட் பூட் த்ரீ' என்று கை கோத்துக் கொண்டு, உணவுப் பழக்கம் பற்றியும், அது சீர் செனத்தியுடன் கொண்டு வரும் நோய்கள் பற்றியும் படு சீரியஸாக ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்றன.



ஃபாஸ்ட் ஃபுட் மோகத்தில் அமெரிக்க வாசிகள் மந்திரிச்சுவிட்டது போலக் கிடக்கிறார்கள். வறுக்ஸ், பொரிக்ஸ், நொறுக்ஸ் மட்டுமே சாப்பிடுகிறார்கள். வினைப் பயனாக, விதவிதமான நோய்கள், கூந்தல் விரித்து, சாமியாட்டம் போட்டுக் கொண்டிருக்கின்றன.



ஆடு, கோழி வெட்டி மலையேத்த வேண்டியதாயிருக்கு. இருக்கும் தலைமுறை நோயாளிகளாக இருக்க, பிறக்கும் தலைமுறையும் பாதிக்கப்பட்டு, வருங்கால அமெரிக்காவே படுக்கையும் பெட்பேனுமாக இருமிக் கொண்டிருக்குமோ என்ற பயம். அதனால் குழந்தை, அம்மாவின் பத்திரக் கருவிலே இருக்கும் போதே, ஏதாவது 'மருந்து மாயம்' செஞ்சு, 'ஸ்டெம் லெவல்ல' மரபணு ரீதியா கரெக்ஷன் பண்ணிட்டா, எடையே போடாமல், கொலஸ்ட்ரால் ஏறாமல், இருக்க வழி வகை உண்டானு ஆராய்ச்சி பண்றாங்களாம். செலவு என்னன்றீங்க? மில்லியனோ மில்லியன்கள்!



''அப்பாடி... அமெரிக்கா



விலேதானே இத்தனை அமர்க்களமும்!'' என்று டெபாஸிட் பிழைத்த வேட்பாளர் மாதிரி பெருமூச்சு விடாதீங்க. அந்த வரிசையில், அமெரிக்காவுக்கு அடுத்தபடி நாமதான் இருக்கோம். உலக நீரிழிவு நோயின் தலைநகரம் எது தெரியுமா? ஒளிரும் இந்தியாதான்! தலைமுறை தலைமுறையா, அரிசி, சர்க்கரைனு பாத்திக் கட்டி வெட்டியதில், நீரிழிவு என்னும் பொல்லாள், 'மன மோகன ஆகார சுந்தரா' என்று நம்மோடு இரண்டறக் கலந்துவிட்டாள்.

''என்ன டாக்டர். நம்ப உணவே அரிசிதான். எங்க தாத்தா மூணு குண்டான் சோறு, கட்டம் கட்டி அடிப்பாரு. அவருக்கு ஒரு நோய் கூட வந்ததில்லையே'' என்று கேட்பீர்களே! தெரியும். உங்க தாத்தா சாப்பிடுவார்தான்! உடனே மண் வெட்டி பிடிச்சு இரண்டு வண்டி செம்மண் வேலாடு அடிப்பார். பத்து குண்டு புளிய விறகு உடைப்பார். ஆனா, நாம அப்படியா? உங்க வலது கை இருக்கே, அதை இலேசா தூக்கி, இடது பக்க நெஞ்சோரமா வைச்சு, பதில் சொல்லுங்க. நாம அப்படி உழைக்கிறோமா? பூரி, பஜ்ஜி, கட்லெட், பீட்ஸா என்று நாம் உள்ளே தள்ளும் பொருள்களுக்கு ஏற்ப, உடல் உழைப்பும் இருந்தால், ஓரளவுக்குச் சரிக்கட்டிவிடலாம். உட்கார்ந்த இடத்தைவிட்டு ஆடாம அசையாம நாளைத் தள்ளினா, உடல் கொழுத்து ('பேஷ்! பேஷ்! ரொம்ப நன்னாயிருக்கு'ன்னு) உசிலைமணி ஆகிவிடுகிறோம்.





இருக்க வேண்டிய எடையைவிட இரண்டரைக் கிலோ அதிகமாக இருப்பவர்கள், தம்முடைய வாழ்நாளில் 1% இழக்கிறார்கள். எந்த அளவு வயிறின் சுற்றளவு அதிகமாகிறதோ, அந்த அளவு வாழ்க்கைச் சுற்றளவு குறையும். Greater the waist line, shorter the life line.

வெறுப்பேத்தும் பருமன்!



நீங்களும் உங்கள் மனைவியும் கோவை எக்ஸ்பிரஸில் வந்து இறங்குகிறீர்கள். உங்கள் கையில் ஒரு ஹவாலா சைஸ் சூட்கேஸ். தோளில் தங்க மாளிகை அன்பளிப்புப் பை! ஆனால் உங்கள் மனைவியிடமோ, சின்னதாக டம்பப்பை மட்டுமே! அவர் விறுவிறு என்று சந்தோஷமாக நடக்கிறார். நீங்களோ ரேட்டிங் கிடைக்காத பகல் வேளை மெகா சீரியல் மாதிரி, தஸ் புஸ் என்று தள்ளாடுகிறீர்கள்.

அதிக எடையும் எக்ஸ்ட்ரா லக்கேஜ் மாதிரிதான்.

குண்டாக இருந்தால் என்னென்ன பிரச்னை வரும்? சின்னதா ஒரு லிஸ்ட் போடலாம்.

அழகு கெடும் : முதல் பாயிண்ட்டே ரொம்ப ஸ்ட்ராங்கானது. குண்டாக இருந்தால், வயதானத் தோற்றம் இருக்கும். அழகு குறையும்! (இலேசாகப் பூசிய கொழுக்மொழுக் உடம்பிருந்தும் நட்சத்திரங்களாக ஜொலிக்கும் குஷ்பூ, மோகன்லால், ஜோதிகா போன்றவர்கள் உங்கள் நினைவுக்கு வராமலிப்பார்களாக!)

மூச்சு வாங்கும் : உடல் பருமன் உள்ளவர்களுக்கு, மார்பைச் சுற்றி கொழுப்பு அடர்ந்திருக்கும். எனவே நெஞ்சகம் நன்கு விரியாது. நம்ம ஊர் வானம் மாதிரி தகராறு செய்யும். சுவாசப் பிரச்னை ஏற்பட்டா, மூச்சு வாங்கும். சுவாச நோய்களுக்கு என்ட்ரி!

மயக்கம் வரும் : 'உள்ளே வெளியே' பிரச்னை ஏற்படும்போது, போதுமான அளவு பிராணவாயுவைப் பெற முடியாது. கரியமில வாயுவை நீக்கவும் முடியாது. ஆக்ஸிஜன் குறைந்து, கார்பன்-டை-ஆக்ஸைடு அதிகமானால், செல்ஃபோன் பில் பார்த்தது போல, தலை சுற்றும்; மயக்கம் வரும்.



வலிகள் வரும் : உடல் கனத்தைத் தாங்க முடியாமல், இடுப்பு, முதுகெலும்பு, முழங்கால் மூட்டு போன்றவை தடுமாறும். நாளடைவில் அவை வலு இழந்து, வலிகளை ஏற்படுத்தும்.



தூக்கம் வரும் : Pickwick Papers என்ற டிக்கென்ஸ் படைப்பில் வரும் குண்டுப் பையன், நினைத்த நேரத்தில் (நினைக்காத நேரத்தில் என்று சொல்வதுதான் சாலப் பொருத்தம்!) தூங்கிவிடுவான். அதை மனத்தில் கொண்டே இந்த நிலையை பிக்விக் சின்ட்ரோம் என்று மருத்துவ உலகில்



* ஓசியிலே தின்னா குண்டாயிடுவே!

குறிப்பிடுவார்கள்.

பாதமும் பாதிக்கப்படும் : உடல் பருமனால், பாதங்கள் தட்டையாகி flat foot ஆகிவிடும். இவர்களால் வேகமாக நடக்க முடியாது. அப்படி வேகமா நடந்தா, முன்னாடி போறவங்க யாரோ கைதட்டிக் கூப்பிடறாங்கன்னு, திரும்பிப் பார்ப்பாங்க. நிறைய விபத்துக்குள்ளாவார்கள். கால் ஆணியும் சிலருக்கு ஏற்படும்.

சரும வியாதிகள் அதிகமாகும் : த்ஸோ! த்ஸோ! 'முதுகு சொறிஞ்சுவிட ஆள் தேவை. முன் அனுபவம் உள்ளவர் விண்ணப்பிக்கவும்'னு 'ஆட்' கொடுக்க வேண்டி வரும்.

கல் உருவாகும் : இரத்தத்தில் கொழுப்புச் சத்து அதிகமாவதால், பித்தப் பையில் கற்கள் உருவாகும் ஆபத்து இருக்கிறது.

அந்த விஷயத்திலும் : உடல் பருத்த ஆண்களுக்கு மிதமான செக்ஸ் உணர்வே இருக்கும். உ.ப. பெண்களுக்கு, குழந்தை பிறப்பதில் சிக்கல்கள் வரலாம்.

பாவம் இதயம் : உடலின் இரண்டு கிலோ எடையில், சுமார் ஐந்து கிலோ மீட்டர் நீளமுள்ள இரத்தக் குழாய்கள் உள்ளன.

மினி கல்கி

பத்து கிலோ அதிக எடையுள்ள ஆசாமி என்றால், மேலும் இருபத்தைந்து கிலோ மீட்டர் நீள இரத்தக் குழாய்கள் மூலம் இரத்தம் செல்லும்படி, இதயம் அதிகமாகச் சுருங்க வேண்டும். இப்படியே போச்சுன்னா, அந்தக் கையளவு கருவி காயலான்கடை பொருளாகிவிடும்.

இதுவும் முக்கியமானது : குண்டு ஆசாமிகளுக்கு அதிக இன்சுலின் தேவைப்படும். அதிக எடையில் இடம் பெற்றுள்ள அதிகப்படி உயிரணுக்களுக்கு, எக்ஸ்ட்ரா சாப்பாடு சப்ளை ஆகும். அந்த டபுள் மீல்லை செரிமானம் செய்ய ஜீரண உறுப்புகள் சிரமப்படும். செரிமானம் செய்ததை உப



யோகிக்க, அதிக அளவு இன்சுலின் தேவை. இன்சுலின் குறைந்தால், ஆரோக்கியம் ஃபணால்!

சுருக்கமாச் சொல்லணும்னா : ஆயுள் குறைஞ்சுடும்.



கொழுத்த உடல் ஏன்?



★ முழு முதல் காரணம், பாரம்பரியம்.

★ இரண்டா


மினி கல்கி



வது, உண்ணும் உணவு, உடல் உழைப்புக்குத் தேவையானதைவிட அதிக உணவைச் சாப்பிடுகிறோம். எஞ்சியவை கொழுப்பாகச் சேமிக்கப்பட்டு, உடல்



* சும்மா டமாஸுக்கு. எப்படி போஸ்?

பருமனாகி விடுகிறது.

★ மூளையின் அடிப்பாகத்தில் உள்ள 'ஹைறபோதாலமஸ்' என்னும் பகுதியில், 'பசி', 'உண்ட திருப்தி' ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் மையங்கள் உள்ளன. இரசாயன மாற்றங்கள், நரம்பணுச் சிதைவு போன்றவற்றால் இவை பாதிக்கப்படும்போது, 'போதும்' என்ற திருப்தியே வராது. சாப்பிட்டு, சாப்பிட்டு....




உடல் வாகு : மெயின் பாடி கன்டிஷன்னு சொல்றாங்களே, அதேதான். ஒரு சிலர் மூணு வேளையும் மூக்குப் பிடிக்கத் தின்பாங்க. ஸ்வீட், ஐஸ்க்ரீம், தயிர்னு வெளுத்துக் கட்டுவாங்க. ஆனா, சோமாலியா சிடர்ன் சோப்ளாங்கி மாதிரி இருப்பாங்க. இன்னும் சிலரோ இரண்டே சப்பாத்தி, அரைத் தம்ளர் மோர்னு பார்த்துப் பார்த்து

சாப்பிடுவாங்க. பஞ்சராகப்போற பலூன் மாதிரி இருப்பாங்க. ஈவிரக்கம் இல்லாமல் எடை போடும்.

இதற்குக் காரணம் உணவுச் சக்தியைக் கிரகிக்கும் ஆற்றல் சிலருக்கு அதிகமாகவும், சிலருக்குக் குறைவாகவும் இருப்பதுதான். தேவைக்கு அதிகமான எரிசக்தியை, கொழுப்பாக மாற்றாமல் உடலிலிருந்தே வெளியேற்றி விடும் சக்திச் சமநிலையை (எனர்ஜி பேலன்ஸ்), போன ஜென்மத்திலயே தவம் பண்ணி வரமா வாங்கிட்டு வந்ததால் தனுஷ், சிம்ரன் போன்ற பாக்கியவான்கள் என்ன சாப்பிட்டாலும் குண்டாவதே இல்லை.

★ நாளமில்லாச் சுரப்பிகளின் மாறுபட்ட நிலையினால் உண்டாகும் சில நோய்களால் உடல் பெருக்கும். தைராய்டு குறை நிலை (ஹைபோ தைராய்டிஸம்) குஷிங் நோய் போன்றவற்றாலும் உடல் பருமன் ஏற்படும்.



★ இது தவிர, சில உளவியல் காரணங்களாலும் உடல் பருமன் ஆகும். ஏக்கம், ஏமாற்றம், பெரும் இழப்பு, துயரம், பயம், அதிர்ச்சி, பதற்றம் போன்ற உணர்வுகளால் அலைக்கழிக்கப்படும்போது,

மன அழுத்தம் ஏற்படுகிறது. சீற்றத்தைத் தணிக்க, அல்ப ருசியில் கவனம் செலுத்துகிறார்கள். பயம், பதற்றம் போன்ற மனோ நிலையில், திசுக்களின் உணவைக் கிரகிக்கும் ஆற்றல் அதிகமாகி, உடல் பருமன் ஏற்படும்.

* நடக்கிற கட்சி!




உடல் பருமனுக்கு என்ன சிகிச்சை?

★ 'உடல் பருமனைக் குறைத்து விடலாம்' என்ற நம்பிக்கை மன ரீதியாக ஏற்படும்படி கவுன்ஸலிங் தேவைப்படும். ஓமக்குச்சி மாதிரி ஆயிடுவேன்கற நம்பிக்கை, குண்டு கல்யாணத்துக்கே வர வழைச்சிடுவாங்க.




★ டயட்டீஷியன் சொல்படி உணவுப் பழக்கத்தை மாற்றி அமைக்க வேண்டும். ஹை புரோட்டீன், ஹை ஃபைபர் உணவைச் சாப்பிடணும். ஹை கலோரி உள்ள உணவு பக்கமே போகக் கூடாது.

★ நரம்பு மண்டலத்தில் வேலை செய்து, பசியைக் குறைக்கும் நம்பகமான மருந்துகள்




உள்ளன. குடலில் வேலை செய்து, கொழுப்பையும் மாவுச் சத்தையும், குடல் உறிஞ்சிகள் அதிக அளவில் உறிஞ்சாத வண்ணம் செய்யும் மருந்து



களும் உள்ளன.

ஓர் எச்சரிக்கை... இம்மருந்துகளை, டாக்டரின் அறிவுரையின் படி மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும். எதுவும் சரிப்பட்டு வரவில்லை, மருந்தும் வேலை செய்யவில்லை, உடற்பயிற்சியும் பலனில்லை என்பவர்களுக்கு, மிக நூதனமான அறுவை சிகிச்சைகள் உள்ளன.

மினி கல்கி



இது லேட்டஸ்ட்!

'லா ப்ராஸ்கோபிக் பாண்டிங்' என்ற முறையில் 1.5 லி. அளவுள்ள இரைப் பையை 60 மி.லி. அளவே உள்ள சுருக்குப்பையாக ஆல்டர் செய்கிறோம். இரைப்பையையோ, குடலையோ வெட்டாமலே ஏர் பேண்ட் ஒன்றை மாட்டி விடுவோம். இரைப்பையின் அளவு குறைந்ததும், இரண்டே இட்லியுடன் வயிறு நிறைந்த திருப்தி உண்டாகிவிடும். நாளடைவில் ஆள் 'சிக்' என இளைத்துவிடுவார். இதில் ஒரு விசேஷம். தேவைப்பட்டபோது, ரப்பர் பேண்டை அட்ஜெஸ்ட் செய்து, இன்னும் இரண்டு இட்லி எக்ஸ்ட்ரா சாப்பிடுவதுபோல மாற்றிக் கொள்ளலாம்! வலி இல்லாத, ரத்தச் சேதாரம் இல்லாத, தழும்பு இல்லாத, மிக எளிய அறுவை சிகிச்சை இது!

இதெல்லாம் ரொம்ப குண்டான கேஸ்களுக்குத்தான் தேவைப் படும். மற்றவர்களுக்கு மருந்து, மாத்திரை, கட்டுப்பாடான உணவு, உடற்பயிற்சியே போதுமானது.

சரி... விட்ட இடத்துக்கே வருகிறேன். 'நீங்க குண்டா?... உங்க அம்மா, ஆத்தா, எல்லாமே குண்டர் லிஸ்டில் போட வேண்டிய வங்களா? 'தினமும் வெயிட் ஏறிக்கிட்டே இருக்கே?' என்று கவலையா இருக்கா? உடனே வாக்கிங் போகும் பழக்கத்தை மேற்கொள் ளுங்க... குறைந்தது அரை மணி நேரமாவது, கையைக் காலை வீசி, விறுவிறுன்னு நடக்க ஆரம்பியுங்க. யாராவது குறுக்கிட்டா, ரஜினிகாந்த்தின் ஸ்பெஷல் டயலாக்கை சொல்லிவிட்டு நடந்து போங்க.

"நான் பாட்டுக்கு என் வழியில போய்க்கிட்டு இருக்கேன். என்னைச் சீண்டாதீங்க. குண்டா யிடுவேன்!"



தொகுப்பு : **அனுராதா சேகர்**

கார்ட்டூன்ஸ் : **மருது**



ஓ! மாம்பழமே!

அமரர் கல்கி

லார்ட் ராதர்மியர் தமது சொந்தக் கையெழுத்துடன் 'டெய்லி மெயில்' பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதினார். அதன் சுருக்கம் ராய்ட்டரால் உலகமெல்லாம் அறிவிக்கப்பட்டது.

"பிரிட்டிஷார் இந்தியா தேசத்தை ஏன் இழந்துவிடக் கூடாது என்பதற்கு ஒரு புதிய காரணம் ஏற்பட்டிருக்கிறது. அதுதான் இந்திய மாம்பழம். நேற்று மாலை சாப்பாட்டின்போது அந்தப் பழத்தில் ஒன்று நான் சாப்பிட்டுப் பார்த்தேன். அதைப் போன்ற ருசியை என் வாழ்க்கையில் இது வரையில் கண்டதுமில்லை. கேட்டதுமில்லை. இவ்வளவு ருசியுள்ள பழத்தைக் கொடுக்கும் தேசத்தையா சில முட்டாள் மந்திரிகளின் முழு மூடத்தனத்தினால் நாம் இழந்துவிடுவது? பிரிட்டிஷ் பொது மக்களே! எழுந்திருங்கள். வெள்ளைக் காகிதத்தைக் கிழித்தெறியுங்கள்!"

இங்கிலாந்தின் நிலைமை இவ்வாறிருக்க, இனி இந்தியாவில் இது சம்மந்தமாக நிகழ்ந்த சம்பவங்களைச் சற்றுக் கவனிப்போம்.

இந்தியாவிலுள்ள தினசரிப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும், இங்கிலாந்தில் நடந்த மேற்படி விவாதத்தைப் பற்றி சகல விவரங்களும் தந்தியில் வந்து பிரசுரமாயின. ஆனால் அவைகளுக்கு இந்த விவாதத்தைப் பற்றி அபிப்பிராயம் எழுதுவதில் மிக்கத் தொல்லை ஏற்பட்டது. முதலில் மிதவாதப் பத்திரிகைகள் சர்ச்சிலின் கூற்றைப் பலமாகக் கண்டித்துப் பிரிட்டிஷ் மந்திரிகள் இந்திய மாம்பழம் சாப்பிட்டது அவர்களுடைய சமரச நோக்கத்தைக் காட்டுகிறதென்று பாராட்டி எழுதின. பின்னால், ராதர்மியர் பிரபுவின் கட்டுரை வெளியானபோது தேசியப் பத்திரிகைகளுக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. அவை, இனிமேல் ஒரு மாம்பழங்கூட இந்தியாவை விட்டுப் போகாமல் தீவிர பிரசாரம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தின.

அந்த மாதம் வெளியான 'கலைமகள்' பத்திரிகையில், 'மாம்பழக் கவிராய'ரைப் பற்றி ஒரு கட்டுரையும், 'கலா நிலையம்' பத்திரிகையில் "முக்கனியில் மாங்கனி சேர்ந்ததா?" என்பதைப் பற்றி ஓர் ஆராய்ச்சியும் வெளியாயின.

ஸ்ரீமதி 'காசினி' அம்மாள் மாதர் பக்கத்தில் மாங்காய் ஊறுகாய்களைப் பற்றி நாக்கில் ஜலம் ஊறும்படி எழுதியிருந்தார்.

"மாம்பழங்களுக்கே இந்தப் பாடுபடுகிறார்களே! வடுமாங்காயின் ருசியைப் பார்த்துவிட்டால் என்னதான் சொல்வார்களோ?" என்று 'விகடன்' ஹாஸ்யத்துடன் எழுதினான்.

- 'ஓ! மாம்பழமே!' - கட்டுரையிலிருந்து

இக்கட்டுரையை முழுமையாகப் படிக்க www.kalkionline.com பார்க்கவும்.

செண்டிமெண்ட் இஷ்டம்!



புதிதாக நடிக்க வரும் கேரளத்து ஹீரோயின்களிடம் ஒரு சென்டிமெண்ட். அங்கே நம்பர் ஒன் இளம் ஹீரோவாக வலம் வரும், திலீப்புடன் ஒரு படத்திலாவது ஜோடி சேர்ந்து நடித்து விட்டால், வாய்ப்புகள் கொட்டும் என்பதுதான் அந்த சென்டிமெண்ட்.

நடனம், பாட்டு, மிமிக்ரி, மேடைப் பேச்சு, கவிதை என்று அனைத்து கேரளப் பள்ளிகளுக்கு இடையிலான தனித் திறமைப் போட்டியில் அதிக புள்ளிகளை அள்ளி, மாநில அரசின் 'கேரள கலா திலகம்' விருது பெற்றவர் நவ்யா. இவருக்கும் இதே சென்டிமெண்ட் காய்ச்சல். பல வாய்ப்புகளை மறுத்து, நீண்ட காத்திருத்தலுக்குப் பிறகு, திலீப்புக்கு ஜோடியாக 'இஷ்டம்' படத்தில் அறிமுகமான நவ்யா, கேரளாவில் இப்போது டாப்!

அம்மையாரின் நடிப்புத் திறன் கண்டு வியந்த பிரகாஷ்ராஜ், 'அழகிய தீயே' படத்திற்காக அழைத்து வந்திருக்கிறார். "லட்சக் கணக்கில் கொட்டிக் கொடுத்தாலும் கிளாமருக்கு வேறு ஆளைப்பார்" என்று மறுக்கும் இவரிடம், ஆட்டோ கிராஃப் கேட்டால் 'நட்புடன் நவ்யா' என்று முத்தாக தமிழில் கையெழுத்துப் போடுகிறார். சும்மாவா? நாகர்கோவிலில் படித்து வளர்ந்த திருவனந்தபுரத்து தேவதை ஆயிற்றே!

— ஸ்ரீ

சாயா... சாயா... எல்லாம்



நான் ஓர் இதழுக்கு முன் காபி பற்றி, ஏற்படுத்திய களேபரத்தில் வெறுத்துப் போன சில காபிப் பிரியர்கள் "சார்... டீயாவது ஓ.கே.வா?'' என்று கேள்வி எழுப்பி இருக்கிறார்கள். பல டீ விரும்பர்கள், ''சார்.. டீயிலாவது ஏதாவது நல்லது இருக்கா?'' என்று கேள்வி எழுப்புகிறார்கள். இந்த இரண்டையும் வருணிக்க வந்த டாக்டர் கிரீன் என்கிற அஸ்ட்ரோ-பினிஸ்ட், "appear like tonics but poison" என்றார். கிரீனின் ரெட் சிக்னலுக்குப் பிறகும் திருந்த முடியாதவர்கள், என்னைப் போல காபியிலிருந்து டீக்கு மாறிவிடலாம். காரணம், காபியைவிட டீ நல்லது. அதிலும் வெளியில் சாப்பிடுகிற மூன்றாம் தர டீயை விட, வீட்டில் கிடைக்கிற பெண்டாட்'டீ' மிக நல்லது.

இப்போது உலகத்தில் டீ குடிக்காத நாடே கிடையாது. இதன் ஆரம்பம் சைனாதான் என்று தெரிவிக்கிறார்கள். தேயிலையின் பயனை விவரித்தும், டீயை எப்படித் தயாரிப்பது என்பது குறித்தும் முதன்முதலில் எழுதப்பட்ட புத்தகத்தின் பெயர், chuchang. இதை 'லையு' என்பவர் எடிட் செய்திருக்கிறார். சைனாவில் கன்ஃப்யூஷியஸ், நண்பர்களுடன் தேநீர் விருந்தைப் பகிர்ந்து கொண்டதாக, வரலாற்றுப் புத்தகங்கள், செய்திகள் வைத்திருக்கின்றன.

'டீ' என்கிற இம்மாதிரியான உற்சாக பான குடும்பத்தில், பல நபர்கள் இருக்கிறார்கள். காபி, கோகா, கோலன்ட், மேட், கரானா போன்றவற்றில் டீ ஏதோ அழகான பெண் மாதிரி, உலக மக்களை பெரிதும் வசீகரித்திருக்கிறது. இதில் இன்னொரு சுவாரசியம். ஒரே குடும்பமாக இவை இருந்தாலும், இதில் கோலன்ட், ஆப்பிரிக்கர்களின் விருப்ப பானமாகவும், மேட், பராகுவே மக்களின் விருப்ப பானமாகவும், காபி, அமெரிக்கர்களின் விருப்ப பானமாகவும், டீ, சைனா பிரிட்டன், ஜப்பான் மற்றும் இந்தியர்களின் விருப்ப பானமாகவும் மாறிவிட்டன.

டாக்டர் ஆன்ட்ருலு என்கிற ஜெர்மன் நபர்தான், 1964ல் தேயிலையை அறிவியல் முறைப்படி பயிரிட, கற்றுக் கொடுத்திருக்கிறார். நடந்த இடம் ஜாவா தீவுகள். 1659ல் லண்டனில் முதன் முதலில் ஒரு டீக்கடை திறக்கப்பட்டிருக்கிறது. தெருவில் வைத்து 'டீ' விற்கப்படுவதைப் பார்த்து, பலர் ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள். ஒரு தினசரி 'Road Tea' என்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஹலோ, நீங்க சுகமா? 12

1664ல் ஈஸ்ட் இண்டியா கம்பெனி இந்தியாவுக்கு டீயை அறிமுகப்படுத்தி, பிரபலப் படுத்தியது. இது தவிர, பாலில் டீ கலந்து பருகலாம் என்கிற புதுமையை, முதன் முதலில் 'ஸீனியோபு' என்கிற டச்சு எழுத்தாளர்தான் கற்றுக் கொடுத்திருக்கிறார். டீயுடன் பிஸ்கட், கேக்குகளை பரிமாறுவதை, பெட்போர்டில் ஒரு பிரெஞ்சுப் பெண்மணி உலகத்துக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார். தேநீர் விருந்து ஜப்பானியர்களின் கலை.

டீயில், காபியில் இருக்கிற நச்சுப் பொருள்களான காபினும், டேனிக் ஆஸிடும் இருக்கின்றன. ஆக, கெடுதல்கள் காபி போலவே இருந்தாலும், இவை சதவிகிதத்தில் குறைந்திருப்பதால், மனித உடல் தப்பிக்கிறது. காபியை விட டீயில் இருக்கிற மிக முக்கியமான நல்ல விஷயம், அதில் மிதந்து பரவுகிற Anti oxidant பொருள்கள். இது உடலில் இருந்தால் மாரடைப்பு வருவது தடுக்கப் படுகிறது என்பதுதான் புதிய ஆய்வு முடிவு. இப்போது மருத்துவர்கள் இம்மாதிரி சுடுபானப் பிரியர்களுக்கு விட முடியாவிட்டால் உறிஞ்சச் சொல்லிப் பரிந்துரைப்பது, நல்ல தேநீரை.

சாயா!

இந்தியாவில் என்னென்ன வகை தேயிலை நீர் கிடைக்கிறது என்கிற வர்களுக்கு, பதில் மூன்று. ஒன்று டார்ஜிலிங் டீ. தங்க நிறத்தில் காட்சி தருகிற இதுதான் இருப்பதிலேயே உடலைக் கெடுக்காத டீ. பிரிட்டிஷ் மக்களுக்கு மிகப் பிரியமானது. இரண்டாவது அஸ்ஸாம் டீ. இதுதான் இருப்பதிலேயே ஸ்ட்ராங்கானது. சிலருக்கு இது 'கிக்' கூட ஏற்படுத்துவதாகக் கூறுகிறார்கள். இது வட இந்தியர்களின் விருப்பம். மூன்றாவது நீல்கிரீஸ் டீ. நம் பக்க தென்னிந்தியர்களின் விருப்பம் இது. நடுத்தரம். இது தவிர, பெயரில்லாத வகை ஒன்று இருக்கிறது. அதில் குப்பை, மண், சேறு மற்றும் மனிதனால் சாப்பிட முடியாத பலவும் கலந்து, கலப்படமாக நம் தெருக் கடைகளுக்கு வந்து, பரபரப்பாக விற்பனையாவது. பெரும்பாலும் நாம் கடைகளில் இதைத்தான் குடிக்கிறோம். (வாந்தி வருவதைக் கட்டுப்படுத்திக் கொண்டு)

தேநீர் தயாரிக்கப்படுவதிலும் சில வகை இருக்கின்றன. ப்ளாக் டீ என்கிற கறுமைத் தேநீர், தேயிலை விருந்தின் மிகப்பழைய வடிவம். பிறகு ஆயுர்வேதர்கள் கண்டுபிடித்தது லெமன் டீ. இதை சில மருத்துவர்கள் காலையில் வெளியில் போக முடியாமல் சிரமப்பட்டவர்களுக்குப் பரிந்துரைத்தார்கள். அடுத்து வந்தது தேன் டீ. மேலும் சில வடிவங்கள் புழக்கத்தில் இருக்கிற மாதிரி தெரியவில்லை.

சரி. டீ என்னென்ன கெடுதல் செய்கிறது என்பதை விடுங்கள். என்னென்ன நல்லது செய்கிறது? மிக முக்கியமான நல்லது, மாரடைப்பு வருவதைத் தடுக்கிறது. டாய்லெட்டுகளில் சிரமத்தைக் குறைக்கிறது. உடல் பருமனைத் தடுக்கிறது. ஸ்கின் கேர் லோஷனில் தேயிலை கலக்கப்படுகிறது. சோம்பலைத் தடுக்கிறது. கொசு விரட்டிகளில்கூட தேயிலைத் துகள்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

"சார்... இதெல்லாம் வேண்டாம்... காபியாவது டீயாவது விட்டுவிட வேண்டும். ஏதாவது வழி இருக்கிறதா?" இந்தக் கேள்வி கேட்கிற நபர்களுக்கு நான் பரிந்துரைப்பது, வேறு சில பானங்கள். துளசி டீ, சோக்கார் டீ, மேங்கோ டீ, இஞ்சி லெமன் டீ மற்றும் நீரா டீ. இவற்றை எப்படித் தயாரிப்பது? நடிகர் கமலிடம் கேட்க வேண்டியதுதான். அவருடைய இளமைக்குக் காரணமே, மூலிகை டீகள்தாம் என்கிறார் ரவுண்ட்ஸ் பாய்!

(தொடரும்)

வஸந்த் செந்தில்

ஆத்தா கிராஃப்

திருட்டு சி.டி. படம் ஓடிக் கொண்டிருந்தது!

''டேய் செந்தில்! கண்ணாலப் பத்திரிகையெல்லாம் இன்னி ராவுக்குள்ள அட்ரஸ் எழுதிப் போயாகணும்டா... அடுத்த மாசம் கண்ணாலம், ஞாபகம் வைச்சுக்க'' என்று என் மகன் செந்திலைக் கூப்பிட்டேன்.

''அட, என்னப்பா தொல்லை பண்றே... நீ ஒண்ணும் எல்லா அட்ரஸையும் எழுத வேண்டாம். கம்ப்யூட்டர்லே பிரிண்ட் அவுட் எடுத்துத் தர்றேன்... சூப்பர் படம்; நீயும் உட்கார்ந்து பாரு. அப்புறம் ராத்திரி ஒன்பது மணிக்கு மேலே அட்ரஸை அடிச்சுத் தர்றேன்'' என்றான் செந்தில்.

'சரி, கல்யாணப் பையன் சொல்வதைக் கேட்டுவிடுவோம்' என்று நானும் திருட்டுத்தனமாகப் படம் பார்க்கும் காரியத்தில் இறங்கினேன். சும்மா சொல்லக் கூடாது; சேரன் மெய்யாலுமே என் பழைய ஞாபகங்களையெல்லாம் மீண்டும் என் நினைவுக்குக் கொண்டு வந்து விட்டிருந்தார்.


படம் முடிந்ததும் எனக்கும் ஆவல் மேலிட்டது. பழைய டைரிகள் அடங்கியிருந்த அந்தக் காலப் பெட்டியை எடுத்துத் தேட ஆரம்பித்தேன்.

பையன் கம்ப்யூட்டரில் அட்ரஸ் லிஸ்டைத் தட்டிக் கொண்டிருந்தான். நான் தீவிரமாக பழைய நாட் குறிப்புகளில் மூழ்கி 'ஞாபகம் வருதே, ஞாபகம் வருதே' என்று முணுமுணுத்தபடியே,

"செந்தில்! இந்த நாலு அட்ரஸையும் சேத்துடு" என்று ஒரு பேப்பரில் எழுதி அவனிடம் கொடுத்தேன். அதை வாங்கி டைப் பண்ணிக் கொண்டே செந்தில் கேட்டான்,

"யாருப்பா இது மங்கையர்க்கரசி? எனக்கு தெரிஞ்சு மானாமதுரைலே இப்படி ஒரு உறவுக்காரங்க இருக்கறதா தோணலியே" என்று மடக்கினான்.

"ஹி...ஹி!" என்று அசடு வழிந்தேன். "இப்போ ஆட்டோ கிராஃப் பார்த்த இல்லே... அதுலே வர மாதிரி, இவங்க என்கூட மதுரையிலே காலேஜ்லே ஒண்ணா படிச்சவங்க. எங்க இரண்டு பேத்துக்கும் அம்புட்டு ஒத்துமை... என் பேரும் 'ம'விலே ஆரம்பிச்சு மாயாண்டின்னு இருந்திச்சு. அவ பேரும் அதே 'ம' மங்கையர்க்கரசின்னு இருந்துச்சி... இரண்டு பேர் வீட்டிலேர்ந்தும் கேப்பங்களியைத் தான் மதியம் சாப்பிட டப்பாவிலே அடைச்சித் தருவாங்க.... பேசி, பழகி, காதலிக்க ஆரம்பிச்சோம்... 'காதலிக்க நேரமில்லை' படத்துக்கு டிக்கட் வாங்கிக் கொடுக்கலேன்னு, என் மேலே கோவிச்சுட்டுப் போயிட்டா..."



சோக பாவத்துடன் சொல்லிக் கொண்டிருந்த என்னை, "அட! பெரிய ஆளுப்பா நீங்க... அப்புறம் இது யாரு பெங்களூர் காஞ்சனா?" என்று அடுத்த அட்ரஸைப் பற்றி விசாரித்தான்.

"பெங்களூர்லே வேலையிலே இருந்த போது, பக்கத்து வீட்டிலே இந்த கன்னடத்துப் பைங்கிளி பழக்கமானா. தினமும் இவங்க வீட்டிலே ஓசி பேப்பர் வாங்கி படிச்சிட்டு இருந்ததிலே, மெல்ல மெல்ல காஞ்சனா மனசிலே இடம்பிடிச்சேன். இது எப்படியோ அவளோட அப்பாவுக்



குத் தெரிஞ்சுப் போச்சு. அடுத்த நாளே பேப்பர்காரனைக் கூப்பிட்டு இங்கிலீஷ் பேப்பரை நிறுத்திட்டு, கன்னட பேப்பரைப் போடச் சொல்லிட்டாரு. அதனால எங்கக் காதல் கன்டினியூ ஆகலே... அப்புறம் காஞ்சனா யாரோ பசவப்பான்னு பிஸினஸ்மேனை கல்யாணம் பண்ணிட்டு பெங்களூர்லேயே செட்டில் ஆயிட்டா."

"இவ்வளவு கில்லேடியாப்பா நீ... சரி சரி... அடுத்தது, பிரதீபா ராமசந்திரன்னு இருக்கே... உன்னைக் காதலிச்சிட்டு ராம சந்திரனைக் கல்யாணம் பண்ணிட்டாங்களோ...?"

"அட, அந்தக் கதையே வேற... ராம சந்திரன் அவளோட அப்பா பேரு... அது தெரியாம நான் மெட்ராஸ் செக்ஷன்லே ஒர்க் பண்ணும்போது, இவங்க ஏற்கெனவே கல்யாணமானவங்க போலிருக்குன்னு நினைச்சு, லவ் பண்ணாம விட்டுட்டேன். ஆனா அவங்க என்னை லவ் பண்ணிட்டு இருந்திருக்காங்க... அவங்க லவ்வை எங்கிட்டே சொன்னபோது பதறிப்போயிட்டேன். "இப்படி நீங்க உங்க கணவருக்கு துரோகம் பண்ணலாமா?"னு கேட்டுட்டேன்... ஒரே அழுகை! "இனிமே காதலிக்கவும் மாட்டேன், கல்யாணம் பண்ணிக்கவும் மாட்டேன்"னு மனசு உடைஞ்சிப் போயிட்டாங்க" சொல்லி முடித்தபோது, எனக்கு துக்கத்தில் தொண்டையை அடைத்தது.

அகிலா கார்த்திகேயன்

பனங்கிழங்கும் கொழுக்கட்டையும்!

எல்லாவற்றிலும் புதுமை வந்துவிட்ட பிறகு, நூல் வெளியீட்டுக்கும் புதுமை வேண்டாமா என்ன? புதூர் அன்பழகன் எழுதிய 'தொழுவு' கவிதை நூலை ஒரு



• சிவகாமி - அன்பழகன் - பா.செயப்பிரகாசம்

சொளகில் (முறத்தில்) பனங்கிழங்கு, ஓலைக் கொழுக்கட்டை வைத்து, வித்தியாசமாக (?!) எழுத்தாளர் சிவகாமி வெளியிட, பெற்றுக் கொண்டார் பா. செயப்பிரகாசம். விளாத்திகுளம் அருகிலுள்ள விருசம்பட்டி கிராமத்தில் நடந்த இந் நிகழ்ச்சியில் பேசிய செயப்பிரகாசம், "இந்தக் கிராமத்து வட்டாரத்தில் வாழ்ந்த மனிதர்கள் தொகுப்பில் வருகிறார்கள். அந்தப் பாத்திரங்கள் மறைந்தாலும் அவர்களின் பாரம்பரியங்கள் இங்கே வாழ்கிறார்கள். டீவி, சினிமா வழியாக, இன்று வேற்று ஆட்கள் கிராமத்துக்குள் நுழைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை உள்ளே விடக் கூடாது" என்றார்.

சிவகாமி பேசும்போது, "கடந்த பத்து ஆண்டுகளாக தலித் இலக்கியம் மேலெழுந்து வருகிறது. முன்பெல்லாம் தலித் எழுத்தாளர்கள் என்றால் நான்கு பேர்தான் இருந்தார்கள். இன்று வெளிவருகிற நூல்களில் ஐம்பது சதவிகிதம் தலித் வெளியீடுகளாக இருக்கின்றன. இது வரவேற்கப்படவேண்டிய விஷயம்" என்றார்.

விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு பனங்கொட்டையில் பெரியார் உருவம் செய்து பரிசாக வழங்கினர்.

- அப்பு

"ஏம்ப்பா... சாது மாதிரி இருக்கே! உன் லைஃபிலே இத்தனை காரியம் பண்ணியிருக்கியா நீ?" என்றான் செந்தில்.

"எல்லா ஆம்பிளைகளின் வாழ்க்கையிலேயும் இப்படி ரெண்டு மூணு சமாசாரங்கள் இருக்கும்கிற யதார்த்தத்தைத் தான் சேரன் எடுத்திருக்காரு... படத்தைப் பார்த்ததும் தான் இதை உன்கிட்டே சொல்லணும்னு ஒரு தெம்பு வந்தது... உன் கல்யாணத்துக்காவது இவங்களுக்கெல்லாம் இன்விடேஷன் அனுப்பி, வரச் சொன்னா என்னன்னு ஒரு ஆசை... அதனாலத்தான்" என்றேன்.

"சரிப்பா, இதெல்லாம் அம்மாவுக்குத் தெரியுமா...?" என்று கேட்டு வைத்தான் பையன்.


"அடப்போடா! அவ ஒரு மக்கு! இதையெல்லாம் யதார்த்தமா எடுத்துக்கத் தெரியாது" என்று சொல்லிவிட்டு படுக்கச் சென்றேன்.

அடுத்த நாள் பிரிண்ட் அவுட் தயாராக இருந்தது. ஒவ்வொரு அட்ரஸாக வெட்டி கவரில் ஒட்டிக் கொண்டிருந்தேன். உறவினர்கள், தெரிந்தவர்கள் என்று பிரதீபா ராமசந்திரன் வரை, எல்லா அட்ரஸும் ஒட்டியாயிற்று. இன்னும் நாலைந்து விலாசங்கள் மீதமிருந்தன.

படித்துப் பார்த்தேன். பாண்டியன் தஞ்சாவூர், சீனிவாசன் திருப்பதி, சேலம் சுகவனம், ஜார்ஜ் பெரம்பூர் என்றிருந்தது. எனக்கு உதறல் எடுத்தது... நான் நினைப்பதுபோல இருக்கக் கூடாதே என்று பதற்றமாகி, வெட வெடவென்று வந்தது.

"ஏம்பா, எல்லா அட்ரஸையும் எழுதிட்டியா? ஆத்தாவும் நாலு அட்ரஸ் கொடுத்துச்சு, அதையும் எழுதிட்டே இல்லே...? லைஃப்னா இதெல்லாம் சகஜம்தானேப்பா...!" மகன் சொல்லிக் கொண்டிருந்த போது எனக்குத் தலை சுற்றி... ○

சிரிச்சுத் தொலைங்க!



''எதுக்கு நின்னுக்கிட்டே சீரியல் பார்க்கிறே?''
''தலைக்கு மேலே வேலை...உக்காரக் கூட நேரமில்லைக்கா...!''

- கேஜிஎஸ். கோவிந்தன்



''தம்மைப் புகழ்ந்து பாடிக்கேட்டு மன்னருக்கு அலுப்புத் தட்டிவிட்டதாம்...!''
''அதனால?''
''அண்டை நாட்டு மன்னர்களை, மட்டம் தட்டி, இகழ்ந்து பாடும் புலவர்களுக்கு மட்டுமே இனி பரிசு தருவதென மன்னர் முடிவு செய்திருப்பதாகத் தகவல்..''

- ஆர். ரகோத்தமன்



''ஸார்... சீரியல் ஆக்டர்ஸெல்லாம் சம்பளம் கொஞ்சம் அதிகமா கேட்கறாங்க... என்ன பண்றது...?''
''அழுது தொலைங்க!''

- இடைப்பாடி ஜெ. மாணிக்கவாசகம்



''என்னங்க... எல்லாக் கோயிலுக்கும் போயிட்டு வந்திருக்கீங்க... ஏதாவது வேண்டுதலா..?
''அதெல்லாம் ஒண்ணுமில்லை... பெண்டாட்டி சாப்பாட்டை மறந்துட்டு, ஒரு ரவுண்டு எல்லாக் கோயிலுக்கும் போய் அன்னதானம் சாப்பிட்டுட்டு வந்தேன்.''

- எம்.ஆர். மூர்த்தி

ஜியா - பேட்டி!



"ஒரு டீ குடுங்க... எம்.ஜி.ஆரே!"

பெயர்	:	மு.ஜெகதீசன், வயது 57
தொழில்	:	டீக்கடை, ஸ்ரீரங்கம்
கடையின் பெயர்	:	எம்.ஜி.ஆர். டீ ஸ்டால்
செல்லப் பெயர்	:	ஜெகதீசன் என்றால் யாருக்கும் தெரியாது. 'எம்.ஜி.ஆர்.' என்றால் போதும், டீக்கடையில் கொண்டு வந்து விட்டு விடுவார்கள்.
கட்சி சேவை	:	அந்தக் கடை முன்பு நின்று 'எம்.ஜி.ஆர். வாழ்க!' என்று சொல்லும் நபருக்கு, ஒரு டீ இலவசம்!
மறக்க முடியாதது	:	தேர்தலில் (1967) பரங்கிமலையில் எம்.ஜி.ஆர். முதன் முதலாக ஜெயித்தபோது நான்கு அடுப்பு வைத்து, காலை முதல் மாலை வரை சுடச்சுட தேநீர் இலவசமாக வழங்கியது.
எம்.ஜி.ஆர். பிரேமையில் செலவழித்தது	:	அப்போது ரிலீசாகும் எம்.ஜி.ஆர். புதுப்படங்களுக்கு, முதல் நாள் முதல் காட்சிக்கு, குறைந்தது ஐம்பது நபர்களுக்காவது, தன் சொந்தச் செலவில் டிக்கெட் வாங்கித் தந்தது. 1972லிருந்து 1975 வரை, வடக்கு வாசலில் எம்.ஜி.ஆர். மன்ற வாசக சாலை படிப்பகம் ஒன்றை நடத்தியதில், பல்லாயிரக்கணக்கான ரூபாய். 1977ல் எம்.ஜி.ஆர். பதவி ஏற்ற அன்றும், ஏரியா மக்களுக்கு இலவச தேநீர் சப்ளை செய்தது.
கட்சி மற்றும் தேர்தல் பணி	:	அ.தி.மு.க. ஊர்வலங்கள் மற்றும் மாநாடுகளில் எம்.ஜி.ஆர். போல வேடமிட்டு வலம் வருவது. தேர்தல் சமயங்களில் எம்.ஜி.ஆர். போல வேடமணிந்து, இரட்டை இலைக்கு வாக்குகள் கேட்பது.
காதில் தேனாக வந்து பாயும் வார்த்தை	:	ஒரு டீ குடுங்க... எம்.ஜி.ஆரே!

பேட்டி, படங்கள் : **ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**

தங்கமனசுக்காரர்!



எம்.ஜி.ஆரைப் பற்றிய நினைவலைகள் இந்த வாரமும் தொடர்கின்றன.

எம்.ஜி.ஆரின் தாராளமான உதவும் மனப்பான்மையால், நானும் கூட பயனடைந்திருக்கிறேன். சிவாஜி நடிக்க, அவரது ஆடிட்டர்கள் (என்று நினைவு) 'சித்ரா பௌர்ணமி' என்று ஒரு படம் எடுத்தார்கள். படத்தின் ஷூட்டிங்கை காஷ்மீரில் வைத்துக் கொண்டார்கள். படத்தில் ஒரு ஸ்பெஷல் குதிரை வரும். அதைக் கூட காஷ்மீருக்கு அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

காஷ்மீருக்கு ஷூட்டிங்குக்குப் போய் விட்டார்களேயொழிய, பணத் தட்டுப்பாடு ஏற்பட்டது. சாதாரண ஓட்டலில்தான் எங்களையெல்லாம் தங்க வைத்தார்கள். கிடைத்ததைச் சாப்பிட்டுக் கொண்டு, அட்ஜெஸ்ட் செய்து கொண்டு, ஒத்துழைப்புத் தரும்படிக் கேட்டுக் கொண்டார்கள். படப்பிடிப்பு வேகமாக நடைபெற முடியாதபடிக்கு, இயற்கை கூட சதி செய்தது.

எந்த இடம் என்று முன்கூட்டியே திட்டமிட்டுக் கொண்டு, படப்பிடிப்புக் குழுவினர் போய் இறங்குவார்கள். ஆனால், அங்கே பனி பொழிந்து, போதிய வெளிச்சம் இல்லாமல் படப்பிடிப்புக்குத் தடங்கல் ஏற்படும். இப்படியே நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

அந்தச் சமயத்தில், வேறு ஒரு தமிழ்ப் படத்தின் ஷூட்டிங்கும் காஷ்மீரில் நடந்தது. படத்தின் ஹீரோ எம்.ஜி.ஆர். எங்கள் படத்தின் நிலைமைக்கு நேர் எதிரான சூழ்நிலை அங்கே நிலவியது. எம்.ஜி.ஆர். படத்தின் ஷூட்டிங் லொகேஷன்களில் எந்தப் பிரச்னையும் கிடையாது. மடமடவென்று ஷூட்டிங் நடந்து கொண்டிருந்தது. யூனிட்டில் அனைவருக்கும் வாய்க்கு ருசியாக சாப்பாடு, குளிருக்குப் போட்டுக் கொள்ள, எம்.ஜி. ஆர். தமது சொந்தச் செலவில் எல்லோருக்கும் வாங்கிக் கொடுத்த ஸ்வெட்டர், ஷூ என்று ஒரே அமர்க்களம்தான்!

இந்தத் தகவல்களையெல்லாம் கேள்விப்பட்ட எங்கள் யூனிட் ஆட்கள் விட்ட ஏக்கப் பெருமூச்சில், காஷ்மீர் பனியே கரைந்திருக்கும்.

ஒருநாள் காலை, நான் தங்கியிருந்த ஓட்டலுக்கு ஒரு பெரிய கார் வந்தது. அதிலிருந்து



• படம் : யோகா

சிரித்து வாழ வேண்டும் 35

நாகேஷ்

இறங்கியவர் யார் தெரியுமா? சாட்சாத் எம்.ஜி.ஆரேதான். ரிசப்ஷனில் விசாரித்துக் கொண்டு, நேரே என் ரூமுக்கே வந்து விட்டார். எனக்கு இனிய அதிர்ச்சி!

எம்.ஜி.ஆரே, "இங்கே நிலைமை கொஞ்சம் சரியில்லைன்னு கேள்விப்பட்டேன்.



* 'சித்ரா பௌர்ணமி' படத்தில்
நன்றி : ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்

உங்க வேலை முடிந்தவுடன், உடனடியாக ஊருக்குப் புறப்பட்டு விடுங்க! செலவுக்கு இதை வைத்துக் கொள்ளுங்க!" என்று, பையிலிருந்து சில ரூபாய் நோட்டுக் கட்டுக்களை எடுத்து என் கையில் திணித்தார்.

எம்.ஜி.ஆரின் திடீர் வருகையால் ஏற்பட்ட இன்ப அதிர்ச்சியிலிருந்தே மீள முடியாமலிருந்த எனக்கு, அவரது இந்தச் செயல், பேரதிர்ச்சியையும், அதே நேரம் பெரும் நெகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது.

எம்.ஜி.ஆர். விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டுப் போன பிறகு, அவர் என்னுடைய கைகளில் திணித்த ரூபாய் நோட்டுகளைப் பார்த்தேன். நூறு ரூபாய்க் கட்டுகள் மூன்று இருந்தன. அடேயப்பா! முப்பதாயிரம் ரூபாய்!

நான், எம்.ஜி.ஆர். சம்பந்தப்படாத ஒரு படத்துக்காக, காஷ்மீருக்குப் போயிருக்கிறேன். என்னைத் தேடி வந்து எனக்குப் பணம் கொடுத்து உதவி செய்ய வேண்டும் என்கிற அவசியம் என்ன அவருக்கு! ஆனாலும், எனக்கு உதவி செய்தார் என்றால், அதற்கு அவரது தங்க மனசும், என் மீது அவர் கொண்டிருந்த அன்பும்தானே காரணம்?

திரை உலகிலிருந்து விலகி, எம்.ஜி.ஆர். முதலமைச்சர் ஆன பிறகும் கூட, அவர் என் மீது கொண்டிருந்த அன்பு குறையவில்லை. தி.நகர் பாண்டிபஜாரில் நான் ஒரு சினிமா தியேட்டர் கட்டினேன். அதில் சில பிரச்னைகள். நாகேஷின் தியேட்டர் பாதியில் நிற்கிறது என்று 'குமுதம்' பத்திரிகையில் எழுதியிருந்தார்கள்.

அன்று முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் அலுவலகத்திலிருந்து அழைப்பு வந்தது.

'எம்.ஜி.ஆர். என்னைச் சந்திக்க விரும்புகிறார்' என்று தகவல் வந்தது. திடீரென்று எம்.ஜி.ஆர். எதற்கு என்னைச் சந்திக்க விரும்புகிறார் என்று எனக்குப் புரியவில்லை. நேரம் குறிப்பிட்டு, தோட்டத்துக்கு வரச் சொன்னார்கள். தோட்டத்துக்குப் போய் எம்.ஜி.ஆரைப் பார்த்தவுடன், பொதுவாக நலன் விசாரித்து விட்டு, "என்ன நீ! பள்ளிக்கூடத்துக்கு எதிரில் சினிமா தியேட்டர் கட்டிக் கொண்டிருக்கிறாய்? அதற்கு ஆட்சேபணை எழுப்பி, புகார்கள் வருகின்றனவே!" என்றார்.

"நான் தியேட்டர் கட்டிக் கொண்டிருப்பது வாஸ்தவம்தான். அதனால் உங்களுக்கு ஏதாவது ஆட்சேபம் என்றால் சொல்லுங்கள். தியேட்டரை இடித்து விடுகிறேன்!" என்றேன்.

இப்படிப்பட்ட ஒரு பதிலை அவர் எதிர்பார்க்கவில்லைபோலும்!

"அப்படியெல்லாம் அவசரப்பட்டு பண்ணாதே! ஸ்கூலுக்கு எதிரில் சினிமா தியேட்டர் என்பதால்தான் ஆட்சேபணை..." என்று அவர் சொல்லவும், "சார்! உங்களுக்குத் தெரியாத ஒரு விஷயத்தை நான் ஒண்ணும் புதுசா சொல்லிடப் போறதில்லை! ஆனாலும், என் மனசில் பட்டதைச் சொல்கிறேன்" என்று சொல்லி விட்டு, "பள்ளிக்கூடத்துப் பசங்க, ஸ்கூலை கட் பண்ணிட்டு, சினிமாவுக்குப் போகணும்னு நினைச்சா, ஸ்கூலுக்கு நேர் எதி

ரில் இருக்கிற தியேட்டருக்குப் போவாங்களா?" என்றேன் சற்று மெலிதான குரலில்.

"அப்படீன்னு சொல்லறியா நீ?" என்று கேட்டுவிட்டு, சில நிமிடங்கள் அமைதியாக இருந்தார்.

பிறகு, "சரி! நீ போகலாம்! நான் இந்த விஷயத்தைப் பார்த்துக்கறேன்!" என்றார். நான் விடைபெற்றுக் கொண்டேன்.

இரண்டு வாரம் கழித்து, நாகேஷ் தியேட்டருக்கான அரசாங்க லைசென்ஸ் வந்தது.

பிஸியான பாண்டி பஜார் பகுதியில், கம்பீரமாக தியேட்டர் நாகேஷ் இருந்தது என்றாலும் கூட, தியேட்டரை நிர்வாகிப்பதில் பலவிதமான பிரச்னைகள். இரண்டு மாதங்களுக்கு முன் அந்தத் தியேட்டரை விற்றுவிட்டேன். இப்போது தியேட்டரின் பெயர் மட்டும்தான் எனக்குச் சொந்தம்.

எம்.ஜி.ஆர். என்னைப் பொறுத்த வரை இன்னொரு யுக்தியை ஷூட்டிங் கின்போது கடைப்பிடிப்பார். நேரத்துக்குப் போனாலும் சரி, தாமதமாகப் போனாலும் சரி. செட்டுக்குள் போனவுடன், "வாங்க! என் பேர் எம்.ஜி.ராமச்சந்திரன்" என்று சிரித்தபடியே அறிமுகப்படுத்திக் கொள்வார். நான் சும்மா இருப்பேனா? பதிலுக்கு, "நான் செய்யூர் கிருஷ்ணாராவ் நாகேஸ்வரன்" என்று அறிமுகம் செய்து கொள்வேன். எம்.ஜி.ஆரே முதலில் கையை நீட்ட, நானும் கை குலுக்குவேன்.

அடுத்து, "ஒரு பதினைந்து நிமிஷம் எடுத்துக்கலாம். மேக்அப் ரூமுக்குப் போய் டச்அப் பண்ணிக்கிட்டு, ஏதாவது டெலிபோன் பண்ணனும்னா, அதையும் முடிச்சிட்டு, வந்துடு. ஷூட்டிங் ஆரம்பிச்சதும் வேற எந்தத் தொந்தரவும் இருக்காது" என்பார்.

இதை மேலோட்டமாய்ப் பார்க்கிறபோது, எம்.ஜி.ஆருக்கு ஷூட்டிங்கில் வேறு எந்தத் தடங்கலும், தாமதமும் இருக்கக் கூடாது என்பதுதான் வெளிப்படும். ஆனால், அதற்கு ஓர் உள் அர்த்தம் உண்டு. மேக்அப் ரூமுக்குப் போய் டச்அப், டெலிபோன் என்பதெல்லாம் சும்மா ஒரு சம்பிரதாயம். எம்.ஜி.ஆருக்கு தம் எதிரில் யாரும் சிகரெட் பிடித்தால், பிடிக்காது. சில சமயம் கோபப்படுவார். நானோ நிறைய சிகரெட் பிடிக்கிறவன். எனவே, என்னால் அனாவசியமாய் எந்தப் பிரச்னையும் வந்து விடக் கூடாது என்பதற்காக முன்னெச்சரிக்கையாய் இந்த டெக்னிக்கைக் கையாளுவது அவரது ஸ்டைல்.

எம்.ஜி.ஆரின் இந்த ஸ்டைலைப் பற்றிச் சொல்லுகிற சமயத்தில், சிவாஜியைப் பற்றி ஒரு தகவலையும் சொல்ல நினைக்கிறேன். செட்டில் ஓய்வு நேரத்தில், சிவாஜி என்னைக் கூப்பிடுவார். "இந்தப் படத்தில் என் கேரக்டர் என்னன்னு தெரியுமில்லே!" என்று கேட்டுவிட்டு, படத்தில் தமக்குரிய சீன் ஒன்றைச் சொல்லி, "எங்கே, என்னை மாதிரியே நடிச்சுக்காட்டு பார்க்கலாம்!" என்பார்.

நான் சற்றே ஜாக்கிரதையாக, "நீங்க எவ்வளவு பெரிய நடிகர்! உங்களைப் போல நான் நடிச்சுக்காட்ட முடியுமா?" என்பேன்.


சில சமயங்களில் நான் துடுக்குத்தனமாக, "நான் உங்களை மாதிரி நடிச்சேன்னா, படத்தின் கிளைமாக்ஸ்ல ஹீரோயின் உங்களுக்கு பதிலா என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டுவிடப் போறாங்க!" என்பேன். இல்லையெனில் புரொடியூசருங்க, "நாகேஷே சிவாஜி போல நடிக்கிறாரே! அப்புறம் சிவாஜி எதுக்கு. நாகேஷே போதும்"ன்னு முடிவு பண்ணி, எனக்கு அட்வான்ஸ் கொடுத்திடப் போறாங்க" என்பேன். சிவாஜி அதையும் ரசிப்பார்.

(சிரிப்பு தொடரும்)

"கூட்டணி பத்தி பேசப்போன இடத்துல கொஞ்சங்கூட மரியாதையே இல்லே! கேட்ட சீட் தரமாட்டேங்கறாங்க!"

"நீங்க அங்கே உக்காந்து பேசவாவது சீட் குடுத்தாங்களா தலைவரே?"

- கிரிஜா மணாளன்



தலைவரா, ஜோக்கரா!

தலைவர் தணிகாசலம் ஏகப்பட்ட துக்கடாக் கட்சிகளுடன் கூட்டணி வைத்துக் கொண்டதில், எந்தத் தவறுமில்லையென்று பகிரங்கமாக டீ.வி.யில் பேட்டி கொடுக்கப் போகிறார் என்று கேள்விப்பட்டதும், தொண்டர்கள் வயிற்றில் புளியைக் கரைத்தது.

“கட்சி ஆரம்பித்த காலத்திலிருந்து தலைவரின் வலது கரமாக இருந்து, கடந்த பத்தாண்டுகளுக்கு முன் ''நீயும் ஒரு மனிதனா? உன்னோடு கட்சியில் தொண்டாற்றுவதைக் காட்டிலும் மூட்டை தூக்குவது மேல்'' என்று தலைவரைத் தூக்கி எறிந்துவிட்டு வெளியேறி, தனிக்கட்சி ஆரம்பித்து, நேற்றுவரை தலைவரைக் குழியில் போட்டு மிதித்துக் கொண்டிருந்த அடுக்குமொழி அண்ணாசாமியை திடீரென்று கூட்டணியில் சேர்த்துக் கொண்டு, அவரைப் புகழ்ந்து துதிபாடுகிறீர்களே! உங்களுக்கு அசிங்கமாக இல்லையா என்று கேட்டால் தலைவர் என்ன பதில் சொல்வார்'' என்று சில தொண்டர்கள் பேசிக் கொண்டார்கள்.

“பல நாட்கள் கடுங்காவல் தண்டனை அனுபவித்துவிட்டு வெளிவந்தவர்களையும், பேட்டை ரவுடிகளையும் வேட்பாளர்களாக நிற்க வைத்திருக்கிறீர்களே, இது நியாயமா?'' என்று கேட்டால், மானம் போகுமே என்று பயந்தார்கள்.

“கடந்த மாதம் வரை அந்த தேசியக் கட்சியுடன் மூன்றாண்டுகளாகக் கொஞ்சிக் குலாவி புகழாரம் சூட்டிக் கொண்டிருந்து, திடீரென்று விலகி அதே கட்சியை புழுதிவாரித் தூற்றுகிறீர்களே! இது சரிதானா?'' என்று கேட்டால், என்ன பதில் சொல்லப் போகிறார் என்று மனம் உடைந்து போனார்கள்.

தலைவர் தணிகாசலத்தின் பேட்டி டீ.வி.யில் ஒளிப்பரப்பாவதைக் காண, பல லட்சம் தொண்டர்கள் ஆங்காங்கே டீ.வி.யின் முன் தவம் கிடந்தார்கள். பழம் தின்று கொட்டை போட்ட ஜாம்பவான்கள் மூவர், தலைவரைப் பேட்டி காண உட்கார்ந்திருந்தனர். கரைவேட்டி தரையில் புரள, கரைத் துண்டு தோளில் தொங்க, அவருக்கே உரித்தான அகல வாய் புன்னகையுடன், கை கூப்பியபடியே வந்தமர்ந்தார் தலைவர். பேட்டி ஆரம்பமானது.

“பெரிய கட்சியின் தலைவராக இருந்தும், எங்கள் அழைப்பை ஏற்று கூட்டணிக் கட்சிகள் பற்றி பேட்டியளிக்க வந்திருக்கும் தலைவர் தணிகாசலம் அவர்களை, வருக வருக என்று வரவேற்கிறோம்.''

“என்ன வரவேற்கிறோம்?''

“..........................''

“சார், உங்களோடு கூட்டு சேர்ந்துள்ள கட்சிகள் பற்றி...''

“என்ன கட்சிகள் பற்றி?''

“உங்களைத் தூக்கி எறிந்துவிட்டு வெளியே போன சில தலைவர்கள் மீண்டும்...''

“என்ன தலைவர்கள் மீண்டும்?''

“ஏம்பா நான் சரியாத்தானே பேசறேன்?'' என்று முதல் ஜாம்பவான் கேட்க, “நீ சும்மாயிரு, நான் கேட்கிறேன்'' என்று இரண்டாவது ஜாம்பவான் தொடர்கிறார்.

“சார், தங்கள் கட்சியைவிட்டு வெளியேறிய சில வேண்டாதவர்களை...''

“என்ன வேண்டாதவர்களை?''

“என்ன சார், இப்படி பதில்

மாயா கிருஷ்ணமூர்த்தி



சொல்றீங்க?"

"என்ன இப்படி பதில் சொல்றீங்க?"

வியர்வையைத் துடைத்துக் கொண்ட இரண்டாம் ஜாம்பவான், "ஏம்பா, நான் சரியாத்தானே பேசறேன்?" என்று கேட்க, மூன்றாம் ஜாம்பவான் பேச ஆரம்பித்தார். "சார், உங்க பேட்டிய தமிழ்நாடே பாத்து கிட்டிருக்கு."

"என்ன பாத்துகிட்டிருக்கு?"

"என்ன சார்; பேட்டிய இப்படி சொதப்பிட்டீங்க?"

"என்ன சொதப்பிட்டீங்க?"

பேட்டி நேரம் முடிந்துவிட, தலைவர் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு எழுந்து போகிறார்.

பேட்டியைப் பார்த்துக் கொண்டிருந்த தொண்டர்கள், தலைவரின் திறமையைப் பார்த்து பூரித்துப் போய், பட்டாசு கொளுத்தினார்கள். சிலர் தலையில் அடித்துக் கொண்டார்கள்.

பேட்டியை முடித்துக் கொண்டு உள்ளே சென்ற ஜாம்பவான்களை, தொலைக்காட்சி நிலைய இயக்குனர் பிடிபிடியென்று பிடித்தார்.

"என்னய்யா பேட்டி எடுத்தீங்க?"

"என்ன, என்னய்யா பேட்டி எடுத்தீங்க?"

"ஏய்யா, அந்தாளு பயங்கர கல்லுளி மங்கன்னு தெரிஞ்சுதான்யா, உங்கள ஏற்பாடு பண்ணினேன்!"

"என்ன ஏற்பாடு பண்ணினே?"

"ஓ.கோ. அவரோட வியாதி உங்களையும் பிடிச்சிக்கிச்சா" என்று அலறியவரைச் சுற்றி நின்றவர்கள் சமாதானப் படுத்தினார்கள்.

"சார், அமைதியாயிருங்க. இந்த மேட்டரை இத்தோட விட்டுருவோம்."


"என்ன விட்டிருவோம்?"

"சார், உங்களுக்கென்னாச்சு?"


"என்ன என்னாச்சு?"

டீவி. ஸ்டேஷனில் அனைவரும் குழம்பிப் போக, எந்தக் குழப்பமும் இல்லாமல் தலைவர் தணிகாசலம் அமைதியாக வெளியேறிக் கொண்டிருந்தார். ○


நடக்குமென்பார்!




மேஷம்: ஜென்ம ராசியில் சூரியன் ராகுவுடன் கூடி 16ம் தேதி முதல் புதனுடன் சஞ்சாரம் பண்ணறதால, அடிச்சி நொறுக்கப் போவுது அதிர்ஷ்டம். எந்த நாட்டுக்காரர்னு யார் கரடியாக் கத்தினாலும், கண்டுக்கவே கண்டுக்காத காங். தலைவர் மாதிரி தெளிவா இருப்பீங்க. குடும்பத்தில் ஒற்றுமை, உற்சாகம், சந்தோஷம், எல்லாம் சேர்ந்து கொண்டாட்டம்தான். உத்யோகத்திலயும் எதிர்ல நின்னவங்கள்ளாம் ஓரங்கட்டி ஒதுங்கி வழி விட்டுடுவாங்க. யந்திரம், இண்டஸ்ட்ரீஸ், கமிஷன், கெமிகல்ஸ் துறைகள்ல இருக்கறவங்க ஜமாய்ங்க!




ரிஷபம்: சூரியன் 12ல் உச்சத்துக்குப் போய், புதனோட சேர்ந்து, சஞ்சாரம் செய்யறதால தன்னம்பிக்கை, ஆரோக்கியம் கூடி வரும். வெளிநாட்டிலேருந்து முக்கியமான நல்ல தகவல் வந்து துள்ளிக் குதிக்க வைக்கும். உத்தியோகத்தில பிரமோஷன் சான்ஸ் ரெடியாகுது. கொடுக்கல், வாங்கல் பிரச்னையில்லாம நடக்கும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம்னு இருக்கறவங்களுக்கு ஏதாவது விருதே கிடைக்கலாம். சட்டம், ராணுவம், காவல் துறைக்காரங்களுக்கு உற்சாகமான காலம். குடும்பத்தில சந்தோஷம், சுப காரியம்னு கொஞ்சம் செலவு பண்ணத் தயாராயிருங்க. எதிர்பாராத 'ஜாக்பாட்' ஒண்ணு காத்திட்டிருக்கு!




மிதுனம்: கிரக சஞ்சாரங்கள், உங்களுக்கு எல்லாரையும் ஆமாம் போட வைக்கும். எடுத்த காரியங்கள் எல்லாமே சக்ஸஸ்தான். கொஞ்சம் செலவுகளும் கூடுது. ஆனா, தைரியமா செலவு பண்ணுங்க. வரவுக்கு நெறைய வழி இருக்கு. முன்னேற்றம்தான். பதவி, ஊதியம் எல்லாம் உயரப் போகுது. வெளியில ஏதாவது வேலைக்கு முயற்சி எடுத்திருந்தா விஸா வந்துடும். ஆசிரியர், கல்விப் பணியில இருக்கற ஊழியர்கள் எல்லாம் உயர்வார்கள். மாணவர்களுக்கு தெம்பும், வெற்றியும் கூடி நடையே ராஜநடையாயிடும்.



கடகம்: உங்க ராசி கிரகங்கள் எல்லாம் ஒரு அட்டாசமான வெற்றிக் கூட்டணி சேர்ந்திருக்கறதால, உங்க காட்டில மழை தாங்க. ஒவ்வொரு திருப்பமும் அதிர்ஷ்டமானதும் முன்னேற்றமானதுமா இருக்கு. எதிரிங்களுக்கு டெபாஸிட் போய் ஓய்ஞ்சு போயிடுவாங்க, ஆதரவு கூடிக்கிட்டே வந்துடும். அலுவலகத்துக் குழப்பங்கள் கரைஞ்சு போய் நல்ல மாற்றங்கள் நிகழும். எலக்ட்ரானிக்ஸ், யந்திரம், காண்ட்ராக்ட், அலங்கார, தோல் பொருள்கள் வியாபாரமெல்லாம் ஓஹோன்னு நடக்கும். வீடு, நிலம் ஏதாவது வாங்கற ஐடியா இருந்தா ஆரம்பிச்சுடுங்க.



சிம்மம்: உங்க ராசி கிரகங்க 'அண்ணனுக்கு ஜே' போடுவதால, 'புது வீடு, புது மனைவி, புது காரு... கலக்கறே சந்துரு'தான். புதுமனை புகுவிழா காத்திட்டிருக்குங்க. உத்யோகத்தில குழப்பமெல்லாம் கொஞ்சம் செட்டிலாகி சுமுகமா ஆயிடும். வெளியூர்/ வெளிநாடு போக வேண்டி வரும். எதிர்பார்த்த அரசாங்க, பாங்க் உதவிகள் ஒருவழியா வந்து சேர்ந்துடும். உணவு, லாட்ஜ், வாகனம், தோல், உலோகம் - தொழில்கள்ல லாபமும், ஜவுளி, புத்தகம், பொன், தொழில்கள்ல அனுகூலமும் ஏற்படும்.



கன்னி: தகராறு பண்ணிக்கிட்டிருந்த கிரகங்கள் எல்லாம் டயர்டா ஆயிடிச்சிங்க. தடைகள் எல்லாம் மெல்ல விலகி முன்னேற்றம் ஏற்படப் போவுது. விஞ்ஞான ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புன்னு இருக்கறவங்களுக்கு பலன்கள் கிடைக்கும். உத்தியோகத்தில உங்க கோரிக்கை இதுவரை கவனிக்கப்படாம இருந்தா, நிறைவேறிடும். இளைச்சுப் போயிருந்த உங்க பர்ஸ் மெல்ல குண்டாயிடும். ஏற்றுமதி, இறக்குமதி தொழில்ல இருக்கறவங்க சந்தோஷத்தை இறக்குமதி பண்ணுவாங்க. சங்கீதம், நாட்டியம்னு இருக்கறவங்களுக்கு சபாவிலேயோ, டீவியிலேயோ, ஒரு சூப்பர் சான்ஸ் காத்திட்டிருக்கு.

துலாம்: மற்ற கிரக சஞ்சாரத்தோட, குரு 11-ல் நடமாடற தால தெளிவான மனநிலை, துணிவு, நம்பிக்கை எல்லாம் கூடிடும். எதிர்பாராத சந்திப்பு ஒண்ணு காத்திட்டிருக்கு. பணவசதி சரளமா இருக்கும். உத்யோகத்தில பாராட்டு, பதவி உயர்வு கிடைக்கும். எதிர்பார்த்த உதவிகள், தொழில் முயற்சிகள், கூட்டுத் தொழில் எல்லாம் லாபகரமா அமையும். பொன், வெள்ளி, நவரத்தினம் - துறைகள்ல ஆதாயம் கொட்டோ கொட்டுன்னு கொட்டும். கலைஞர்களுக்கு கொஞ்சம் லேட்டானாலும் முன்னேற்றம் இருக்கு.



நடிகை ஹம்ஸா மொய்லிக்கு (கும்பம்) வி.ஐ.பி ஆதரவு கிடைக்குமாம்!

விருச்சிகம்: சூரியன் உச்சமாக ராகுவோட சேர்ந்து 6ல் சட்டதிட்டமா உட்கார்ந்திருக்கறதால தெய்வ பலம், தெய்வீக ஈடுபாடு, ஆரோக்கிய மேன்மை எல்லாம் கூடி தெளிவும், நிம்மதியும் உண்டாகும். உத்யோகத்தில் கருத்து வேறுபாடுகள் மறைஞ்சு, எதிர்பாராத நல்ல திருப்பம் ஏற்படும். புதிய முயற்சியும், கோரிக்கைகளும் நிறைவேறும். சுய தொழில் பண்ணறவங்களுக்கு லாபம் கூடும். வர வேண்டிய பணம் வந்து சேரும். அரசியல்வாதிகளாயிருந்தா மதிப்பு, மரியாதை எல்லாம் கூடும். இண்டஸ்ட்ரீஸ், காண்ட்ராக்ட், கமிஷன், டிராவல்ஸ் துறைகளுக்கு லாபம் கூடும். குடும்பத்தில உற்சாக சூழ்நிலையும் சுப காரிய முயற்சியும் சந்தோஷம் தரும்.

தனுசு: குரு 9ம் இடத்திலும், 4ல் சூரியனும் ராகு, புதனுடனும் மீட்டிங் போட்டு உங்களை ஆதரிக்கறதால, சகல காரியங்களிலும் முன்னேற்றமும், புதிய அறிமுகங்களும், சரளமான பணவசதியும் ஏற்படும். உத்தியோகத்தில் டபுள் பிரமோஷன் கூடக் கிடைக்கற நேரங்க இது. உங்க திறமையும் சாமர்த்தியமும் வெற்றிவிழா கொண்டாடும். யந்திரம், டிராவல்ஸ், கெமிக்கல்ஸ், ரியல் எஸ்டேட் துறைகள்ல அனுகூலங்கள் நிறைய கிடைக்கும்.

நடக்கும்!

மகரம்: உங்க ராசி கிரகங்கள் பார்க்கிற பார்வையில கொஞ்சம் குளிர்ச்சி தெரியுதுங்க. இதுவரை இருந்த சஞ்சலம், சங்கடம், வழக்கு விவகாரம் எல்லாம் மெல்லக் குறைஞ்சு, தாமதமாகி வந்த வெற்றி உங்களை நெருங்கும். நிதானமா யோசிச்சு சாதுர்யமா நடந்தா, வெற்றி உங்களுக்கேதான். உத்யோகத்தில மாற்றம் நன்மை தரும், இடமாற்றம் ஏற்படலாம். பொருளாதார நன்மையும் கூடும். புதிய தொழிலும், வெளிநாட்டுத் தொடர்பும் லாபம் தரும். ஹோட்டல், லாட்ஜ், வாகனம் துறைகள்ல இருக்கறவங்களுக்கு உயர்வு உண்டு.

கும்பம்: சூரியம் உச்சமாக 16ம் தேதி முதல் ராகுவோட கூடி தொகுதி உடன்பாடு பண்ணிக்கிறதால தைரியம், நம்பிக்கை எல்லாம் கூடிடும். குல தெய்வப் பிரார்த்தனை, பூஜை ஏதும் பாக்கியிருந்தா, உடனே கவனிங்க. வெளியூர்/வெளிநாட்டு உதவி, செய்தி வந்து உற்சாகப்படுத்தும். விஐபிங்க ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில சக ஊழியர்கள், அதிகாரிகள் ஆதரவு தருவாங்க. கொடுக்கல், வாங்கல் சமயத்தில கை கொடுத்து உதவும். மருத்துவம், தோல், ஃபர்னிச்சர், எண்ணெய் வகை வியாபாரங்கள் லாபம் கொண்டு வரும்.

மீனம்: புதுமுகம் அறிமுகத்தோட நல்ல தகவல்களும், தேவையான பண வசதியும் கிடைக்கும். அலைச்சலும் குழப்பமும் ஓய்ஞ்சு போகும். உங்க துணிவும், நம்பிக்கையும் கூடும். உத்யோகத்தில குறுக்கீடுகள் எல்லாம் விலகிப் போயிடிச்சேன்னு அசால்ட்டா இருக்காதீங்க, கொஞ்சம் சகஜமா நடந்துக்கோங்க. நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறும். புதிய முயற்சி ஏதும் இருந்தா தைரியமா தொடங்குங்க. சட்டம், ராணுவம், காவல் துறையில இருந்தா ஏதோ சாதனை நிகழ்த்தி பேர் வாங்கப் போறீங்க.

ஓடாதே!



வேகமாகக் காரை ஓட்டிச் சென்று கொண்டிருக்கையில்தான், அந்த இரு சக்கர வாகனத்தைக் கவனித்தேன்.

சாலையின் நடுவே நிறுத்தியபடி பைக்கின் மேல் அமர்ந்திருந்தார் ஒருவர்.

பொழுது இருட்டி விட்டதால், பைக்கின் ஹெட் லைட்டை எரிய விட்டிருந்தார்.

காரை வேகத்திலிருந்து மிதமாக்கி, அவர் அருகே சென்று நிறுத்தினேன்.

"சார், ஆபத்து" என்றார் அந்த பைக் ஆள்.

புரியாமல் பார்த்தேன். அவர் துப்பாக்கி ஏதும் எடுத்து நீட்டி விடுவாரோ என்ற என் அதீதக் கற்பனையை, அவர் பேச்சு தடுத்தது.

"சார், தலைவர் இறந்து போயிட்டார். ஒரு மணி நேரத்துக்கு முன்னாலே" என்றார்.

அவர் சொன்ன அந்தத் தலைவர் தமிழக அரசியலில் அசைக்க முடியாத தூண் என்பது, சிறு குழந்தைக்குக் கூடத் தெரியும்.

"நான் இப்பத்தான் ஒரு வன்முறை கும்பலிடமிருந்து தப்பிச்சு வரேன். நீங்க இதே சாலையிலே ட்ராவல் பண்ணுனீங்கன்னா, உங்க உயிருக்கு உத்தரவாதம் கிடையாது."

என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தேன். நாளை எனக்கு சென்னையில் முக்கியமான பிஸினஸ் மீட்டிங் இருக்கிறது. ஐம்பது லட்ச ரூபாய் ப்ராஜக்ட். திருச்சியிலிருந்து ஐந்து மணி நேரம் பயணித்து, இரவு பதினொரு மணிக்கெல்லாம் சென்னையை அடைந்து விடலாம் என்றுதான், மாலை ஆறு மணிக்குக் கிளம்பினேன். மூன்று மணி நேரம் பயணப்பட்டு விட்டேன். நடுவில் தடைப்பட்டு நிற்கிறேன்.

"சார், மெயின் ரோடில் நிற்காதீங்க. காரை அப்பளமாக்கிடுவாங்க. ஏதாவது குறுக்குச் சாலையில் போனால், கிராமம் ஏதும் வரும். அங்கேயே ராத்திரி தங்கிடுங்க. விடிஞ்சப்புறம், நிலைமையைப் பார்த்துச் செயல்படுங்க" என்று சொல்லிவிட்டு, தமது பைக்கைக் கிளப்



பிக் கொண்டு போய் விட்டார்.

காரை உயிர்ப்பித்து, மெதுவாக ஓட்டினேன். இரண்டு நிமிடப் பயணத் தில், இடது புறம் பாதை ஒன்று பிரிந்தது.

'ஆத்தங்குடி இரண்டு கிலோ மீட்டர்' என்றது ஓர் அறிவிப்புப் பலகை.

காரை இடதுபுறம் திருப்பினேன். குமாரான சாலை. கார் குதித்து குதித்து, ஓடியது. கொஞ்ச நேரம் சென்றதும், தூரத்தில் மங்கலான தெருவிளக்கு வரவேற்றது.

கைக் கடியாரத்தில் நேரத்தைப் பார்த் தேன். ஒன்பதரை என்றது டைடன்.

கார் வெளிச்சம் கண்ணில்பட, தமது கையால் மறைத்தபடி ஒரு பெரியவர் நின்று கொண்டிருந்தார், சற்றுத் தள்ளி.

காரை அவர் அருகில் கொண்டு போய் நிறுத்தினேன். கதவைத் திறந்து

கிருஷ்ணா

இறங்கினேன்.

"இங்கே லாட்ஜ் ஏதும் இருக்கா?" என்று கேட்டேன்.

உதட்டைப் பிதுக்கினார்.

"என்ன விஷயம்?" என்று கேட்டார்.

''தலைவர் போயிட்டாராம்'' என்றேன்.

"கடவுளே" என்றார்.

"ஏன்?"

"எத்தனை வன்முறைச் செயல்களோ? எத்தனை பேர் பாதிக்கப்படப் போறாங்களோ? அதனாலேதான் கடவுளைக் கூப்பிட்டேன்" என்றார்.

அவரது பயம் சரியெனவே பட்டது எனக்கும். எனது தங்குமிடப் பிரச்னையைக் கூறினேன்.

"இது கிராமமுங்க. லாட்ஜ் வசதி எல்லாம் கிடையாது. உங்களுக்கு அசௌகரியம் இல்லேன்னா, இப்படி என்னோடு திண்ணையிலே படுத்துக்கலாம்'' என்றார்.

அவரது பின்னே இருந்த ஓட்டு வீட்டைப் பார்த்தேன்.

'வீட்டுல மகனும், மருமகளும் இருக்காங்க. ஒரு ஹால், சமையலடிதான் மொத்த வீடுமே. சிறுசுங்களுக்கு நடுவிலே நான் எதுக்குன்னுதான், இப்படித் திண்ணையிலேயே படுத்துக்கறது. சாப்பிட்டீங்களா ஏதும்?"

"ம்" என்றேன். பசியைப் பற்றியெல்லாம் நினைக்க இப்போது நேரமில்லை.

பையிலிருந்த செல்ஃபோன் அலறியது.

"ஹலோ" என்றேன். என் மனைவிதான். நலமாயிருப்பதைச் சொன்னேன்.

அப்புறம் அடுத்த ஒரு மணி நேரம் எனது செல்ஃபோனை உபயோகித்து, நாளைய மீட்டிங், வர முடியாத சூழ்நிலை, அதற்கடுத்த நாள் அலுவலகப் பிரச்னை என்று மாற்றி மாற்றி, பேசி ஓய்ந்தேன்.

பெரியவர் என் எதிரே திண்ணையில் அமர்ந்தபடி, எனது செயல்களையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''ரொம்பப் பதற்றமாயிருக்கீங்க போலேயிருக்கு'' என்றார்.

தலையசைத்தேன்.

"ஆறு மாதமாய் பிஸினசில் சறுக்கல். நாளைக்கு முக்கியமான மீட்டிங். இந்தத் தலைவர் இன்னிக்குத்தான் சாகணுமா?" என்று நொந்து கொண்டேன்.

'லைட்டரின்' வெளிச்சத்தில் டிஜிட்டல் டைரியைப் புரட்டினேன்.

"என்ன அது?" என்றார் பெரியவர்.

"அடுத்த பத்து நாளைக்கான எனது திட்டம். இது டிஜிட்டல் டைரி."

விளக்க முற்பட்ட என்னை சைகையால் தடுத்து, படுத்துக் கொள்ள உதவினார்.

பெரியவர் இடதுபுறத் திண்ணையில் படுத்து விட்டார். உடனே குறட்டை ஒலி.

ஹூம்! நிம்மதியான பிழைப்பு!

எப்போது தூங்கினேனோ தெரியாது, காலையில் சூரிய வெளிச்சம் சுளீர் என மேலே பட, கண் விழித்தேன். கடியாரத்தில் மணி எட்டு என்று காட்டியது.

பெரியவர் புன்னகையுடன் எதிரே நின்றார். அதற்குள் அவர் குளித்து முடித்து, நெற்றியில் திருநீறு பளீரிட நின்று கொண்டிருந்தார்.

பெரியவர் கொடுத்த சூடான பானத்தைக் குடித்தேன்.

''காப்பி நல்லாயிருக்கு'' என்றேன் உபசாரமாக.

பெரியவர் சிரித்தபடி சொன்னார்.

"நீங்க குடிச்சது டீ."

வெட்கத்துடன் தலைகுனிந்தேன்.

"நேத்து ராத்திரி முதல் உங்களை கவனிச்சுட்டு வரேன் தம்பி. சொன்னால் கோபிச்சுக்க மாட்டீங்களே?"


"என்ன? தயங்காமல் சொல்லுங்க'' என்றேன்.

என் கார் அருகில் பத்துப் பதினைந்து சிறுவர்கள் சுற்றி நின்று தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்தனர். என் பார்வையைக் கண்டு 'டேய் போங்கடா' என்று

''கோயில்ல என்னப்பா கலாட்டா?''

''ஒரு தொண்டர் ரொம்ப உணர்ச்சிவசப்பட்டு இன்னொருத்தர் விரலையும் சேர்த்து வெட்டி காணிக்கைப் போட்டுட்டாராம்!''

- ந. செந்தில் குமார்.



விரட்டினார் பெரியவர்.

"தம்பி, ஏதும் வித்தியாசம் உணருறீங் களா சூழ்நிலையிலே."

அவரை யோசனையுடன் பார்த் தேன்.

" வித்தியாசம்னா... என் செல்ஃபோன் வேலை செய்யலே" என்றார்.

பெரியவர் அகன்ற புன்னகையுடன் என்னைப் பார்த்தார்.

"வாழ்க்கையிலே பணத்தை மட்டுமே துரத்தறதினாலே, நிறைய சந்தோஷங் களை இழந்துட்டு வரீங்க தம்பி" என்றார்.

"என்ன சொல்றீங்க?" என்றேன்.

"காலையிலே எழுந்ததும் குடிக்கறது காபியா, டீயான்னு கூடத் தெரியாத பர பரப்பு, வாழ்க்கையிலே அவசியமான்னு கேட்கறேன்."

"அது ஒரு பெரிய விஷயம்னு எனக் குப் படவில்லை" என்றேன்.

"அதுதான் உங்க பலவீனமே. நிகழ் காலத்தில் வாழாமல், எதிர்காலத்தில் நீங்க வாழறது கேலிக்குரியதாகப்படுது எனக்கு. உங்க எண்ணம், செயல் எல் லாமே அடுத்த நிமிஷத்தைப் பற்றி மட்டுமே யோசிக்கறதுனாலே, இந்த நிமி ஷத்தின் சந்தோஷங்களை அனுபவிக்க மறுத்துடறீங்க. சரி, அடுத்த நிமிஷ சந்தோஷங்களையாவது அனுபவிக்கறீங் களான்னு பார்த்தால், அதுவும் இல்லை. அதற்கு அடுத்த நிமிஷத்துக்குத் தாவிட றீங்க. எப்பத்தான் வாழ்க்கையை வாழப் போறீங்க, இப்படி ஓடிக்கிட்டே இருந் தால்?"

அவர் கேள்வி பொட்டில் அறைந்தது போலிருந்தது எனக்கு. இருந்தாலும், எனது நியாயத்தைச் சொன்னேன்.

"ஒரு வகையிலே நீங்க சொல்றது சரி தான். ஆனால் அடுத்தது நடக்கப் போவ தையும், அதை எதிர்கொள்வதைப் பற்றி யும் திட்டமிடாவிட்டால், நான் இந்த பிசினஸ் ரேஸில் ஓட முடியாது."

"சரி, திட்டமிடுங்கள்! ஆனால் இப் படித் திட்டமிடுவது எதற்கு? நல்லபடி யாய் வாழத்தானே? ஆனால், எப்போ துமே நீங்கள் திட்டமிடுகிற மாதிரிதான் தோன்றுகிறதே ஒழிய, வாழ்க்கையை அனுபவிப்பது போலத் தெரியவில் லையே" என்றார்.

"ஏன், எனக்கு என்ன குறைச்சல்? ஏசி ரூமில் படுக்கை, அலுவலக அறையும் ஏசிதான். சொகுசான கார் சவாரி. எதை யும் யோசிக்காமல் வாங்கும் செல்வம். எதை நான் அனுபவிக்கவில்லை?" என் றேன் சற்று அழுத்தமாய்.

பெரியவர் என்னை உற்றுப் பார்த்தார்.

"உங்களுக்குக் குழந்தைகள் எத்தனை?"

"ஒரு பையன்! ஐந்து வயது."

"அவன் தூக்கத்திலிருந்து விழிக்கும் போது, கொஞ்சியிருக்கிறீர்களா? அவனது மழலையைக் கேட்டு இரசித்திருக் கிறீர்களா? அவனை உப்பு மூட்டை தூக்கி, அவனுக்குச் சரியாய் இறங்கி விளையாடியிருக்கிறீர்களா? நூறு ரூபாய்க் கும், ஆயிரம் ரூபாய்க்கும் பொம்மை வாங்கித் தருவதால் மட்டுமே, தகப்பனின் கடமை முடிந்து விடுவதில்லை. நீங்கள் சொன்ன ஏசி அறையினால் அவனது உடல் சுகப்பட்டிருக்கலாம். ஆனால் மனசு?"

ஆவேசம் வந்தவராக அவர் பேசப் பேச, பிரமித்துப் போனேன்.

"வாழ்க்கையில் பணமும் முக்கியம் தான். ஆனால் பணம் மட்டுமே முழு நிறைவைத் தந்து விடுவதில்லை. கொஞ் சம் பிஸினஸ் கூட்டை விட்டு வெளியே வந்து, வாழ்க்கையையும் பாருங்கள். நேசியுங்கள்" என்றார்.

நான் குடித்து வைத்த டீ தம்ளரை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றார்.

வேப்பிலை அடித்தது போல அமர்ந்து கொண்டிருந்த என்னை, கிராமத்தின் குளிர்ந்த காற்று வருடுவதை முதன் முதலாய் உணர்ந்தேன்.

மனசுக்குள் புத்தம் புதுப் பூ மலர்ந்தது!

கோடி கோடி மின்னல்கள்

"எங்களை வெளியே போகச் சொல்ற அளவுக்கு, நாங்க என்ன அப்படி தப்பாப் பேசிட்டோம் வைகை...! டீ.வி.யில் நடிக்கக் கூப்பிட்டது தப்பா?"

"டீ.வி.யில் நடிக்கக் கூப்பிட்டது தப்பில்லை.."

"பின்னே...?"

"பண்ணிக்கிட்டிருந்த தொழில்தான் தப்பு."

"ஏய்.. நீ... நீ என்ன சொல்றே...?"

"இதோ பார்... இனியும் உனக்கு மரியாதை கொடுத்துப் பேசிட்டிருக்க நான் தயாராயில்லை. காரை விட்டு இறங்கி உள்ளே வரும்போதே, நீ யாருங்கிறதை நான் தெரிஞ்சுக்கிட்டேன். உன்னோட உண்மையான பேர் கமலாபாய். பிறந்தது வளர்ந்தது சென்னையில். ஆனால் தொழில் பார்த்தது மும்பையில். வெறும் கமலாபாய்ன்னா யாருக்கும் அங்கே தெரியாது. 'காமாட்டிபுரா கமலாபாய்'ன்னாத்தான் எல்லாருக்கும் தெரியும். தொழில் போட்டி காரணமாய் மும்பைக்கு டாட்டா சொல்லிட்டு, சம்பாதித்த லட்சக் கணக்கானப் பணத்தோடு சென்னை வந்தே...! சென்னையில் பழைய தொழிலை நடத்த முடியாதுன்னு தெரிஞ்சுக்கிட்டு, ஒரு டீ.வி. சேனல் எம்.டி.யைக் கைக்குள்ளே போட்டுகிட்டு, டீ.வி சீரியல் தயாரிப்பில் இறங்கிட்டே..."



ரேணுகாதேவியின் முகம் இப்போது குங்குமம் பூசிக் கொண்டாற்போல், கோபத்தில் ஜிவுஜிவுத்துக்


கொண்டிருக்க, வைகை தொடர்ந்தான். "இதெல்லாம் எனக்கு எப்படித் தெரிஞ்சதுன்னு, நீ ஆச்சர்யப்படலாம். ஒரு வருஷத்துக்கு முந்தி, ஒரு ஈவ் டீஸிங் கேஸ் விஷயமாய்ப் போலீஸ் கமிஷனரைப் பார்க்கப் போயிருந்தேன். அந்தச் சமயத்துல, மும்பை விபச்சார விடுதிகளிலிருந்து மீட்கப்பட்ட சில தமிழ்ப் பெண்கள் கிட்டே கமிஷனர் விசாரணை நடத்திக்கிட்டு இருந்தார். மேஜை மேல உன்னோட போட்டோ இருந்தது. அந்தப் பெண்கள் கிட்டே விசாரணை முடிஞ்சதும், கமிஷனர் எனக்கு அந்தப் போட்டோக்களைக் காட்டி, உன்னோட வரலாற்றைச் சொன்னார். நீ அப்ப ஒரு கட்சிக்கு, மகளிரணித் தலைவியாய் இருக்கிறதால, உன்னைக் கைது பண்ணவும் முடியாத நிலைமையில் இருக்கிறதாகச் சொன்னார்."

வைகை பேசப் பேச அவனைக் கையமர்த்திய ரேணுகாதேவி, இறுக்கமான முகத்தோடு பேச ஆரம்பித்தாள்.

"இதோ பார்...! நீ என்னைப் பத்தி சொன்னதெல்லாம் உண்மைதான். நான் ஒரு காலத்துல தப்பான தொழில் பண்ணிட்டிருந்தவதான். அதை நினைச்சு நான் இப்போ வருத்தப்படாத நாள் கிடையாது. அந்தப் பாவத்துக்கெல்லாம் பிராயச்சித்தம் பண்ணத்தான் பெண்மைக்கு மரியாதை தர்ற மாதிரியான டீவி. சீரியல்களை தயாரிச்சுட்டிருக்கேன். ஏதோ என்னோட ஆத்மத் திருப்திக்காக, சில நல்ல காரியங்களைப் பண்ணிட்டு வர்றேன். எனக்குப் பின்னாடி, என்னோட சொத்துக்கள் பூராவும், சென்னையில் இருக்கிற பதினாறு அநாதை விடுதிகளுக்குப் போய்ச் சேரணும்ன்னு ஓர் உயில் எழுதி, அதை என்னோட பேங்க் லாக்கர்ல வெச்சிருக்கேன். உனக்குச் சந்தேகமாயிருந்தா, இப்பவே என்கூட புறப்பட்டு வா காட்டறேன்... நான் மும்பையில் பண்ணிட்டிருந்தது மகாபாவமான காரியம்தான். எனக்குள் இருந்த காமாட்டிபுரா கமலாபாய் என்னிக்கோ செத்துப் போயிட்டா... நான் இப்போ அந்தச் சாக்கடைத் தொழிலிருந்து மீண்டு வந்திருக்கிற புது மனுஷி... ரேணுகாதேவி!"

பொங்கிக் கொண்டிருந்த பாலில், இரண்டு சொட்டு நீர் விழுந்த தினுசில் சட்டென்று வடிந்து போன வைகை, ரேணுகா தேவியின் கைகளை நெருங்கி மெல்லப் பற்றிக் கொண்டான்.

"ஸாரி...! நீங்க இப்படி ஒரு புது அவதாரம் எடுத்திருப்பீங்கன்னு நான் நினைக்கலை... ஏதோ



13 ராஜேஷ்குமார்

ஆத்திரத்துல 'படபட'ன்னு பேசிட்டேன்..."

அதுவரைக்கும் ஒன்றும் பேசாமல் இருந்த டைரக்டர் முல்லைவாசன் குறுக்கிட்டார்.

"வைகை! உங்களுக்கு இன்னும் ஒரு தகவலைச் சொன்னா ஆச்சர்யமாயிருக்கும். அம்மாவுக்கு சொந்தமான மாட்டுப் பண்ணை ஒண்ணு தாம்பரத்துல இருக்கு. அங்கே சுறக்கிற ஆயிரம் லிட்டர் பாலும், அந்த ஏரியாவில் இருக்கிற அநாதை விடுதிகளுக்கும், குப்பத்துக் குழந்தைகளுக்கும் போய்க்கிட்டிருக்கு..."

ரேணுகாதேவி புன்னகை செய்தாள். "கோயில்களுக்குப் போய் பாலாபிஷேகம் பண்ணி, என்னோட பாவத்தைப் போக்கிக்க முடியாதுன்னு எனக்கு நல்லாவே தெரியும். அதனால்தான் அநாதைக் குழந்தைகளோட பசிக்கிற வயிறுகளை, பாலால அபிஷேகம் பண்ணிட்டிருக்கேன்..."

வைகையில் கண்களில் நீர் பனித்தது. ரேணுகாதேவி எழுந்து நின்று, வைகையின் தோளைத் தொட்டபடி கேட்டாள்.

"இப்பச் சொல்லும்மா வைகை.... நான் தயாரிக்கவிருக்கிற 'கண்ணிலே நீர் எதற்கு?' சீரியலில் நடிக்க உனக்குச் சம்மதமா...? நீ எவ்வளவு பணம் கேட்டாலும் நான் தரத் தயாராய் இருக்கேன்..."

"அது... வந்து...வந்து..."

"இனியும் என்ன தயக்கம்...?"

வைகை தன்னுடைய அம்மா உமையாளைப் பார்க்க, அவள் ரேணுகாதேவியை ஏறிட்டாள்.

"வைகை சீரியலில் நடிக்க முடியாதுன்னு நினைக்கிறேன்."

"ஏன்...?"

"அவளுக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருக்கு."

"நிஜமாவா?"

ரேணுகாதேவி வியப்பும் மகிழ்ச்சியுமாய் வைகையைப் பார்க்க, உமையாள் தொடர்ந்தாள்.

"இளஞ்செழியன் எதிர்பாராத விதமாய் இறந்ததும், நொறுங்கிப் போன வைகைகிட்டே, ஒரு வருஷத்துக்கு நாங்க கல்யாணப் பேச்சை எடுக்கலை. அதுக்கப்புறம் பேச்சு எடுத்த போதெல்லாம், தனக்குக் கல்யாணமே வேண்டாம்னு சொல்லிட்டிருந்தா. போன மாசத்துல ஒருநாள் 'ப்ரானேஷ்'னு ஒரு சாஃப்ட்வேர் என்ஜினியர் தன்னோட அம்மாவைக் கூட்டிக்கிட்டு வந்து, வைகையைப் பெண் கேட்டார். அந்த ப்ரானேஷை முன்னாடியே வைகைக்குத் தெரியும். மூணு வருஷத்துக்கு முந்தி தாழ்வு மனப்பான்மையாலும், வேலை கிடைக்காத விரக்தியாலும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட ப்ரானேஷுக்கு, 'மனசுக்குள் மழையா?' கவுன்ஸிலிங் மூலம், வாழ்க்கையில் பிடிப்பையும் தன்னம்பிக்கையையும் ஏற்படுத்திக் கொடுத்தது வைகைதான். இன்னிக்கு ப்ரானேஷ் நல்ல வேலையில் இருக்கும் சாஃப்ட்வேர் இன்ஜினியர். மொதல்ல வைகை கல்யாணத்துக்கு மறுத்தாலும், தொடர்ந்து ஒரு வார காலம் வீட்டுக்கு வந்து வந்து, ப்ரானேஷ் வற்புறுத்தவே, வைகை கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டா. வைகை கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டது இன்றளவும் எங்களுக்கு ஆச்சர்யம்தான்..."

"எங்கள் கட்சிப் பேச்சாளர் அந்த வடநாட்டுத் தலைவரைப் பற்றி மரியாதை இல்லாமல் பேசியதாகச் சொல்வது பச்சைப் பொய். சோமாரிஜி, பேமானிஜி என்று மரியாதையாகத்தான் திட்டினார்.

- தாம்பரம் பி.ஆர். கண்ணன்"

"எப்போ கல்யாணம்...?"

"இன்னும் மூணு மாசம் இருக்கு... ப்ரானேஷோட அப்பா துபாய்ல இருக்கார். அவரோட காண்ட்ராக்ட் ஓர்க் மூணு மாசத்துல அங்கே முடிஞ்சுடுமாம்... அவர் சென்னைக்கு வந்த ஒரு வாரத்துக்குள்ளே கல்யாணம். ஏதாவது ஒரு கோயில்ல வெச்சு சிம்பிளா நடத்திடலாம்னு இருக்கோம்."

ரேணுகாதேவி வாயெல்லாம் பல்லாகச் சிரித்தாள்.

"வைகை சீரியல்ல நடிக்கிறது முக்கியமில்லை. கல்யாணம்தான் முக்கியம்.

நாங்க சீரியலுக்கு வேற யாராவது ஒரு நடிகையைப் போட்டுக்கிறோம். வைகையோட கல்யாணத்துக்கு எங்களுக்கு அழைப்பு உண்டா?"

"கண்டிப்பா உண்டு..."

அடுத்தநாள் காலை பதினொரு மணி.

பள்ளியில் மதிய உணவு ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்த வைகை, அர்ச்சனா வருவதைப் பார்த்ததும், ஓடிப்போய் அவளை எதிர்



கொண்டாள்.

"வா.. அர்ச்சனா..! நானே உன்னோட வீட்டுக்கு வரலாம்ன்னு இருந்தேன். நீயே வந்துட்டே!"

"சரி... மொதல்ல என்னோட வாழ்த்துகளை வாங்கிக்க. அப்புறமா திட்டறேன்..."

"எதுக்காக வாழ்த்து... எதுக்காகத் திட்டு...?"

"உனக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருக்காமே... அதுக்காக வாழ்த்து. அதை மொதல்ல என்கிட்ட சொல்லாமே, அந்த டி.வி ப்ரொட்யூஸர் ரேணுகாதேவிகிட்டே சொன்னதுக்காக, இப்பத் திட்டப் போறேன்..."

"ஸாரி... அர்ச்சனா... ரேணுகாதேவி கிட்டே சொல்ல வேண்டிய நிலைமை... சொல்லிட்டேன்..."

"நீ கல்யாணம் பண்ணிக்க ஒத்துக்கிட்டதை இன்னமும் என்னால நம்ப முடியலை வைகை. உன்னோட ஸ்டீல் இருதயத்தை அசைச்சுப் பார்த்துட்ட அந்தப் ப்ராணேஷ், உண்மையிலேயே கிரேட்தான். அதுக்காகவே அவருக்கு ரத அர்ஜுனா அவார்ட் தரலாம். அவரோட போட்டோ உன்கிட்டே இருக்கா...?

"இல்லை..!"

"மறுபடியும் உன்னை எப்ப பார்க்க வருவார்?"

"அடுத்த சன்டே வர்றதா சொல்லியிருக்கார்."

"நான் அவரைப் பார்க்க வரலாமா...?"

"தாராளமா...!" சிரித்த வைகை சொன்னாள்,

"அர்ச்சனா! நான் இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டதுக்குக் காரணம் என்னோட அம்மாதான். எனக்குக் கல்யாணம் நடக்கணும்ங்கிறதுக்காக அம்மா மேற்கொள்கிற விரதங்களைப் பார்த்தா பயமாயிருக்கு. வாரத்துல நாலு நாள் சாப்பிடறதே கிடையாது. காலையில அஞ்சு மணிக்கு எந்திரிச்சு, பச்சைத் தண்ணியில தலைக்குக் குளிச்சுட்டு, பக்கத்துல இருக்கிற மாரியம்மன் கோயிலுக்குப் போய், அங்கப்பிரதட்சிணம் வேற பண்றாங்க... ஒவ்வொரு அமாவாசைக்கும் திருவேற்காடு அம்மன் கோயிலுக்குப் போய், மண் சோறு சாப்பிடறதும், ஒவ்வொரு பௌர்ணமிக்கும் மாங்காடு அம்மன் கோயிலுக்குப் போய்..."

"அம்மா...!"

பின் பக்கம் குரல் கேட்டு, வைகை திரும்பினாள். பள்ளியின் ப்யூன் நின்றிருந்தான்.

"என்ன வேலுசாமி...?"

"உங்களைப் பார்க்கிறதுக்காக மணிமேகலைன்னு ஒரு அம்மா வந்து, ஆபீஸ் ரூம்ல காத்துட்டிருக்காங்க..."

வைகையிடம் இலேசாய்ப் பதற்றம்.

"இப்ப வர்றேன்னு போய்ச் சொல்லு வேலுசாமி..!"

ப்யூன் நகர்ந்து போனதும் அர்ச்சனா கேட்டாள்,

"என்ன வைகை... எதுக்காக இந்த டென்ஷன்... யார் அந்த மணிமேகலை...?"

"ப்ராணேஷோட அம்மா..."

(தொடரும்)



தேர்தல் குறள்

(4.4.04 கல்கியில் இடம்பெற்ற அரசியல் குறள்களால் தூண்டப்பட்ட, வாசகர்களின் கைங்கரியம்)

- நல்லவர் தோற்பதும் அல்லவர்
  ஜெயிப்பதும்
  ஆராய்தல் மக்கள் கடன்.

- எம்எல்ஏ ஆவதுவும் எம்பியாய்
  ஆவதுவும்
  நம்வீடு வாழ்வ தற்கே.

- மந்திரியாய் ஆவதற்கு
  மதிவேண்டா குந்தி
  கும்பிடத் தெரிந்தால் போதும்

  - கோமாகுடி இராசரத்தினம்

- குணமாய்ந்து குறை ஆய்ந்து
  முன்னாள் பணி ஆய்ந்து
  மணமாய்ந்து தேறுதல் தேர்வு.

- வாய்ப் பந்தற் போட்டு
  மறுகணமே மறந்திட்டு
  ஏய்ப்போரைத் தேர்தலில்
  களை.

- வாக்குச்சாவடியில்
  வன்முறை
  புரிவோனைப்
  பேய்க்குச் சமமாய்க்
  கொளல்.

- ஆணவத் தாண்டவமாய்
  அரசியலை ஆக்கிடுவோர்
  வினைகளெல்லாம் கடை.

- ஆவி பிரியினும் ஆசனத்தை
  விடாக்கண்டன்
  பாவியைப் பார்த்தலும் பிழை.

- பெட்டிகளாய்ச் செலவிட்ட பெரும்
  பொருள் தேர்தலின் பின்
  வட்டியுடன் தாமே வரும்.

- காசுபணம் 'கட்'அவுட் கள்ள ஓட்
  டென்பதெல்லாம்
  தூசாகும் வேட்பா ளர்க்கு.

நன்றி: 'புதுக்குறள்' - பிரசுரம்
தொகுப்பு: ப.ஸ்ரீ.இராகவன்

விடியல் எப்பொழுது?



ப.சிதம்பரம்

உங்களுக்கு உள்ளே புதைந்திருக்கும் 'பொருளாதார மனிதன்' விழித்துக் கொண்டு விட்டானா?

ஐயாயிரம் ஆண்டுக் காலமாக இந்தப் பாரத நாட்டில் ஏன் ஏழ்மை இருக்கிறது என்று கேட்கிறான். 'இது விதி' என்ற போலி வாதத்தை நிராகரிக்கிறான்.

"இந்தியா என்ற பெரிய நாட்டை இங்கிலாந்து என்ற ஒரு சிறிய தீவு நாடு எப்படி அடிமைப்படுத்தியது?" என்ற கேள்வியைக் கேட்கிறான். "இந்தியர்கள் ஏழைகளாக இருந்தார்கள். ஆனால் இங்கிலாந்து செழிப்படைந்ததே. இந்த விந்தை எப்படி நடந்தது?" என்று கேட்கிறான்.



"இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தால் வறுமை நீங்கும் என்று சொன்னார்களே? சுதந்திரம் அடைந்த பிறகு ஐம்பத்தியாறு ஆண்டுகள் கழிந்தும், இன்னும் பல கோடி மக்கள் ஏன் வறுமையின் கோரப் பிடியில் இருக்கிறார்கள்?" என்ற கேள்விகளைக் கேட்கிறான்.

1980-ஆம் ஆண்டுகளில் தயக்கத்துடன் தொடங்கி, 1991-ஆம் ஆண்டில் துணிச்சலுடன் மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்கள் பிரமிக்கத்தக்க மாறுதல்களைக் கொண்டு வந்துள்ளனவே, இந்த அதிசயம் பத்தாண்டுகளில் எப்படி நிகழ்ந்தது என்று வியந்து பல கேள்விகளைக் கேட்கிறான்.

"இருபது கோடி மக்களுக்குக் கிடைத்துள்ள பயன்கள், எஞ்சியுள்ள எண்பத்திரண்டு கோடி மக்களுக்கும் கிடைப்பதற்கு என்ன தடை?" என்ற கேள்வியைக்

26 நமக்கே உரிமையாம்

கேட்கிறான்.

'குறிப்பாக, கடைக்கோடியில் இருக்கும் சுமார் நாற்பது கோடி மக்கள் உணவு, வீடு, குடி தண்ணீர், கழிப்பிட வசதி, மருத்துவ வசதி, உயர்கல்வி இல்லாமல் இருக்கிறார்களே, அவர்களுக்கு எப்பொழுது பொருளாதார விடுதலை கிடைக்கும்?' என்ற கேள்வியைக் கேட்கிறான்.

'இந்தியா ஒளிர்கிறது' என்பது கால்வாசி உண்மை.

இந்தியாவுக்கு ஒளியைத் தந்தது - புதிய பாதையை வகுத்துத் தந்தது - 1991ஆம் ஆண்டு முதல் நிறைவேற்றப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்களே. அந்த ஒளி இல்லாமல் இந்தியா ஒளிராது.

"அந்த ஒளி, அந்த வெளிச்சம், நூற்றியிரண்டு கோடி மக்களுக்கும் எப்பொழுது கிடைக்கிறதோ, அன்று தானே இந்தியா ஒளிர்கிறது என்று சொல்ல முடியும்?" என்ற கேள்வியை எழுப்புகிறான்.

அந்த விடியல் எப்பொழுது வரும்?

அந்த விடியல் ஏற்படும் நாளில் நீங்கள் கனவு காணும் இந்தியா எத்தகைய இந்தியாவாக இருக்க வேண்டும்?

இந்தக் கேள்விக்கு ஒவ்வொருவரும் பதில் சொல்ல வேண்டும்.

"என் இந்தியா எத்தகைய நாடு?" என்று நான் என் உள் மனத்தில் ஒரு கேள்வியை எழுப்புகிறேன்.

ஒரே இனம், ஒரே மதம், ஒரே மொழி என்ற நாடா? பல இனங்கள், பல மதங்கள், பல மொழிகள் என்று பன்முகம் கொண்ட நாடா?

என் கலாசாரத்துக்கும், என் மொழிகளுக்கும், என் இசைக்கும் பெருமை சேர்த்தவர்களின் முகங்களைப் பார்க்கும்போது, அவர்களிடையே காணும் வேறுபாடுகள் எனக்குக் குறையாகத் தெரியவில்லையே? மாறாக, அவை என்னுடைய பெருமையை அல்லவா உணர்த்துகின்றன?

என் இசைக்குப் புகழ் சேர்த்தவர்களில் பிஸ்மில்லாகானும், விலாயத்கானும், அம்ஜத் அலிகானும், ஷேக் சின்ன மௌலானா சாகிப்பும் உள்ளார்களே? திரைப்பட இசைத் துறையில் உலகளவில் புகழ் பெற்றவர்களாக ஏ.ஆர். ரஹ்மானும், ஜேசுதாஸும் விளங்குகிறார்களே?

நான் வாழ்கின்ற காலத்தில் இந்தித் திரைப்பட உலகில் ஷாருக்கான், சயீப் அலிகான், சல்மான்கான் ஆகியோர் அல்லவா நட்சத்திரங்களாக ஜொலிக்கிறார்கள்?

என் நாட்டுக்குப் பணியாற்றிய அதிகாரிகள் வரிசையில் கிறிஸ்துவர்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் என்று பலர் உள்ளார்களே!

என் நாட்டின் கிரிக்கெட் குழுவின் வெற்றிக்கு ஜாஹிர் கானும், முகம்மது கயிப்பும், இர்பான் பத்தானும் பங்களித்தது என் நினைவில் பசுமையாக உள்ளதே?

பெரும் ஓவியராக எம்.எஃப். ஹுசேன் அல்லவா உலகப் புகழ் பெற்றுத் திகழ்கிறார்?

என் நாட்டின் விஞ்ஞானத்தை உலகத் தரத்துக்கு உயர்த்தியவர்கள் வரிசையில் டாக்டர் அப்துல் கலாம் அல்லவா முதலிடத்தில் இருக்கிறார்?


பல்லாண்டு காலம் நீதி பரிபாலனம் செய்த நீதிபதிகள் ஹிதயத்துல்லா, எம்.எம். இஸ்மாயில் ஆகியோர் ஆற்றிய பணியை நான் மறந்துவிட முடியுமா?

ஜவாஹர்லால் நேரு ஒரு நூலில் எழுதியுள்ளதைப் பாருங்கள்:

"இந்தியா என்பது ஒரு தலைமுறை எழுதிய எண்ணங்களையும் கனவுகளையும் கொண்டது. அவர்கள் எழுதியதன் மீது அடுத்த தலைமுறை, தன் எண்ணங்களையும் கனவுகளையும் எழுதுகிறது. ஆனால் முன் எழுதியதை அழித்துவிடாமலும், மறைத்துவிடாமலும் எழுதுகிறது."

எவ்வளவு உயர்ந்த சிந்தனை! சான்றோர் இப்படித்தான் சிந்திப்பார்கள்.

ஒவ்வொரு தலைமுறை எழுதிய எண்ணங்களையும், கனவுகளையும் உணர்ந்து



அனுபவிக்க வேண்டும். அதற்கு முன் என்ன இருந்தது என்பதையும் வரலாற்றுக் கண்ணோடு பார்க்க வேண்டும். பழைய அனுபவங்களையும், புதிய அனுபவங்களையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏற்கெனவே எழுதப்பட்டதை அழித்துவிடாமலும், மறைத்துவிடாமலும், நம்முடைய எண்ணங்களையும் கனவுகளையும் எழுத வேண்டும்.

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் முக்கிய அணிகளாக இரண்டு அணிகளே இருக்கின்றன. அவற்றின் பொருளாதாரக் கொள்கைகளை ஆராய்ந்து, உங்களில் புதைந்திருக்கும் பொருளாதார மனிதன் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

அந்தப் பொருளாதார மனிதனின் வாழ்க்கைக்குப் பொருள் (பணம்) தேவை. ஆனால் பொருளை மட்டுமே கொண்டு அவன் நிறைவடைவதில்லை. பொருளாதார மனிதனுக்குப் பல எண்ணங்களும், கனவுகளும் தோன்றும். அவற்றில் முதன்மையானது, 'நான் வாழும் நாடு எத்தகைய நாடாக இருக்க வேண்டும்?' என்று அவனுள்ளே எழும் கேள்வி. தன் நாட்டைப் பற்றிக் கனவு காணாத மனிதனே இருக்க முடியாது.

பாரதிய ஜனதா கட்சியின் தலைமையில் உள்ள கூட்டணிக் கட்சிகள் (அவர்களுக்குள்ளே பல கருத்து வேறுபாடுகள் இருந்தாலும்) பாரதிய ஜனதா கட்சியின் 'இந்தியா'வையே முன்னிலைப் படுத்துகின்றன. அவர்களுடைய 'இந்தியா'வின் கரு 1990-ஆம் ஆண்டு விதைக்கப்பட்டது. அப்பொழுதுதான் எல்.கே. அத்வானி தம்முடைய முதல் ரத யாத்திரையை மேற்கொண்டார். சுதந்திர இந்தியாவின் வரலாற்றில், முதன் முதலாக ஓர் அரசியல் கட்சி "இவர்கள் நம்மவர், அவர்கள் அந்நியர்" என்று மக்களைப் பிரித்தது. மக்கள் மத்தியில் ஏற்படக் கூடிய பேத உணர்வு, தங்களுக்குச் சாதகமாகவே அமையும் என்று நினைத்தார்கள். கடந்த ஆண்டு லக்னோவில் ஒரு பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர், "முஸ்லிம்கள் எங்களுக்கு வாக்களிக்காவிட்டால் போகட்டும். அவர்கள் வாக்குகள் இல்லாமலேயே நாங்கள் வெற்றியடைவோம்" என்று மார் தட்டினார். குஜராத்தில் மதக் கலவரமும், படுகொலைகளும் நிகழ்ந்த காலத்தில், எரிகிற நெருப்பை அணைப்பதைத் தவிர்த்து, "மத மாற்ற நடவடிக்கைகளைப் பற்றி நாடு தழுவிய விவாதம் வேண்டும்" என்று வாஜ்பாய் பேசினார்.

"இவர்கள் நம்மவர், அவர்கள் அந்நியர்" என்று பிரித்துப் பார்க்கும் சித்தாந்தம் நாடு, மாநிலம், மாவட்டம் ஒன்றியம், கிராமம் என்று எல்லா நிலைகளிலும் பின்பற்றப்பட்டால்...

அதுதான் நீங்கள் கனவு காணும் இந்தியாவா?

இத்தகைய இந்தியாவிற்கு மாற்றாக, இன்னொரு 'இந்தியா' பற்றிய கனவும் உண்டு.

அது "எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் ஓர் விலை. எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்று பாரதி பாடிய இந்தியா. நூற்றியிரண்டு கோடி மக்களையும் இணைக்கும் எண்ணங்கள் மட்டுமே உலா வரும் இந்தியா. அவரவர் தம் மதம், தம் மொழி என்று பாராட்டும் அதே நேரத்தில், ஒவ்வொருவரும் 'இந்தியன்' என்ற ஒரு அடையாளத்தை ஏற்றுக் கொள்ளும் இந்தியா. அதுபோன்ற அடையாளத்தை ஏற்றுக் கொள்ளும் அனைவருக்கும், இடம் இருக்கும் நாடே இந்தியா, என்ற சித்தாந்தம் கோலோச்சும் இந்தியா.

நீங்கள் கனவு காணும் இந்தியா அத்தகைய இந்தியாவா?

உங்களில் ஒளிந்திருக்கும் பொருளாதார மனிதன் வாக்களிக்க வெளியே வரும்போது, உங்கள் எண்ணத்தையும், கனவையும் பிரதிபலிக்கும் இந்தியாவை உருவாக்க வாக்களியுங்கள்.

(முற்றும்)


மோடி எந்த வேலைக்கு

● டி. சிவகுமார், மைசூர்-20.

? அத்வானி - வாஜ்பாய் இடையே கருத்து வேறுபாடு இருப்பதாக கலைஞர் கூறுவது சரியா...?

! சிந்திக்கத் தெரிந்த மனிதர்களிடையே கருத்து மாறுபாடு இருக்கத்தான் செய்யும். விவாதித்து, தவறு இருந்தால் திருத்திக் கொண்டு, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, நாட்டை நல் வழியில் அழைத்துப் போவதுதான் சிறந்த தலைமை.

• பேசாதது, பேசியது!





• வரி, விதி!

● எஸ். ராஜேஸ்வரி, போடிநாயக்கனூர்

? இந்து மதத்தை அடிக்கடி இழித்துப் பழிக்கும் கருணாநிதி, (சமீபத்தில் பரதனைப் பாதகன் என்றார்) மத நல்லிணக்க வாதியாம். ஆனால் எந்த சமயத்தையும் மறைமுகமாகவோ, நேரடியாகவோ கொஞ்சமும் தாக்கிப் பேசாத அத்வானியும், வாஜ்பாயும் மதவெறியர்களாம்! தராசாரே, இந்த அதியற்புத நியாயம் உங்களுக்குப் புரிகிறதா?

! கருணாநிதி, ஹிந்து மத நம்பிக்கைகளைத் தாக்கிப் பேசுவது முற்றிலும் தவறுதான்; மறுக்கவில்லை. நாத்திகரான அவருக்கு ராமாயணம் வெறும் கதை, எனவே அதைத் தமது இஷ்டத்துக்குத் திரித்துப் பயன்படுத்திக் கொள்கிறார். அத்வானி, வாஜ்பாய் கதை வேறு... அவர்கள் நேரடியாக எந்த மதத்தையும் தாக்காவிட்டாலும், ஹிந்து மத அடிப்படைவாதத்தை ஏற்பதன் காரணமாக, பிற மதங்களை அச்சுறுத்துகின்றனர் என்பதுதான் உண்மையான நிலைமை. முன்னது துப்பாக்கி; பின்னது கண்ணி வெடி! இது ஹிந்து மதத்தவருக்குப் புரிவது ரொம்பக் கஷ்டம் என்பது பா.ஜ.கவின் அதிர்ஷ்டம்; நாட்டின் துரதிர்ஷ்டம்!

● ப. இராம் முருகன், சிவகங்கை

? 'நிச்சயம் ராகுல் - ப்ரியங்காவுக்கு எதிராகப் பேச மாட்டேன்; தேர்தல் பிரசாரத்தில் பேச வேறு எத்தனையோ விஷயங்கள் உள்ளன' என்று வருண் காந்தி சொல்லியிருப்பது...?

! இதைவிட ஒரு படி மேலே போய், சோனியா - ராகுலை மோடி கீழ்த்தரமாக விமர்சித்ததைக் கண்டனம் செய்த வருணின் தார்மிகக் கோபத்துக்கு ஜே!

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.

? 'முந்தைய பிறவியில் நான் வாஜ்பாயின் மகளாகப் பிறந்திருக்க வேண்டும்' என்று லதா மங்கேஷ்கர் பேசியிருப்பது...?

• வள்ளுவர், வம்பு!





• கதை, காரணம்!

! ATALஐத் திருப்பிப் போட்டால் LATA(!) என்றும் சொல்லியிருக்கிறார். அன்பு மிகுதியால் எடுத்துக் கொள்ளும் உரிமைகளை மன்னிக்க



லாயக்கு???

வேண்டியதுதான். அதே உரிமையை ராஜ்யசபாவிலிருந்து ஆப்செண்ட் ஆக எடுத்துக் கொள் வதுதான் சிக்கல்!

● ஆர்.சாலமன், ஆலங்குளம்.

? இலங்கைத் தேர்தல்...?

! எதிர்பார்த்த மாதிரியே எந்தக் கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், உதிரிகளைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டு, ஆட்சி அமைக்கும் UPFAவுக்கு எதிர்காலம் பெரிய சவால்!

● ஜி.பாக்கியலக்ஷ்மி, பள்ளிபுரம் (பாலக்காடு) *

? 'என்.டி.ஏ ஆட்சிக்கு வந்தால் வரிகள் குறைக்கப்படும்' என்று ஜஸ்வந்த் சிங் கூறுவதை நம்பலாமா...?

! No such luck பாக்கியலக்ஷ்மி! உங்க பெயர்ல வேணா அதிர்ஷ்டம் இருக்கலாம். அதுக்காக இவ்வளவு எதிர்பார்க்கலாமா நீங்க...?

● கருப்பம்புலம் சித்திரவேலு, நெய்விளக்கு

? பதிமூன்றாவது மக்களவை உறுப்பினர்களுள் 53.4 சதவிகிதத்தினர், மனைவியைத் துன்புறுத்துதல், கொலை, கொள்ளை, பாலியல் பலாத்காரம், மோசடி, ஏமாற்று ஆகிய குற்றங்களுக்காக வழக்கு பதிவு செய்யப்பெற்றோர், தண்டனை பெற்றோர் அல்லது அபாரதம் செலுத்தியோராமே...?

! பாக்கி 45.6 பேர் வழக்குகள் பதிவு செய்யப்படாத குற்றவாளிகள். நல்லவர்கள் ஒரு சதம் தேறினால் பெரிசு! இந்தியா எப்படி ஒளிரும்?

• அன்பு, ஆப்செண்ட்!



● டேவிட் ராஜா, சென்னை - 114.

? சோனியாவைப் பார்த்து பா.ஜ.க பயப்படுகிறதா?

! அதைவிட அதிகமாக ஆர்.எஸ்.எஸ், வி.எச்.பி அமைப்புகளிடம்தான் அதற்குப் பயம்!

● ஜி. ஜெயராமன், கூந்தலூர்.

? தேர்தலுக்குப் பிறகு இந்தியாவின் தலையெழுத்து நன்றாக இருக்குமா...?

! அது வாக்காளர்களின் ராசி பலனைப் பொருத்தது!

● நகை இ. மகராஜன், கடமலைக் குண்டு.

? 'காமத்துப் பாலை எழுதியிராவிட்டால் இத்தக் காலத்தில் பலர் திருவள்ளுவரையே மறந்திருப்பார்கள்' என்று எஸ்.எஸ். சந்திரன் சொல்லியிருக்கிறாரே...?

! நல்லவேளை, எஸ்.எஸ். சந்திரனையும் அவர் உளறல்களையும் நாளைக்கே எல்லோரும் மறந்து விடுவார்கள்.



• ... துணைக் கருத்து!



• கருத்து.....

● எம். சிவகுருநாதன், தஞ்சாவூர்.

? 'பா.ம.க. தொகுதிகள் குறித்த ரஜினியின் முடிவு, வெற்றி வாய்ப்புகளை பாதிக்காது' என்று கருணாநிதி சொல்வது குறித்து...?

! கூட்டணியின் ஒட்டுமொத்த வெற்றியைப் பாதிக்காவிட்டாலும் அதன் அளவை, தரத்தை நிச்சயம் பாதிக்கும். பா.ம.கவுக்குப் போட்டியிட உரிமை

நீங்கள் கேட்டவை—தராசு

❏ ரூ. 100 பரிசு பெறுபவர்:
ஆ. சண்முகசுந்தரம்
14, சிந்தாமணி பஜார்,
திருச்சி - 2.

* ரூ. 50 பரிசு பெறுபவர்:
ஜி. பாக்கியலக்ஷ்மி,
27/599, பள்ளிபுரம் கிராமம்,
பாலக்காடு - 678 006

உண்டு; அதை எதிர்த்து அத்தொகுதிகளில் அ.தி.மு.க - பா.ஜ.க அணிக்கு ஆதரவு தெரிவிக்க, ரஜினிக்கு உரிமை உண்டு. ஆனால் எதிர்ப்பை வன்முறையாக வளர்க்க யாருக்குமே உரிமை கிடையாது.

● **வெ. ராணி, நாமகிரிப்பேட்டை,**

? பெண்களை அடிமைப்படுத்தும் ஆண்கள் வலிமையானவர்களா? ஆண்களை வசியப்படுத்தும் பெண்கள் வலிமையானவர்களா...?

! ப்பூ! இதிலென்ன வலிமை? இரண்டு பேரில் யார் அதிக பலவீனர் என்று வேண்டுமானால் கேளுங்கள். தராசின் தட்டுகள் சமமாக நிற்கும்!

● **ஜி. பாக்கியம், சென்னை - 26.**

? 'சோனியா எழுத்தர் வேலைக்கு லாயக்கில்லை; ராகுல் டிரைவர் வேலைக்கு லாயக்கில்லை' என்று சொல்லும் நரேந்திர மோடி எந்த வேலைக்கு லாயக்கு?



! நிச்சயமாக முதல்வர் பதவிக்கு லாயக்கில்லை!

● **இரா. சக்கரபாணி, மதுரை - 7.**

? ராகுல், அமேதியில் ஆற்றிய உரை எப்படி....?

! கண்ணீர் வரவழைக்காவிட்டாலும் 'கணீர்' என்று ஒலித்தது. முக்கியமாக, தமது தாயார் மீது ஏவப்பட்ட தரக்குறைவான தாக்குதல்களுக்குப் பதிலளித்து மேலும் ரசாபாசமாகச் செய்யாமல், 'எங்கள் இதயம் துடிப்பதே நாட்டு நலனுக்காக' என்று பேசியது, கோயில் மணி ஓசை போல் இருந்தது.

● **ஆ. சண்முகசுந்தரம், திருச்சி ❏**

? ஆளுங்கட்சி சரியில்லை என்று எதிர்க்கட்சிகளுக்கு வோட்டுப் போட்டு வெற்றி பெறச் செய்வது; மீண்டும் அடுத்த தேர்தலில், அந்தக் கட்சி சரியில்லை என்று பழைய ஆளுங்கட்சிக்கே வோட்டுப் போடுவது - மொத்தத்தில் எந்த ஆட்சியும் சரியில்லை... இதை மாற்ற வழி...? அரசியல் சாசனத்தை மாற்ற வேண்டுமா...?

! அரசியல் சாசனத்தை மாற்ற வேண்டாம். அரசியல் சாசனத்துக்கு உட்பட்டு, தேர்தல் சீர்திருத்தங்கள் வர வேண்டும். உச்சநீதிமன்றமும், தேர்தல் கமிஷனும் முயன்றால் முடியும்.

● **சி. சுப்புலட்சுமி சிதம்பரம், ஸ்ரீவில்லிபுத்தூர்.**

? பெண்களுக்கு நாடாளுமன்றத்தில் 33 சதவிகித இட ஒதுக்கீடு என்று காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் சொல்வதை ஏன் எதிர்க்கிறீர்கள்? பெண்கள் மீது அப்படி என்ன வெறுப்பு....?

! பெண்கள் மீது யாதொரு வெறுப்பும் இல்லாததால்தான் அம்மணி ஒதுக்கீட்டை வெறுக்கிறேன்! சலுகை, ஒதுக்கீடு, எதுவுமின்றிப் பெண்களால் தன்னம்பிக்கையுடன் படிப்படியாக முன்னேறி, பொதுவாழ்வில் உரிய இடத்தைப் பெற முடியும். அதைத்தான் இப்போது அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில், ஒதுக்கீடு என்பது, வளர்ச்சியை வேகப்படுத்தும் ஹார்மோன் ஊசி போடுவது போல் அபாயமானது. சமத்துவம் என்பதற்கு முரணானது.

சிம்ரன் சொன்ன யோசனை!



எஸ்.ஜே. சூர்யா :
என்னது, நான்தான் நெல்லை தொகுதி வேட்பாளரா? தாலி கட்டற கடைசி நிமிஷத்துலே அறிவிச்சா தலைசுத்துதே?

சிம்ரன் :
கவலைப்படாதீங்க சூர்யா. தொகுதியிலே அஞ்சாறு இடத்துலே 'ஆல் தோட்ட பூபதி' பாட்டுக்கு ஆட்டம் போட்டாலே போதும். வோட்டுகளை அள்ளிடலாம்.

ஜஸ் - தேவயானி :
இதுக்குத்தான் கதர் வேஷ்டி, கதர் சட்டையில கமல்நாத் வீட்டுப் பக்கம் வாக்கிங் போகாதீங்கன்னு சொன்னோம்.

* 'நியூ' படத்தில் ஒரு காட்சி

கற்பனை : ஜெ

கிருஷ்ணமூர்த்தி கன்னத்தில் கை வைத்து மேற் கூரையைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார். "பலத்த யோசனை போலிருக்கே" என்றேன்.

திடுக்கிட்டுத் தலை தாழ்த்தி, "என்ன சொன்னே...?" என்றார்.

"எது தனி நபர் தாக்குதல், அதற்கு எப்படி இலக்கணம் வகுப்பது என்று மூளைக்குக் கீ கொடுத்துக் கொண்டிருக்கிங்க போல..!"

"ஆமா, தெரியாத்தனமா தனி நபர் தாக்குதல் கூடாதுன்னு சொல்லித் தொலைச்சுட்டேன்; இப்ப என்னையே அதற்கு விளக்கம் தரச் சொல்றாங்க."

"அமெரிக்கப் பத்திரிகை 'நியூஸ் வீக்'கில் இந்த வாரம் அட்டைப்படமாக வாஜ்பாய் இடம் பெற்றிருக்கிறார். அதற்கு 'old man' என்று தலைப்புத் தந்திருக்கிறார்கள். இது தனி நபர் தாக்குதல் தானே?"

"அசடே! அது old man இல்லே... Grand old man! அதுக்கு நல்ல அர்த்தம் உண்டு."

"அப்படியா, நான் old manன்னா கிழவன்; Grand old manன்னா படு கிழவன்னு நினைச்சிட்டிருக்கேன்."

"சீச்சீ! Grand old manன்னா பெருமைக்குரிய கிழவன்னு அர்த்தம்!"

"ஆக மொத்தம், கிழவன் கிழவன் தான்; குமரனாகி விட மாட்டான்... அது சரி, என்னைப் போன்ற அசடுகள் தப்பர்த்தம் பண்ணிக் கொள்ள வழியில்லாதபடி, தனி நபர் வர்ணனை துல்லியமா அமையணும்னு விதிமுறை வகுப்பீங்களா...?"

"நீ ரொம்பக் குழப்பறே, நான் ஏற்கெனவே குழம்பிக் கிடக்கேன்..!"

"ஒருத்தரை உயர்வாகச் சொல்லியே கிண்டலடிக்க முடியுமே... உதாரணமாக, "இல. கணேசன் அதிமேதாவியாச்சே! அதனாலதான், 'முஸ்லிம், கிறிஸ்துவத் தலைவர்களுடன் ஒரே மேடையில் அமர்ந்த கருணாநிதிக்கு மதச்சார்பின்மை பற்றி பேசவே அருகதை இல்லை'ன்னு சொல்லியிருக்கிறார்" என்று நான் எழுதினால் என்ன அர்த்தம்? இல. கணேசனைப் பாராட்டறேன்னா அர்த்தம்?"

"எனக்கு ஏற்கெனவே வழுக்கை விழ ஆரம்பிச்சுடுத்துப்பா, நீ வேற சிண்டைப் பிய்ச்சுக்கப் பண்ணாதே. கிளம்பு!" என்று கிருஷ்ணமூர்த்தி விரட்டவே, ஸ்பெஷல் ஹெலிகாப்டர் பிடித்து, பீகாரில் ரத யாத்திரை சென்று கொண்டிருந்த அத்வானியிடம் வந்து சேர்ந்தேன்.

"உங்க கற்பனா சக்திக்கு சாகித்ய அகாதமி பரிசு தந்துதான் ஆகணும்" என்றேன்.

"என்னப்பா ஒரு மாதிரியா பேசறே...?" என்றார்.



"காந்திஜி "ஹே, ராம்!"னு சொல்லிக்கிட்டேதான் உயிரை விட்டார்; அதனால அயோத்தியில் ராமர் கோயில் கட்டியே தீரணும்'னு ஒரு போடு போட்டீங்களே, அந்தக் கற்பனைக்கு அகாதமி பரிசு என்ன, ஞானபீடப் பரிசே தரலாம்!"

"என்னப்பா அதுல தப்பு? காந்திஜி 'ஹே ராம்'னு சொல்லி உயிரை விட்டது சத்தியம்; அயோத்தியில் ராமர் கோயில் கட்ட முயற்சி நடப்பதும் சத்தியம். இரண்டையும் சேர்த்துச் சொன்னேன். நான் ஒண்ணும் உண்மைக்குப் புறம்பாக பேசிடலையே...!"

"மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் ரொம்ப ஜோரா முடிச்சுப்

போடறீங்க... அது சரி, காந்திஜி 'ஹே, ராம்'னு மட்டும்தான் சாகும்போது சொன்னார்; ஆனால், ஒவ்வொரு நாளும் மாலை நேரப் பிரார்த்தனைக் கூட்டத்தில், 'ஈசுவர, அல்லா தேரே நாம்'னு திரும்பத் திரும்பச் சொன்னாரே, அதை மட்டும் வசதியா மறந்துடறீங்களே..!" என்றேன்.

"நேரமாச்சு.... கிளப்பு! கிளப்பு!" என்று அத்வானி உத்தரவு போட, சர்வ வசதி படைத்த அவருடைய ரத வாகனம், என் மீது புகை கக்கிவிட்டு விரைந்தது.

"**மா**யாவதி மேடம்! தேர்தலில் போட்டியிட வேண்டும் என்பதற்காக, உங்கள் சொத்துக்களைப் பட்டியலிட்டிருக்கிறீர்கள்..."

"ஆமாம், அதுக்கென்ன...?"

"டில்லி இந்தர்புரியிலேயே ஒன்றே கால் கோடி பெறுமானமுள்ள நாலு வீடுகள்; பாங்குகளில் பத்துக் கோடி ரூபாய் டெபாசிட்; கையில் ஒன்றரை லட்சம் பணம்; முப்பத்தியொரு லட்சத்துக்கு நகைகள்..."

"அந்தம்மா சோனியா மட்டுமென்ன, கொஞ்சமாவா வைச்சிருக்காங்க?"

ரிப்பஜ செம்பியன்

"உங்களோடு ஒப்பிடும் போது..."

"அப்படி ஒப்பிடாதே! ராகுல் காந்தியின் சொத்துக்களையும் சேர்த்துக் கணக்குப் பாரு! பிரிட்டன்ல 30,000 பவுண்டு, அமெரிக்காவில 19,000 டாலர்...

"ஆக மொத்தம், அரசியல்வாதியா இருக்கிறதுதான் பணம் பண்ணுவதற்கு சுலபமான வழி... பாவம் எங்க தமிழ்நாட்டுல கக்கன்னு ஒருத்தர் இருந்தாரு. அவர் பதவியைத் துறந்து ஓய்வு பெற்ற பிறகு, கிழிசல் கதர் ஜிப்பா போட்டுக்கிட்டு, பஸ் பிடிச்சு டிக்கெட் வாங்கிப் போவாரு.. அதை நினைச்சா..."

"கண்ணீர் விடாதே, பிழைக்கத் தெரியாத மனுஷங்களுக்காக அனுதாபப்பட்டும் புண்ணியமில்லே" என்றார் மாயாவதி.

ஒயிட் ஹவுஸுக்கு ஹாட் லைன் ஃபோன் போட்டேன்.

"ஜார்ஜ் புஷ் ஹியர்" என்றார்.

"என்னங்க, ஈராக்கை இன்னொரு வியட்நாமாக்கி விடுவீங்க போலிருக்கே..."

"அப்படியெல்லாம் ஒண்ணும் ஆகாது. ஈராக்கில் ஜனநாயக அரசு அமையணும்; அந்த நோக்கம் நிறைவேறியதும் அதிகாரங்களை முழுசாக ஈராக் மக்களிடமே தந்துவிட்டு வெளியேறி விடுவோம்."

"ஜனநாயகமோ சர்வாதிகாரமோ, அவங்க பாடு. நீங்க ஏன் உங்கள் கருத்தைத் திணிக்கணும்? இப்ப பாருங்க... மூணு நகரங்களை ஷியா கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியாச்சு. அதை நீங்க விடுவிப்பது கௌரவப் பிரச்னை ஆயிடும். போரில் அமெரிக்க வீரர்கள் மட்டுமின்றி, உங்களுக்கு உதவியாக வந்த பலநாட்டு வீரர்களும் இப்பவே கொத்துக் கொத்தா செத்துக்கிட்டிருக்காங்க. இது இன்னும் அதிகமாகும். ஈராக்கிய மக்களும் ஏகப்பட்ட பேர் உயிரை விடறாங்க. ஆனா அது தியாகமாயிடும். உங்க தரப்பில் ராணுவ வீரர்கள் மரணமடைவது உங்களுடைய பிடிவாதத்தால் ஏற்பட்ட அசம்பாவிதம்னு கருதப்படும்... அமெரிக்க அதிபர் தேர்தல் வேற வருது..."

"இப்ப நான் பின் வாங்கினாலும் தோல்வியை ஒப்புக்கிட்டதாக ஆகிவிடுமே, 'இந்தப் படையெடுப்பே தேவையற்றது' என்ற வாதத்துக்கு வலிமை சேருமே!"

"மேலும் மேலும் உயிர்ச் சேதத்தை யாவது தடுக்கலாமே..."

"காலின்பவலை அனுப்பிவிட்டு உன்னைத்தான் அயலுறவுத் துறை அமைச்சராக நான் போட்டுக்கணும்" என்றார் புஷ்.

"ஸாரி ஸார்! ஜான் கெர்ரி ஏற்கெனவே என்னை 'புக்' பண்ணிட்டாரு" என்று கூறி, ஹாட் லைன் எரிமலையாகக் கொதிப்படையுமுன்னர் 'கட்' செய்தேன். ○

“**பா**.விஜய் போன்ற சினிமா கவிஞர்கள் பாட்டெழுத வேண்டும். அவற்றைக் கர்னாடக இசையில் அமைத்து சேஷகோபாலன் போன்றோர் பாட வேண்டும்!”

- இப்படி ஒரு போடு போட்டார் எழுத்தாளர் சுஜாதா! மதுரை டி.என். சேஷகோபாலன். இசை உலகில் காலடி எடுத்து வைத்து, அரை செஞ்சுரி போட்டதைப் பாராட்டும் வகையில், அண்மையில் அவருக்கு ஒரு பாராட்டு விழா, விமரிசையாக நடத்தப்பட்டது. அந்த விழாவில் சுஜாதா வைத்த இந்த யோசனை குறித்து சேஷகோபாலனைச் சந்தித்துக் கேட்டோம்...

“கர்நாடக இசை மிகவும் புனிதமானது; பாரம்பரியம் கொண்டது. ஆனால் இந்த உலகில் மாற்றம் என்பதுதான் நிரந்தரமான ஒன்று. எனவே கர்நாடக இசையில் புதுமையும் இளமையும் புகுத்த வேண்டும். அதேசமயம் பாரம்பரியமும், பழைய இனிமையும் மாறக்கூடாது. இதில் ஆரம்பத்திலிருந்தே மிகுந்த கவனம் செலுத்தி வந்திருக்கிறேன்” என்றார் சேஷகோபாலன் தெளிவாக.

“இன்று ஹரி கதா காலட்சேபம்கூட நடத்துகிறீர்களே!”

நான் கதா காலட்சேபம் செய்ய வேண்டும் என்பது என் குருநாதரின் கட்டளை. அதுவும் என் சொந்த மதுரை மண்ணில்தான் அரங்கேறியது. இன்று, கதா காலட்சேபம் செய்ய ஏகப்பட்ட அழைப்புகள். எது எப்படியானாலும் முன்னுரிமை வாய்ப்பாட்டுக்குத் தான். வாத்தியக் கச்சேரிகளும் விரும்பிச் செய்கிறேன்.”



“கர்நாடக இசை, உங்களுக்குப் பெரும் புகழும், பணமும் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறதே! நீங்கள் பிரதிபலனாக கர்நாடக இசைக்கு என்ன செய்திருக்கிறீர்கள்?”

“என் குருநாதர், இந்தக் கலையை எனக்குக் கொடுத்ததுபோல, நான் பெரிய அளவில் என் சிஷ்யர்களுக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். என்னிடம் சங்கீதம்

“கலைஞனைவிட கலைதான் பெரிது!...”

கற்றுக் கொண்டால், ஒன்று சங்கீத வித்வானாக வேண்டும்; அல்லது சங்கீதம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியராக வேண்டும். இல்லையெனில், ஒரு மியூசிகாலஜிஸ்ட் ஆக வேண்டும். இன்றும், பழைய குருகுல முறை போல இசை கற்றுக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறேன். ஹரிகதை சொல்லவும் சிஷ்யர்களை உருவாக்க வேண்டும் என்பது என் ஆசை.”

“பாலமுரளி போல ஒரு சினிமா பாடகராகவோ, இசையமைப்பாளராகவோ நீங்கள் உருவாக இயலாதது ஏன்?”

“கர்நாடக இசை சம்பந்தப்பட்ட படம் என்பதால்தான் தோடி

ராகத்தில் நடித்தேன். அது வெற்றி பெறவில்லை. அதன்பின் நடிப்பில் ஈடுபடவில்லை. இளையராஜா இசையமைப்பில் தமிழிலும், மலையாளத்திலும் சில சினிமாப் பாடல்கள் பாடி இருக்கிறேன். அந்தப் படங்கள் வெற்றி பெறாமல் போனதால், பாடல்கள் பிரபலமடையவில்லை. கனடாவில் ஒரு புராஜக்ட், பாரதியார் பாடல்கள் நடன நிகழ்ச்சி போன்றவற்றுக்கு இசையமைத்து பாராட்டுப் பெற்றிருக்கிறேன். சினிமாவுக்கு இசையமைக்க அழைத்தால் செய்வேன். ஆனால், என் பாணி, முழுக்க முழுக்க மெலடி. இன்றைய கமர்ஷியல் சினிமாவுக்குச் சரிப்படுமா?"

"உங்களுக்கு, நடத்தப்பட்ட பாராட்டு



• பொன் விழா புன்னகை...

விழா அழைப்பிதழில், உங்களைப் பற்றி ஒரு வடமொழி ஸ்தோத்திரம். அதில், 'சங்கீத ஸாகரம் இவருக்குக் குளம்படி நீர்போல' என்று ஒரு வரி!... இது அபஸ்வரமாக ஒலிக்கவில்லையா? கலையைக் காட்டிலும் கலைஞன் உயர்ந்தவனா?"

"நீங்கள் சொல்வது முற்றிலும் சரி! கலைஞனைவிட கலைதான் பெரிது! இந்தப் பாராட்டு விழாவுக்கு எனது சிஷ்யர்கள் முன்னின்று எல்லா ஏற்பாடுகளையும் நடத்தினார்கள். பல விஷயங்கள் எனக்கு சஸ்பென்ஸ் ஆக இருக்க வேண்டும் என்று சொல்லி, அவர்களாகவே செய்தனர். அழைப்பிதழில் அந்த வரிகளைப் பார்த்துவிட்டு, "இப்படி எல்லாம் ஏன் போட்டீர்கள்?" என்று கடிந்து கொண்டேன். 'நீங்கள் உங்களிடம் உள்ள கலையைப் பற்றி அப்படி நினைக்காமல் இருக்கலாம். ஆனால் அந்த ஸ்லோக வரிகள் எங்களுடைய கருத்து. எங்கள் சென்டிமெண்ட்டை நீங்கள் ஆட்சேபிக்காதீர்கள்!" என்று சொல்லி விட்டார்கள். நான் இப்போதும் சொல்கிறேன். கலைஞனை விட, கலைதான் பெரிது."

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

பாரதியார் ஒவ்வொரு நாளும் மாலையில் கொஞ்சம் இருட்டிய பின்னே, ஸ்ரீ அரவிந்தர் இல்லம் செல்வது வழக்கம். ஸ்ரீ அரவிந்தர் மாலை சுமார் ஏழு மணிக்குப் பிறகே தம் அறையை விட்டு வெளியே வந்து நண்பர்களை வரவேற்பது வழக்கம். இவர்கள் இரவில் கூடித் தங்களுக்குள் பேசாத விஷயமே கிடையாதாம். இலக்கியம், சமூகம், அரசியல், பலவித கலைகள், கதை, கேலி முதலிய... முதலிய...! பாரதி முதலானோர் இரவு எட்டரை, ஒன்பது மணிக்கு வீடு திரும்பும்போது, ஏதோ திவ்ய சம்பத்தின் ஓர் அம்சத்தை அவரவர் தகுதிக்கேற்றவாறு தத்தம் உள்ளத்தில் கனிவோடு ஏந்திச் சென்றதாகக் கேட்டிருக்கிறேன். இவர்கள் கண்ணுக்கு மறுநாள் காலையில் தங்கள் மாறுதலடைந்த உள்ளும் புறமும் போன்றே வெளி உலகும் மாறுதலடைந்து காணப்படுமாம். வெகு காலம் பொறுத்த பிறகே, மேலே கூறிய இரகசியானுபவம் எனக்கும் ஒரு சிறிது உண்டாயிற்று.



(ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அரவிந்த ஆசிரம நிர்வாகியாகப் பணியாற்றிய அமிர்தா என்கிற அமரர் அமுதன் எழுதிய 'அரவிந்த தரிசனம்' என்னும் நூலிலிருந்து)

மலர்ந்தது அரவிந்த மலர்!

திருப்பூர் கிருஷ்ணன்



உலகில் ஞானிகளும் மகான்களும் தோன்றும் தலங்களுக்குக் கூட ஒரு தனி மகத்துவம் உண்டு. அன்பால் உலகையெல்லாம் அரவணைத்த ஏகபிரான், ஏன் ஒரு குடிசையில் அவதரிக்க வேண்டும்?

'ஆசையறுமின்கள்
ஆசையறுமின்கள்
ஈசனோடாயினும்
ஆசையறுமின்கள்
ஆசைப்படப்பட
ஆய்வரும் துன்பம்
ஆசை விடவிட
ஆனந்தமாமே'

என்ற திருமூலர் தத்துவத்தின் சாரத்தை, 'ஆசையே துன்பத்திற்குக் காரணம்' என அறிவித்த புத்த பெருமான், ஏன் அரண்மனையில் பிறக்க வேண்டும்?

ராமன் பிறந்தபோது ஆடிய தொட்டியில் தங்கச் சங்கிலிகள். கண்ணன் அவதரித்தபோதோ அவன் தாய் தந்தை கரங்களில் இரும்புச் சங்கிலிகள். ஏன் இந்த முரண்பாடு?

சிறையில் ஏன் கண்ணன் பிறந்தான்: பின்னால் அரவிந்தருக்குச் சிறையிலேயே காட்சி தர ஓர் ஒத்திகை போலவா?

மாளிகையில் ஏன் ராமன் பிறந்தான்: 'மெய்த்திருப் பதம் மேவென்ற போதும் இத்திருத் துறந்து ஏகென்ற போதும் சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரை போன்ற முகத்தோடு, மாளிகையைத் துறந்து கானகம் செல்லும் மனப்பக்குவம் எல்

லோருக்கும் வரவேண்டும் என்று அறிவிக்கவா? அவதார ரகசியங்கள் பல நாம் அறிய இயலாதவை. என்றாலும் ஒன்று சொல்லலாம்; பொருளியல் வாழ்வுக்கும், அருளியல் வாழ்வுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

பன்னிரண்டு ஆழ்வார்களுக்குப் பிறகு தோன்றிய பதிமூன்றாம் ஆழ்வாராகவே பலராலும் கொண்டாடப்படும் பாரதி, சென்னை மத்திய கைலாஸ் ஆலயத்தில் சிலையாய் பூஜிக்கப்படுகிறார். பெரும் பக்தராய் விளங்கிய அந்த மகாகவிக்கு, ஏன் வறுமை மட்டுமே வழங்கப்பட்டது? ஆதிசங்கரர் போன்ற ஒரு மகான், பாரதியின் சமகாலத்தில் பிறந்து உள்ளம் உருகிப் பாட, பாரதியாரின் இல்லத்தில் தங்க நெல்லிக்கனிகள் கொட்டியிருந்தால், பாரதி பொருட்கவலை இல்லாமல் இன்னும் அதிக நாள் வாழ்ந்து அதிகப் பாடல்கள் பாடியிருக்க மாட்டாரா? பரலி க. நெல்லையப்பரைப் போன்ற ஒரு சில உற்ற நண்பர்கள் பாரதியைத் தங்களால் இயன்ற அளவு போஷித்திருக்காவிடில், பாரதி இன்னும் கொஞ்சம் முன்னாலேயே இறந்திருப்பாரோ? கண்ணனை நண்பனாகக் கண்டு பாடிய பாரதி, 'கேட்ட பொழுது பொருள் கொடுப்பான்' என்று



கண்ணன் குணத்தைக் கூறி, அந்த வகையில் தம்மைப் பராமரித்த நண்பர்களுக்கெல்லாம் அல்லவா மறைமுகமாய் நன்றி சொல்கிறார்! பாரதிக்கு அன்றைய சமுதாயம் இழைத்த வஞ்சனையை, 'கொடும் வறுமையை அனுபவித்தால்தான் யதார்த்த உலகின் வெம்மைச் சூட்டில் கவிதை பிறக்கும்' என்று நாம் நியாயப்படுத்துவது சரியா?

ஏறக்குறைய அதே காலகட்டத்தில் பெரும் செல்வ வளத்தோடு வாழ்ந்த (காலமான பிறகு தற்போது தன் தங்கப் பதக்கத்தைக் களவு கொடுத்திருக்கிற) தாகூரும் நோபல் பரிசு பெறும் அளவு மாபெரும் கவியாய் உயர்ந்தாரே, வறுமையே உயர்ந்த கவிதையைப் படைக்கும் என்றால், தாகூர் உன்னதக் கவிதைகளை எழுதியது எப்படி?

இதற்கெல்லாம் விடை திருக்குறளில் இருக்கிறது. 'இருவேறு உலகத்து இயற்கை. திரு வேறு. தெள்ளியராதலும் வேறு.' ஞானிகள் செல்வத்தோடு பிறக்கலாம். செல்வமில்லாமலும் பிறக்கலாம். ஞானச் செல்வத்தின் முன் அவர்களுக்குப் பொருட்செல்வம் ஒரு பொருட்டல்ல.

அரவிந்தர் 1872ம் ஆகஸ்ட் 15ம் தேதியன்று பிறந்தார். செல்வ வளம் நிறைந்த குடும்பம். பொருள் இல்லாதவர்கள் நிர்பந்தத்தின் காரணமாய், பொருட்பற்றைத் துறப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் பொருட் செல்வம் உடையவர்கள் பொருளைப் பொருட்படுத்தாதிருக்கும் உணர்வு வரப் பெறுதல் சற்று சிரமமானது. வாழ்வின் பொருள் என்ன என்று எப்போது ஆராய்ந்து கொண்டிருந்தது அரவிந்தரின் உள்ளம். எனவே, இக உலகப் பொருள் மீது அவருக்குப் பற்றே பிறக்கவில்லை. பற்றற்றான் பற்றினைப் பற்றிக் கொண்டிருந்த அவரது பற்றற்ற மனத்திலிருந்து, பொருட்பற்று விட்டுப்போய் விட்டது.

அருட்செல்வம் ஒரு வேளை அரவிந்தரின் தாய்வழிச் சீதனமோ? அவரது தாய் சுவர்ணலதா தேவி, ஆன்மிக நெறிகளில் நாட்டம் கொண்ட உத்தமி. அது சரி. அவர் அப்படித்தானே இருக்க முடியும்? அரவிந்தரின் தாய் வழித் தாத்தா ஒரு ரிஷி என்றே போற்றப்பட்டவர். மாபெரும் தேசபக்தரும், தெய்வ பக்தருமான ராஜ்நாராயண போஸ் பெயரைச் சொன்னால், அந்தக் காலத்தில் எழுந்து நின்று கும்பிடுவார்களாம். ஆன்மிகமயமாக வாழ்ந்த பெருமகன் அவர். (ரவீந்திரநாத் தாகூரின் தந்தை இவரது நெருங்கிய நண்பர்). அரவிந்தரின் தந்தை டாக்டர் கிருஷ்ண தன கோஷ். தம் பெற்றோருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தார் அரவிந்தர். கல்கத்தாவில் தியேட்டர் சாலையில், டாக்டர் கோஷின் நண்பரான மன்மோகன் கோஷின் இல்லத்தில் பூத்தது ஆன்மிக அரவிந்தம்.

அரவிந்தர் பிறந்த ஊருக்கே ஒரு தனி மகிமை உண்டு. பரமஹம்சர் நடந்த ஊரல்லவா அந்தக் கொல்கத்தா! தட்சிணேசுவரக் காளி தன் ஆலய கோபுரத்தின் மேலேறி நின்று, கங்கை நதியின் தூய நீர்ப் பெருக்கை ரசித்தவாறே கன்னங்கரிய நெடுங்கூந்தலின் ஈரத்தை உலர்த்திக் கொண்டிருந்த காட்சியை நேரில் கண்டவரல்லவா ராமகிருஷ்ணர்! ஆகா! பிரபஞ்சப் பெருவெளியில் அண்டங்களையே பல்லாங்குழியாக்கி, நட்சத்திரச் சோழிகளை உருட்டி அன்னை பராசக்தி விளையாடும் அந்த அலகிலா விளையாட்டு...


"கடவுளை நேரில் பார்த்திருக்கிறீ

அருள்வாக்கு

நவீனத்தில் ஏதோ சௌக்கியம் இருப்பதாக நினைத்து இப்போது அதில் போய் விழுந்திருக்கிறோம். போகப் போக இதைப்பூரணமாக அநுபவித்துவிட்ட பிறகு இதிலே வாழ்க்கை நிறையவே இல்லை, உண்மையில் அசௌக்கியத்தைத்தான் உண்டாக்கிக் கொண்டோம் என்று தெரிந்துதானாக வேண்டும். அமெரிக்காவின் உதாரணம் ஒன்று போதும். அங்கே லௌகிக சௌகரியத்தின் உச்சிக்குப் போயும் ஜனங்களுக்குத் தாங்கள் நிறைவோடு இல்லை என்று ஒரே சூன்ய உணர்ச்சிதான் வந்திருக்கிறது. நவீன சுகானுபவத்தால் வருகிற நிம்மதியின்மையைத் தொலைத்துவிட்டு, மறந்துவிட்டு இருக்க வேண்டும் என்று தவிக்கிறார்கள். புத்திசாலிகளாக இருக்கிறவர்கள் நம்முடைய வேதாந்தம், யோகம், பஜனை இதுகளுக்கு வருகிறார்கள். மற்றவர்களும் எப்படியாவது இந்த

இந்திரிய சுகத்தை மறந்திருக்கிற மட்டும் விசேஷம் என்றே ஏகப்பட்ட மாத்திரைகளை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு அப்படியே தூங்கிக் கொண்டேயிருக்கிறார்கள்.

இந்த ஸ்திதி நம் தேசத்திலும் வரக் கூடியதுதான். லௌகிக சுகத்தில இன்னும் ஏதோ பாக்கியிருக்கிறது என்கிற வரைக்கும் அதையும்தான் பார்த்துவிடுவோமே என்று ஓடிக் கொண்டிருந்தாலும், அப்புறம் கடைசியில் அனுபவித்து ''அடடா, இதுவும் சாசுவதமாகப் பிடித்து வைத்துக் கொள்ள முடியாமல் மறைந்து போகிற சௌக்கியம்தான்'' என்று பிரத்தியட்சமாகத் தெரிந்து விட்டபின், நித்ய சுகத்தைத் தருகிற அத்யாத்ம விஷயங்களுக்கு ஜனங்கள் திரும்பத்தான் நினைப்பார்கள். அப்போது அவர்கள் இது வரை சமூகத்துக்கு நிம்மதியைத் தந்து வந்த பழைய வைதிக மார்க்கத்தையே மறுபடி பூரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறபோது, அவர்களுக்கு வேத அத்யயனம் செய்வதற்கே இடமில்லை என்கிற நிலையில் இந்தத் தலைமுறையைச் சேர்ந்த நாம் சங்கிலியைக் கத்திரித்துப் போட்டிருந்தால் அது எத்தனை பெரிய துரோகம்?



- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

களா?' நரேந்திரரின் கேள்வி.

''பார்த்திருக்கிறேன் குழந்தாய். உன்னையும் பார்க்க வைப்பேன்!'' பரமஹம்சரின் பதில்.

பரிவோடு நரேனின் தலையைத் தொடுகிறார் அவர். கொல்கத்தா சுற்றிச் சுழல்கிறது. அகவிழி கொண்டு நோக்கும் போது, நரேந்திரர் உள்ளத்தில் தேவி பளீர் என்று பிரசன்னமாகிறாள். கோடி சூரியப் பிரகாசத்தோடு கலகலவென்று நகைக்கிறாள் அன்னை. குருதேவரின் ஸ்பரிச தீட்சை மூலம் நரேந்திரர் விவேகானந்தர் ஆனது அப்படித்தான்.

கொல்கத்தாவின் பெருமைகள் ஒன்றா இரண்டா? தியாகத்தையே அணிகலனாய்ப் பூண்டு, பூமியை விடவும் அதிகப் பொறுமை கொண்டு தூய தவ வாழ்வு வாழ்ந்த அன்னை சாரதையின் பட்டுப் பாதங்கள் பட்டுப் பட்டுப் பண்பட்ட மண்ணல்லவா அது?

பின்னாளில் பரமஹம்ச தத்துவங்களாலும், விவேக சிந்தனைகளாலும் ஈர்க்கப் பட்டார் ஸ்ரீ அரவிந்தர். (சிறையில் அரவிந்தர் தனிமையில் தியானம் செய்து கொண்டிருந்தபோது அவரிடம் பேசிய விவேகானந்தரின் குரலை அவர் தெளிவாகக் கேட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார். ''தொடர்ந்து இரு வாரங்கள் அந்தக் குரலைக் கேட்டேன். சிறையின் உள்ளே அவர் வருகையை, என் மெல்லிய மனத்தின் உள் நுண்ணுணர்வால் உணர்ந்தேன். ஆன்மிக அனுபவத்தின் பிரத்யேகமான ஒரு குறிப்பிட்ட துறையைப் பற்றி அந்தக் குரல் என்னிடம் அன்போடு பேசியது. அந்தத் துறையில் சொல்ல வேண்டியதைச் சொல்லி முடித்ததும், அது தன் பேச்சை நிறுத்திக் கொண்டுவிட்டது'' என்று அவர் கூறியுள்ளார்.

அமரத்துவம் அடைந்த பரமஹம்சரிடமிருந்து தம் வாழ்வில் மூன்று முறை முக்கியமான செய்திகளையும் பெற்றதாகவும் அரவிந்தர் குறிப்பிடுகிறார். முதல் முறை ''அரபிந்தோ! ஆலயம் கட்டு. ஆலயம் கட்டு!'' என்றது குருதேவர் குரல். இரண்டாம் முறை சொன்ன செய்தி தெளிவாகத் தெரியவில்லை. என்றாலும் கீழான ஜீவனில் மேலான ஆன்மாவை உருவாக்குவது குறித்த ஆணையாக அது இருந்தது. மூன்றாம் முறை ''உணர்ச்சிகள் அனைத்தையும் துறந்துவிடு'' என்பது குருதேவர் தந்த கடைசிச் செய்தி.

(அமுதம் பெருகும்)



ஜெய்ராம்

உரசினால் தீப்பிடிக்கும் உணர்ச்சிகரமான விஷயம் தேச பக்தி. நமது சினிமா பெருமக்களோ, ஆற்றில் போகும் தண்ணீர்தானே, அப்பாகுடி, அம்மாகுடி என தேசபக்தியை சில்லறை விஷய மாக்கி, ஒரு நூறு சினிமாவுக்கு மேல் எடுத்துத் தள்ளிவிட்டார்கள். தெலுங்கு தேசத்திலிருந்து தமிழ்நாட்டுக்குள் எட்டு வைத்திருக்கும் இளம் இயக்குனர் தேஜா, எல்லோரும் நெல் உலர்த்தும்போது, எலி தன் வாலை உலர்த்தாதா? என்று கேட்டு, தேச பக்தியிலிருந்து நார் உரித்துப் பின்னியிருக்கிறார் கதை.

இந்தியா - பாக். நல்லுறவுக்காக நடத்தப்படும் குத்துச்சண்டைப் போட்டியில் வெல்லும் பாக். வீரர், "இந்தியாவை ஜெயித்து விட்டேன். இதுதாண்டா உண்மையான வெற்றி" என்று ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்குகிறார். விடுவாரா நம்ம ஹீரோ! "அடுத்த ஐம்பத்தாறு நாட்களுக்குள், உன்னை இதே மேடையில் நாக் அவுட் செய்து, என் தாய் நாட்டு மானத்தைக் காக்கிறேன் பார்" என்று ஏட்டிக்குப் போட்டி பின்னை பெற்றவன் போல மார்தட்டிவிட்டு வருகிறார்.

இதில் என்ன ஸ்பெஷல் என்கிறீர்களா? ஹீரோ ஜெய்ராம் இளங்கலை பயிலும் பொடிப் பையன். பாகிஸ்தான் பாக்ஸரோ, நூறு கிலோ புல்டோசர். ஆவின் ஹீரோவுக்கு, பயிற்சி கொடுத்து போட்டிக்குத் தயார்ப்படுத்துகிறார் காதலியின் தந்தை. பாக். வீரர் தரும் குத்துகளில் இரத்த வாந்தி எடுக்கும் ஹீரோ, ஜெயிக்கிறாரா? இல்லையா என்பதை, வயிற்றைக் குமட்டும் வன்முறை கலந்து காட்டுகிறார்கள். தியேட்டரிலோ, கார்கில் போரை நேரில் கண்டமாதிரி வெறிகொண்டு கைதட்டுகிறார்கள் ரசிகர்கள்.

ஆற்ற வேண்டிய கைப்புண்ணாய்க் காட்சி தரும் இந்திய - பாக் பகையுணர்வை, உடல் முழுவதும் பரவிய கேன்சராகக் கருதி, அதீத லேசர் சிகிச்சை தருவதுபோல, உணர்வுகளை மேலும் கிளறிவிடும் தோரணை, பழைய சோற்றில் மறைத்த பூசணிக்காய் மாதிரி வெளியே தெரிகிறது. கல்யாணச் சந்தடியிலே தாலிகட்ட மறந்து விட்டேனே என்று நொண்டிச்சாக்கு சொல்லாமல், ஹீரோ ஜெய்ராமுக்குப் பயிற்சி தருபவரை ஓர் இஸ்லாமியராகக் காட்டி சமாதானப்படுத்துகிறார்கள்.

ஹீரோ குத்துசண்டை கற்றுக் கொள்ளும் பின்னணிக்காக திரைக் கதையை நீட்டி முழக்கி, ராஜா ஏறிய குதிரைக்கு, மேடு பள்ளம் ஏது? என்று பட இடங்களில் லாஜிக் பற்றி கவலைப்படாத இயக்குனர், ஒட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி போலில்லாமல் ஒரே மாலுமியாக, பாக்ஸிங் போட்டியைப் படமாக்கிய விதத்தில் அதை ஹைலைட்டாகத் தூக்கிப் பிடித்து கரை சேர்க்கிறார். எனினும் அவலை நினைத்து இப்படி உரலை இடித்திருக்க வேண்டாம்.

- விஷ்வல்தாசன்

● ஜஸ்ட் பாஸ்

Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358/03-05 Registered as a Newspaper